தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 170 • 06.01.2019

தமிழ்க்கங்கை ஹாட்வெயார் – வண்ணச்சோலை

அனைத்து விதமான கட்டிடப் பொருட்கள், வீட்டு உபயோகப்பொருட்கள் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான ஜக், சுபோலிங் செட், தூண் பெட்டிகள் மற்றும் சட்டிம் வேலைக்குரிய அனைத்துப் பொருட்கள் மிக்ஸர் மெசின் மற்றும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.




021-228553 077-3754703 A9 வீதி, கிளிநொச்சி



## இரவு இரண்டு மணிக்கு பெண் கேட்ட தேசியத் தலைவர்!

## புலிகளிற்கு அடைக்கலம் கொடுத்த ஆபிரிக்க நாடு!

## ஆனைக்கோட்டை குப்பை வீதி!



## 2019 புத்தாண்டு பலன்கள்

## ஏக்கிய ராஜ்ஜிய என்பது ஒற்றையாட்சியா?




# தீவிரமாகும் வெள்ள அரசியல்... மைத்திரி இனி 'டம்மி' அல்ல!

YARL AHI Ice Cream யாழ் அகி ஐஸ்கிறீம்




திருமணநாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும்
ஏனைய விழாக்களுக்கும்
வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarlahi.comஐ பார்வையிடவும்.

இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328


ROYAL FARM
ரோயல் பாம்
✓ பேரன்ஸ்
✓ சேவல்
✓ புறொயிலர்
✓ ஊர்ப்பேடு
மானிப்பாய் வீதி உரும்பிராய் (உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் சந்திக்கு செல்வதற்கு முன்பாக 1km தூரத்தில்)
அனைத்து விதமான கோழி இறைச்சிகளையும் தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்
T.P : 0779229588


New Nelson Learners
நியூ நெல்சன் லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற A தர முதன்மை சாரதிப்பயிற்சி பாடசாலை DS 590
L
பிரதான காரியாலயம்: இல.89, கண்டி வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். T.P: 0212224527, 0777906064, 0773581916
பிரதான வீதி, வல்வெட்டித்துறை. T.P: 0775573711
இல. 127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. T.P: 0771113382
சீரணி சந்தி சண்டிலிப்பாய். T.P: 0777942312



TOPAZ Mall (Pvt) Ltd.
TOPAZ
No.01 Shop in Jaffna
திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றீரியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
மிஸ் குட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் குட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagr@gmail.com
TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933
coustomer is king


TILKO hotels
TILKO
JAFFNA CITY HOTEL
TILKO JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

# 'ஏக்கிய ராஜ்ய' என்பது ஒற்றையாட்சியா?

## சுமந்திரன், ரணில் - யார் கூறுவது சரி?

வை எல் எஸ் ஹமீட்



அண்மையில் பிரதமர் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தபோது 'நாடு "ஒற்றையாட்சித் தன்மையில்" இருந்து மாறுபடாது என்று தெரிவித்ததாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அதே நேரம் திரு சுமந்திரன் அவர்கள் "ஏக்கிய ராஜ்ய" என்பது 'ஒற்றையாட்சி' அல்ல; என்று நூறு தடவைகள் விளங்கப்படுத்திவிட்டதாகவும் ஆனால் தமிழ் ஊடகங்கள் அது 'ஒற்றையாட்சி' என்றே இன்னும் எழுதுவதாகவும் குறைபட்டிருக்கின்றார்.

பிரதமர் தமிழில் 'ஒற்றையாட்சி' என்றா மகாநாயக்க தேரர்களிடம் தெரிவித்திருப்பார்? சிங்களத்தில் 'ஏக்கிய ராஜ்ய' என்றுதான் கூறியிருப்பார். ஏக்கிய ராஜ்ய என்பது ஒற்றையாட்சியில்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

தற்போதைய யாப்பு ஒற்றையாட்சியாகும்என்பதுஎல்லோருக்கும்தெரியும். அதனை சிங்களத்தில் ஏக்கிய ராஜ்ய என்றுதான் எழுதிவைத்திருக்கிறார்கள். அப்படியானால் 'ஏக்கிய ராஜ்ய' என்பது 'ஒற்றையாட்சி' தானே! அந்த அர்த்தத்தில்தானே பிரதமர் மகாநாயக்கர்களிடம் கூறியிருப்பார். எனவே,தமிழ் ஊடகங்கள் தெரிவிப்பது சரிதானே! அவ்வாறாயின் சுமந்திரன் ஏன் மாற்றிக் கூறுகின்றார்?

ஆம், சுமந்திரன் சந்தேகமில்லாமல் மாற்றித்தான் கூறுகின்றார். ஆனாலும் சுமந்திரன் சரியாகவே கூறுகின்றார். தற்போதைய புதிய யாப்பு வ்ரைவதில் முக்கிய பங்காற்றுகின்ற கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்னவும் பிரதமர் கூறுவதுபோல்தான் கூறுகின்றார். எனவே, இதில் உள்ள குழப்பம் என்ன? இதில் நமது எதிர்காலமும் தங்கியிருக்கின்றது. எனவே, இது என்னவென்று நாமும் தெளிவாக அறியவேண்டும்.

**நம்மவர்களில் ஒருவர் பிரதமர் கூறுவதுபோல் இது கார்தான் என்கிறார். இன்னொருவர் 'காரை' நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்கின்றார். ஆனால் எழுதி இருப்பது காரா? பஸ்ஸா? என்று தெரியாமல் அவரும் கையொப்பம் வைத்துவிட்டார். இதுதான் நிலைமை.**

சட்டத்தில் ஒரு சொல்லை வியாக்கியானப்படுத்தல்

சிலநேரம் ஒரு சொல்லுக்குரிய வியாக்கியானத்தை அந்த சட்டத்திலேயே குறிப்பிட்டிருப்பார்கள். அவ்வாறு குறிப்பிடப்பட்டால் அதுதான் அதன் பொருள், அகராதியில் எவ்வாறு இருந்தபோதும்.

மேலே உள்ள குழப்பநிலைக்கு பொருத்தமான ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். சிங்கள மொழியில் 'கார்'என்பதற்கு 'X' என்றும் 'பஸ்' என்பதற்கு 'Y' என்றும் சாதாரணமாக அழைக்கப்படும் எனவும் வைத்துக் கொள்வோம்.

சட்டத்தில் குறிப்பிட்ட ஒருவிடயத்தைச் செய்வதற்கு 'கார்' தான் பாவிக்கப்பட வேண்டும் என்றுதான் இதுவரை இருக்கின்றது. ஆனால் தமிழ் மக்கள் 'கார்' பாவிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. 'பஸ்'தான் 'பாவிக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள்.

அரசாங்கமும் அதற்கு உடன்பட்டுவிட்டது. ஆனால் சிங்கள மக்கள் 'பஸ்' பாவிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.இப்பொழுது அரசாங்கம் ஒரு உத்தியைப் பாவிக்கிறது. அதாவது சிங்கள மொழியிலும் ஆங்கில மொழியிலும் 'கார்' என்பதற்கு சிங்களத்தில் பாவிக்கப்படுகின்ற 'X' என்ற சொல்லையே பாவிக்கின்றது. ஆனால் 'X' என்பது 'சுமார் 60 பேர் செல்லக்கூடிய பெரிய வாகனம்' என்று அதற்குரிய வியாக்கியானத்தையும் அருகே எழுதிவைக்கின்றது.

தற்போதும் சட்டத்தில் 'காரை'க் குறிக்கின்ற 'X' என்ற சொல்லே இருப்பதால்சிங்கள மக்கள் சந்தேகப்பட மாட்டார்கள். நம்பவைக்கலாம் என அரசு எண்ணுகிறது.

சிங்களத்தில் 'காரி' ற்கு 'X' என்ற பாவிக்கபடலாம். ஆனால் ஆங்கிலத்தில் அது 'car' தானே. தற்போதைய சட்டத்திலும் car என்ற சொல்தான் இருக்கின்றது. ஆனால் ஆங்கிலத்தில் car என்று எழுதாமல் அங்கும்'X' என்றசிங்களச்சொல்லையே எழுதி அருகில் 'X' என்பது சுமார் 60 பேர் செல்லக்கூடிய பெரிய வாகனம் என்ற வியாக்கியானத்தையும் எழுதிவைக்கிறார்கள்.

Car என்பதே ஒரு ஆங்கிலச்சொல். ஆங்கிலமொழியில் எழுதும்போது car என்று எழுதாமல் காரைக் குறிக்கின்ற சிங்கள சொல்லான 'X' ஐ எழுதி அது 60பேர் செல்லக்கூடிய பெரிய வாகனம் ஆங்கில மொழியிலும் எழுதிவிட்டு சிங்கள மக்களிடம் சென்று இது கார்தான் என்கிறார்கள்.

சுமந்திரன் கேட்கின்றார் 'பிரதமர் கார் என்றா சொன்னார்?'X' என்றுதான் சிங்களத்தில் சொல்லியிருப்பார். 'X' என்பது கார் இல்லை என்று நூறு தடவைகள் சொல்லிவிட்டேன். தமிழ் ஊடகங்கள் இன்னும் கார் என்றே எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். சிங்களத்தில் 'X' என்பது கார் அல்லது அது பஸ்' என்கின்றார் சுமந்திரன்.

தமிழ் ஊடகங்களோ, சிங்களத்தில் 'X' என்பது கார்தான். அப்படித்தான் தற்போதைய சட்டத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதே அர்த்தத்தில்தான் பிரதமரும் கூறுகின்றார். எனவே, சுமந்திரனின் கதையை எவ்வாறு நம்புவது? என்ற நிலையில் இருக்கின்றன.

இது எதனைக் காட்டுகின்றதென்றால், தமிழ் ஊடகங்களும் அரசியலமைப்பு சபையின் இடைக்கால அறிக்கையை வாசிக்கவில்லை. அவர்களும் வெளியில் பிரதமர் போன்றவர்கள் பேசுவதையே கேட்டு எழுதுகின்றார்கள். அதேநேரம் சிங்கள மக்களும் வாசிக்கமாட்டார்கள். வாசித்தாலும் காரைக் குறிக்கின்ற 'X' என்ற சொல்லே குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர்கள் சந்தேகப்பட மாட்டார்கள் என்று ஆட்சித்தரப்பு நம்புகின்றது.

மறுபுறம் ஆங்கிலத்தில் car என்ற சொல்லைப் பாவித்தால் அதற்கு அருகில் 60 பேர் செல்லக்கூடிய வாகனம் என்று வியாக்கியானம் எழுதினால் சர்வதேச சமூகம் சிரிக்கும். எனவே, சர்வதேச சமூகத்திற்குத் தெரியாத சிங்கள சொல்லான 'X' ஐ ஆங்கிலத்தில் எழுதுகின்றார்கள்.

அதேநேரம் நம்மவர்களில் ஒருவர் பிரதமர் கூறுவதுபோல் இது கார்தான் என்கிறார். இன்னொருவர் 'காரை' நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்கின்றார். ஆனால் எழுதி இருப்பது காரா? பஸ்ஸா? என்று தெரியாமல் அவரும் கையொப்பம் வைத்துவிட்டார். இதுதான் நிலைமை.

இப்பொழுது நேரடி விடயத்திற்கு வருவோம்.

தற்போதைய அரசியலமைப்பில், தமிழில், 'இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சியுடைய அரசாகும்' என்றும், சிங்களத்தில் 'ஶ்ரீலங்கா ஜனரஜய ஏக்கிய ரஜயகி' என்றும், ஆங்கிலத்தில் 'The Republic of Sr Lanka is a Unitary State"'என்றும் எழுதப்பட்டிருக்கின்றது.

இடைக்கால அறிக்கையில் பின்வருமாறு பிரேரிக்கப்பட்டிருக்கின்றது.

'Sri Lanka.....Republic which is an

தொடர்ச்சி 6-ம் பக்கம்...

# ஆசீவகம் எண்ணியல் (Aseevagam-Metrology and Number System)

## எண்ணியல் (Number System)

| 0 | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ |
|---|---|---|---|---|---|---|
| சுழியம் | ஒன்று | இரண்டு | மூன்று | நான்கு | ஐந்து | ஆறு |
| chuliyam | onru | irantu | mūnru | nānku | aintu | āru |
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

| ௭ | ௮ | ௯ | ௰ | ௱ | ௲ |
|---|---|---|---|---|---|
| ஏழு | எட்டு | ஒன்பது | பத்து | நூறு | ஆயிரம் |
| ēlu | ettu | onpatu | paththi | nūru | āyiram |
| 7 | 8 | 9 | 10 | 100 | 1000 |

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனக் கொன்றை வேந்தனில் எதிரொலித்தார் ஔவையார். எண்ணியலை முதலில் வைத்து எழுத்தியலைப் பின்னர்க் குறித்தவாறு முதலில் மனத்தில் எண்ணிய பிறகே எழுத்துப் பிறக்கும் என்க. அவ்வாறு எண்ணுதலான் தானே தோன்றிய எண்ணியலைப் பற்றிப் புகுமுன், பிற எண்ணியலுக்கும், ஆசீவக அறிவர் மரபின் எண்ணியலுக்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டினை அறிய வேண்டியது முதலாம் என்க. கணியன் பூங்குன்றனார், கணக்காயன் தத்தனார், மதுரைக் கணக்காயனார், கணியாதனார், பக்குடுக்கை நன்கணியார், தொல்கணியாதன் என எண்ணற்ற கணக்கியலாளர்கள் (Mathematicians) வாழ்ந்துள்ளனர்.

**கணிதவியல் நூல்கள்**
(Mathematical books)

கணிதவியலைப் பற்றி ஏரம்பம், சினராலயம், கணித இரத்தினம், சிறு கணக்கு முதலிய பல நூல்கள் முன்பு தமிழ் மண்ணில் வாழ்ந்தன. இன்று கணக்கதிகாரம், ஆஸ்த்தான கோலாகலம், கணித தீபிகை ஆகியவை மட்டும் இருக்கின்றன.

**மேல்வாய் இலக்கம், கீழ்வாய் இலக்கம்**
(Positive integers, Negative integers)

கணிதத்துறையில் பழந்தமிழர் ஓங்கித் திகழ்ந்தனர். கணிதத்திற்கு அடிப்படையான எண்களை மேல்வாய் இலக்கம் (ஏறுமுக எண்கள்), கீழ்வாய் இலக்கம் (இறங்குமுக எண்கள்) என்று இரண்டாகப் பிரித்தனர். ஒன்று என்ற எண்ணுக்கு மேற்பட்டது, மேல்வாய் இலக்கம். ஒன்றுக்குக் கீழ்ப்பட்டது கீழ்வாய் இலக்கம்."ஐ, அம், பல் எனவரு உம்" என்று தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவுக்கு (தொல்.எழுத்து. 394) உரை கூறிய உரையாசிரியர்கள் தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்களைச் சொன்னார்கள். நெய்தல், சங்கம், கமலம் முதலிய பேரெண்களைப் பரிபாடலும் குறிப்பிட்டது. இவை எத்தனைக் கோடிகள் என்பது இன்று தெரியவில்லை.

**சுழியம்** (Zero)

உலகம் ஐம்பூதங்கள் கலந்த அணுக்கொள்கையின் அடிப்படை என்று முடிவு கண்ட அறிவர், இந்த அளவையில் இன்மை ஓர் உள் பொருளாகக் கருதப்பட்டதால், இன்மையைக் குறிக்க சுழியம் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. பிற எண்ணியலின் ஏறுமுக இலக்கங்கள் முறையே சுழியத்தில் தொடங்கி (0) உயர் இலக்கங்களைக் குறிக்கும் அவ்வாறே இறங்கு முக இலக்கங்கள் உயர் இலக்கங்களில் தொடங்கிப் படிப்படியாகக் குறைந்து சுழியத்தில் முடியும், அதாவது இலக்கங்களின் கடையிறுதியாகச் சுழியம் குறிக்கப்படும், ஆனால் அறிவர் எண்ணியலிலோ ஒன்று, இரண்டு எனும் இலக்கங்களைப் போல கால், அரை, முக்கால் எனும் வின்னங்களைப் போல "0' சுழியம் என்பதும் ஒரு நிலையே.

சுழியம்என்பதைவெறும்குறியீடாகக் கருதாமல், எண்ணாக முதலில் பாவித்தவர்கள் தமிழர்கள். சுழியம் தமிழில் இருந்தே தோற்றம் பெற்றது என்பார் பேராசிரியர் முனைவர் கு. அரசேந்திரன். இன்மைக்கொள்கை தமிழருடையது. அணுக்கொள்கையில் ஏரணப் பிரிவுகளில் இதுவும் ஒன்று. இதனை

அண்மையின் இன்மையின் எண்மையின்

வன்மையின் அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்

என்ன கிளவியும்

... தொல். செய்யுள் 214.

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். வித்திலிருந்து மரம் உண்டாகிறது. வித்தினைப் பார்க்கும்பொது மரம் தெரியவில்லை. வித்து முளைத்துச் செடியாகும்போது மரம் தெரியவில்லை. வித்து முளைத்துச் செடியான பிறகு வித்தினைப் பார்க்க முடிவதில்லை.

வித்தில் மரம் தெரியாதது இன்னை. அதனால் மரம் இல்லை என்று பொரு கொள்ள முடியாது. இன்மையாகிய பொருள் உள்ள பொருளே. ஆதலால் சுழியத்தின் மதிப்பு கண்ணுக்குப் புலப்படாத உண்மையாயிற்று. இதனைப் பக்குடுக்கை நன்கணியர், கணியாதன் ஆகிய கணியவியல் அறிவர்கள் உலகிற்கு உணர்த்தினர். நாளடைவில் ஆசிவகம் எனப்பட்ட இக்கோட்பாடு சாங்கியம், வைசேடிகம், உலகாயதம் எனும் பெயர்களில் நாலாத் திசையும் பரவிற்று.

பக்குடுக்கை நன்கணியார், கணியாதன் ஆகியோர்க்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த கணியர் மரபில் தோன்றிய தொல்கணியாதன் (Tholkaniyathan)என்பவரே முதன்முதல் இன்மைக் கோட்பாட்டினையும் சுழியத்தையும் வண்டிச்சக்கரத்தின் சுற்றளவு வாய்பாட்டையும் கண்டறிந்தவர் என்பார் பேராசிரியர், இரா.மதிவாணன்.

அணுக்கொள்கையின் உட்பிரிவாகிய இன்மைக்கொள்கை சுழியமாகக் கருதப்பட்டது. இது மெய்யியல் ஓகம், ஊழிகம் (தியானம்) மந்திரம் ஆகிய பழந்தமிழர் நான்மறைக் கொள்கைக்கு வித்தாயிற்று. அறம், பொருள், இன்பம், எனும் முப்பால் பகுப்பு இல்லற வாழ்க்கைக்கும் மெய்யியல் முதலாகிய நான்கும் துறவறக் கோட்பாட்டுக்கும் நிலைக்களங்களாயின.

பக்குடுக்கை நன்கணியாரும் கணியாதனாரும் கண்டறிந்த சிறப்பியம் எனும் ஆசீவக அணுக்கொள்கையை வடநாட்டிலும் பரப்பியதால் மற்கலிகோசலர் இதனை மேலும் விரித்துரைத்தார். வடபுலத்தார் சாங்கியம், யோகம், உலகாயதம் எனும் கோட்பாடுகளை வளர்த்துக்கொள்ளவும் புத்த, சமண சமயத்தார் அணுக்கொள்கையையும் இன்மைக் கோட்பாட்டினையும் அடிப்படையாகக் கொள்ளவும் இது வழி வகுத்தது.

எண் கணிதம் இடையறவின்றிப் பல அடுக்கு எண்களாக வளர இன்மைக்கொள்கையின் புற வடிவமாகிய சுழியம் உதவியது. இதனால் தமிழில் பத்து லட்சத்தைக் குறித்த நெய்தல், கோடியைக் குறித்த குவளை அதன் பன்னூறு மடங்கு அடுக்குகளைக் குறித்த ஆம்பல், தாமரை, வெள்ளம், ஊழி போன்ற பேரெண்கள் மிக எளிதாக உருவாயின.

சுழியத்தின் பயன்பாட்டால் வணிகம், வானநூல் கணிப்பு, கணிதக் கலையின் வளர்ச்சி கட்டடக் கலை, பொறியியல் ஆகிய பல்வகை அறிவியல் வளர்ச்சி விரைவுபட்டது. உலக மக்கள் தமிழரின் சுழியம் கண்டுபிடிப்புக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

அவ்வாறெனின் அறிவர் கணக்கியல் இன்மையைக் குறிக்க எந்த எண்ணுருவைத் தெரிவுசெய்துள்ளது எனும் கேள்வி எழக்கூடும், அறிவர் கணக்கியல் இன்மையைப் "புற்புதம்" எனும் குறியீட்டால் குறித்துள்ளது, "புற்புதம்" என்பது நீர்க்குமிழியைக் குறிக்கும் சொல்லாகவும் பொருள்படும், நீர்க்குமிழி என்பது இன்மையின் பரிமாணத்தினை இயல்பே வரையறுக்கும் காட்டு பொருளாகவும், இன்மை பற்றிய கருதுகோள்களை வரிசைப்படுத்தும் ஒரு எடுகோளாகவும் திகழ்வது வெளிப்படை.

π ( Pi)

வட்டத்தின் விட்டத்தை ஏழு சம கூறாக்கி அதனொடு 4 சமக்கூறுகளைச் சேர்த்து இரண்டால் பெருக்கினால் 7+4=11ஜ்2=22 சமக்கூறுகளாகிய வட்டத்தின் சுற்றளவு கிடைக்கும் என்பது இன்று படிப்பறிவில்லாத தச்சருக்கும் தெரிந்த தலைமுறைத் தொடர்பு அறாத, கலையறிவு. 22/7 என்னும் கணக்கு நுட்பம் குமரிக்கண்டத்துத் தமிழரிடமிருந்தே உலக நாடுகளுக்கும் புரவியுள்ளது.

**அளவைகள்** (METROLOGY)

விரிக்குங்கால், நீரினின்றும் வெளியேறும் காற்றானது குமிழியினை உண்டாக்கும் குமிழி எளிதில் அழியும். அங்கு அதன்நிலை முன்னின்மை, பின்னின்மை, ஒன்றிலொன்றின்மை, முற்றின்மை எனும் அனைத்து இன்மைக் கூறுகளையும் உணர்த்தி நின்றது, இன்மையைப் பேசாத பொருண்மை சிறப்புறாது இன்மைக்கு இலக்கம் கொடுத்து நமது முன்னோர் கணக்கியல் தொடங்குகிறது எனலாம். இவையன்றியும் அளவை முறையினங்கள் முறையே

1. நீட்டலளவை
2. நிறுத்தலளவை
3. பெய்தலளவை
4. முகத்தலளவை
5. எண்ணலளவை
6. உய்த்தலளவை

எனப் பலதிறப்பட்டவாறு கையாளப்பட்டன, அவற்றில் சிலவற்றைக் காண்போம்,

**1. நீட்டலளவை** (units of length)

10 கோன் = 1 நுண்ணணு

10 நுண்ணணு = 1 அணு

8 அணு = 1 தேர்த்துகள்

8 தேர்த்துகள் = 1 ப"சிழை அலலது துசுமபு

8 ப"சிழை = 1 மயிர்அல்ல து மயிர்நுனி

8 மயிர்நுனி = 1 நுண்மணல்

8 நுண்ம ணல் = 1 சிறுகடுகு

8 சிறு கடுகு = 1 எள்

4 எள் = 1 கொள்

8 எள் = 1 நெல்

8 நெல் = 1 விர்றகிடை அல்லது விரல்

12 விரல் = 1 சாண்

2 சாண் = 1 முழம்

4 முழம் = 1 பாகம் அல்ல து கோல்

150 பாகம் = 1 கூப்பிடு

600 பாகம் (4 கூப்பிடு) = 1 காதம் (1200 கெசம்)

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

✎ கருடன்

கருடர் வரும்போது சிறிய பொதியொன்றுடன் வந்தார். என்னவென விசாரிக்க, சிறிய நிவாரணப்பொதியென்றார். ஆச்சரியமாக இருந்தது. கருடருக்கு நிவாரணப் பொதியா?

“கிளிநொச்சி கடந்து வருகிறேன். நிவாரணப் பொருட்களுடன் பலர் வருகிறார்கள். நானும் கையை நீட்டினேன். தந்தார்கள். வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்” என்றார்.

“இது நல்ல வேலையா? பாதிக்கப்பட்டவர்களிற்கு வந்த நிவாரணப் பொருட்களை நீர் வாங்கி வந்திருக்கிறீர். நீரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டீரா?”

“இப்போது வெள்ள நிவாரணம் மட்டும் நடக்கவில்லை. வெள்ள நிவாரண அரசியல்தான் நடக்கிறது. வெள்ளத்தை ஒவ்வொரு தரப்பும் தமது அரசியலுக்காகவே பாவிக்கிறார்கள். அதனால் தப்பில்லை.

வெள்ள அனர்த்தம், நிவாரணத்தின் பின்னால் நிறைய விசயங்கள் உள்ளன. அவற்றையும் சொல்கிறேன். இலங்கையில் 2,500 வருடங்களின் முன்னரே குளங்கள் கட்டப்பட்டு விட்டன. அந்த குளங்களை பராமரித்து, குள பராமரிப்பை பற்றிய ஆழமான அறிவுடன் தென்னிலங்கை பகுதிகளில் குளங்களை நிர்வகித்து வந்துள்ளார்கள். கந்தளாய் போன்ற பெரிய குளங்கள் எல்லாம் வான்பாய்வது வழக்கம். ஆனால் அதனால் இயற்கை அனர்த்தம் ஏற்படுவதில்லை. ஆனால் கிளிநொச்சியில் ஏற்படுகிறது. அதனால் குள அறிவியல் பாரம்பரியமொன்றை நாமும் உருவாக்க வேண்டும்.

இன்னொன்று, குளங்கள் வான் பாயும் போது அருகிலுள்ள தாழ்நிலப் பகுதிகள் ஓரிரு நாள் வெள்ளத்தில் மூழ்குவதுண்டு. இம்முறை, சமூக ஊடக பயன்பாடு அதிகமாக இருந்தது வெள்ள அனர்த்தத்தை ஊதிப்பெருக்க வைத்தது. சமூக ஊடக பரம்பலின் இரண்டு முகமும் வெள்ள அனர்த்தத்தில் தெரிந்தது. ஒரு பக்கம் வெள்ள அனர்த்தம் ஊதிப் பெருப்பிக்கப்பட, இன்னொரு பக்கம் சமூக வலைத்தளங்களின் ஊடாக நிவாரணப்பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இதில் ஒழுங்கு முறை பேணப்படவில்லையென்றாலும், இளைஞர்களின் முன்முயற்சி பாராட்டப்பட வேண்டியது.

அதுபோல, குழப்பத்தின் பின்னர் மீள இயங்க ஆரம்பித்த இலங்கை அரசியலுக்கும் கிளிநொச்சி வெள்ளம் அருமையான வாய்ப்பாக அமைந்து விட்டது. இதை எல்லோரும் ஆன மட்டும் பயன்படுத்துகிறார்கள்.

நன்றாக கவனிக்கவும். இது வெள்ளப்பாதிப்பை குறைத்து மதிப்பிடுவதல்ல. ஆனால், இதற்கு முந்தைய வெள்ளங்கள், வரலாற்றின் அடிப்படையில் இப்போதைய பின்னணியையும் இணைத்து சொல்கிறேன். வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது துரதிஸ்டம் என்றால், அந்த துரதிஸ்டம் இப்போது ஏற்பட்டது ஓரளவு அதிர்ஸ்டம்.”

“எப்படி?”

“அரசியல் குழப்பத்தின் பின்னர் நாடு சுமுகமடைந்த உடன் ஏற்பட்ட அனர்த்தம் இது. புதிய வருடத்தில் குறைந்தது இரண்டு அல்லது மூன்று தேர்தல்களாவது வரும். கடந்தமூன்றரை ஆண்டுகளில் நல்லாட்சி அரசாங்கம் நிறைய அதிருப்தியை சம்பாதித்து விட்டது. உள்ளூராட்சி தேர்தல்களில் அது வெளிப்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீதும் விமர்சனங்கள் எழுந்தன. அரசியல் குழப்பநிலையில் கூட்டமைப்பு எடுத்த முடிவுகளை வாக்காளர்கள் எப்படி பார்க்கிறார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. ஆனால், ஐ.தே.கவை ஆதரித்து கையெழுத்திட்டது உள்ளிட்ட சில விவகாரங்களை உள்ளூரில் எதிர்தரப்பு விமர்சனத்திற்காக கையிலெடுக்கும் என்பது நிச்சயம்.

இந்த சமயத்தில் வெள்ளம் வந்தது, அரசியல் தரப்புக்களிற்கு ஒரு வாய்ப்பு. ஐ.தே.க அரசு தீவிரமாக இயங்கி, கடந்த மூன்றரை வருட விமர்சனங்களை இல்லாமலாக்க விரும்புகிறது. அப்படியென்றால்தான் தமிழ் வாக்குகளை சரி செய்யலாம். ஆட்சியில் தொடர உதவிய, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு செய்யும் பிரதியுபகாரமாகவும் இது அமையும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீதான அண்மைய விமர்சனங்களை குறைக்க, வெள்ள நிவாரணத்தை அந்த கட்சி பாவிக்கிறது.

அதேபோல, அடுத்த தேர்தலில் வாக்காளர்களை கவர, மைத்திரி மஹிந்த அணியும் முயல்கிறது. வெள்ள நிவாரணத்தை நன்றாக கவனித்தீர்கள் என்றால், இரண்டு அரசுகள் இயங்குவ்தை போன்ற தோற்றம் தெரியும். தமிழ் தேசிய கூட்டமைப்புடன், ஐ.தே.க அமைச்சர்கள் நிவாரணப்பணியில் ஈடுபடுகிறார்கள். அதேபோல, ஆளுனர் தலைமையில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் இணைத்து ஜனாதிபதியின் வெள்ள நிவாரணப்பணிகள் நடக்கின்றன. இதனால்தான், வெள்ளம் வந்தது துரதிஸ்டம் என்றாலும், இந்த சூழலில் வந்தது அதிர்ஸ்டம் என்றேன்” என்றார்.

“ஆளுனர் என்றீர்... ஏன் திடீரென ஆளுனர்கள் மாற்றம்?”

“எல்லாம் தேர்தல்தான். நல்லாட்சி அரசு பதவியிலிருந்து போது, இரண்டு கட்சிகளும் கதைத்து பேசி ஆளுனர்களை நியமித்தார்கள். அப்படி நியமிக்கப்பட்ட சிலர் ஐ.தே.கவிற்கு ஆதரவாக செயற்படுவதாக சுதந்திரக்கட்சியினர் நினைக்கிறார்கள். ஜனாதிபதி வெளிநாடு செல்வதற்கு முன்னர் கட்சி அமைப்பாளர்களை சந்தித்தார். அப்போது, அமைப்பாளர்கள் பலர் ஆளுனர்களை பற்றி குற்றம்சாட்டியுள்ளனர். இதையடுத்தே, இந்த அதிரடி முடிவிற்கு ஜனாதிபதி வந்திருக்கிறார்.


இந்த வருடம் தேர்தல் வருடமென்பதால், சுதந்திரக்கட்சிக்கு சாதகமான ஆளுனர்கள் பதவியிலிருக்க வேண்டுமென கட்சி முக்கியஸ்தர்கள்


தொடர்ச்சி 6-ம் பக்கம்...

# தீவிரமடையும் வெள்ள அரசியல்... மைத்திரி இனி ‘டம்மி’ அல்ல... நாடாளுமன்ற தேர்தலில் குதிக்கும் மூன்று புதிய முகங்கள்!







5-ம் பக்க தொடர்ச்சி...

விரும்புகிறார்கள். இப்பொழுதே நிகழ்வுகளை கவனித்தீர்கள் என்றால் அது தெரியும். முன்னர் வடக்கு கிழக்கு அபிவிருத்தி கூட்டங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள கட்சிகள், தலைவர்கள் அழைக்கப்படுவதில்லை. இப்பொழுது ஆளுனர்கள் தலைமையில் நடக்கும் நிகழ்வுகளில் அவர்கள்தான் முன்னுரிமையளிக்கப்படுகிறார்கள். தேர்தல்கள் வரை இந்த போட்டி நீடிக்கும்"

"சரி, எப்பொழுது தேர்தல் வரும்?"

"அதை உறுதியாக சொல்ல முடியவில்லை. எந்த தேர்தல் முதலில் வருமென்றும் சொல்ல முடியவில்லை. ஆனால் ஜனாதிபதி, நாடாளுமன்றம், மாகாணசபை தேர்தல்கள் இந்த ஆண்டில் நடக்கும். நாடாளுமன்ற தேர்தல் முன்னதாக நடக்கலாம். ஏனென்றால், இந்த அரசு இனி சுமுகமாக இயங்காது. அரசாங்கத்திற்கு எங்கெங்கு எல்லாம் செக் வைக்கலாமோ அதையெல்லாம் ஜனாதிபதி செய்வார்.

ஆர்.பிரேமதாசா மரணமடைந்த போது, டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியானார். ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். டி.பி.விஜயதுங்க ஒரு சம்பிரதாய ஜனாதிபதியாக மட்டுமே இருந்தார். ரணில் விக்கிரமசிங்கதான் முழு நிர்வாகத்தையும், அதிகாரத்தையும் கையில் வைத்திருந்தார். ரணில் காட்டுமிடங்களில், டி.பி கையெழுத்து போட்டு கொடுத்தார் என அப்போது சொல்வார்கள். சந்திரிகா காலத்திலும், மைத்திரி காலத்திலும் அந்த மனநிலையில் ரணில் நடந்து கொண்டதும் பிரச்சனைக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அல்லது, கட்சி மற்றும் அரசியல் மரபு மனநிலை காரணமாக இருந்திருக்கலாம். எது எப்படியோ, இப்போதைய ரணில் அரசுக்கு, இன்னொரு டி.பி.விஜயதுங்காவாக மைத்திரி இருக்கமாட்டார் என்பது மட்டும் நிச்சயம்.

2015ஆம் ஆண்டில் இருந்து 2018 ஒக்ரோபர் இறுதி வரையும் கிட்டத்தட்ட டி.பி பாணியிலேயே மைத்திரி செயற்பட்டார். இனி கடிவாளத்தை அவர் கையிலெடுத்தால், ஐக்கிய தேசிய முன்னணி விரும்பிய வேகத்தில் செயற்பட முடியாது. மூன்று தேர்தல்கள் காத்திருக்கும் சமயத்தில் சரியான நிர்வாகத்தை செய்ய முடியாமல், மக்களிடம் அதிருப்தியை சம்பாதிக்க ஐ.தே.மு விரும்பாது. அதனால் விரைவில் தேர்தல் ஒன்றை நோக்கி செல்வதையே அவர்களும் விரும்புவார்கள். மஹிந்த தரப்பும், தேர்தலை விரும்புகிறது, ஐ.தே.கவும் தேர்தலை விரும்பினால் விரைவில் நாடாளுமன்ற தேர்தல் நடக்கும். ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக்கியபோது, விரைவில் பொதுத்தேர்தலிற்கு செல்வதென்ற உடன்பாடுஎட்டப்பட்டிருந்தது என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்"

"சரி, வடக்கு அரசியல் எப்படியிருக்கிறது?"

"வடக்கில் இந்த வாரம் சூடான விசயங்கள் இல்லை. வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள் சிலர், அடுத்த மாகாணசபை அமையும் வரை ஒரு அமைப்பாக செயற்பட முடிவு செய்துள்ளார்கள். மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டங்களிலும் தம்மை அழைக்க வேண்டுமென இணைத்தலைவர்களிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்கள். இணைத் தலைவர்களாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பிகள் இருப்பதால், அந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வாய்ப்பிருக்கிறது.

அடுத்த வருடம் மாகாணசபை தேர்தல் வருகிறது. செய்திகளிலும், அரங்கிலும் இருக்க வேண்டும் என்பதற்காக மாகாணசபை உறுப்பினர்கள் இந்த முடிவை எடுத்திருக்கலாம். ஏனெனில், மாகாணசபையின் பதவிக்காலம் முடிந்ததன் பின்னர், அவர்கள் யாரும் அரங்கிற்கு அழைக்கப்படுவதில்லை என்ற வருத்தம் எல்லா கட்சிகளின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களிடமும் உள்ளது. இப்படியே போனால், அடுத்த மாகாணசபை தேர்தலில் மக்கள் மறந்து விடுவார்கள் என்ற கவலை அவர்களிற்கு.

வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களில் மூவர் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளார்கள்"

"யாரது?"

"இந்த வாரம் அதை சொல்லவில்லை. இந்த வாரம் நிறைய பேசிவிட்டேன். அடுத்த வாரம் சொல்கிறேன்" என்றபடி கருடர் பறந்து சென்றார். ●


3-ம் பக்க தொடர்ச்சி...

aekiya rajyaya/ Orumitha nadu, consisting of institutions of the Centre and of the Provinces....'

இதன் பொருள் 'இலங்கைக் குடியரசு என்பது மத்தியினதும் மாகாணத்தினதும் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு ஏக்கிய ராஜயாய/ ஒருமித்த நாடாகும்.

இங்கு 'நிறுவனம்' என்பது சாதாரண நிறுவனமல்ல. அரசதுறைகளாகும். ஒற்றையாட்சி என்பதன் பொருள் ஒரு அரசாங்கம் என்பதாகும். அதாவது மத்தியில் இருப்பது மாத்திரம்தான் அரசாங்கம். எனவே, ஒற்றையாட்சி என்பது மத்திக்கு உரிய நிறுவனங்களை ( சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறை) மாத்திரம்தான் உள்ளடக்கும். மாகாணத்தில் இருப்பவை 'உப' அந்தஸ்த்தில் இருப்பவை. அவை மத்திய நிறுவனங்களுடன் இணையாக கொண்டுவரமுடியாது.

இங்கு இலங்கைக்குடியரசு மத்திய, மாகாண நிறுவனங்களை உள்ளடக்கியது என்று கூறுவதன்மூலம் மத்திய அரசும் மாகாண அரசும் சமாந்தர நிலைக்கு கொண்டுவரப்படுகின்றது. இதுதான் 'சமஷ்டி'யின் வெளிப்படையான அடையாளமாகும். ஆனால் சமஷ்டி என்ற சொல்லை வெளிப்படையாகப் பாவிக்காமல் 'ஏக்கிய ராஜ்ய' என்ற ஒற்றையாட்சியைக் குறிக்கும் சொல்லைப் பாவித்து அதற்கு சமஷ்டிக்குரிய மத்தியும் மாகாணமும் ஒரே அந்தஸ்து என்ற தன்மை எவ்வளவு நாசூக்காக கொண்டுவரப்பட்டிருக்கின்றது.



சமஷ்டிக்குரிய சட்டவிளக்கம் தெரியாவிட்டாலும் ஆங்கில பிரதியில் ஏன் ஆங்கிலச் சொல்லான 'Unitary State' என்று குறிப்பிடாமல் சிங்களச் சொல்லான ஏக்கிய ராஜ்ய குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சாதாரண சிங்கள, முஸ்லிம் மக்கள் சிந்திக்கமாட்டார்களா?

அதேநேரம் தமிழர்களைத் திருப்திப் படுத்த 'ஒருமித்த நாடு' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒன்று என்றால் 'ஒருமித்தல்' என்ற ஒரு விடயம் எழாது. ஒன்றுக்கு மேற்பட்டவை இருக்கும்போதுதான் அவைகள் 'ஒருமித்த' என்றொரு விடயத்தைக் குறிப்பிடலாம்.

இதன்பொருள், 'ஆண்ட சமூகம் ஆள நினைப்பது தவறா?' என்ற அவர்களின் கோசத்தின் பின்னால் உள்ள ஒரு காலத்தில் ஈழம் தனி ராஜ்யமாக இருந்தது. எனவே, அவ்வாறு ஒன்றிற்கு மேற்பட்ட நாடுகளாக இருந்தவை இன்று ஒன்றுபட்டு ஒருமித்த நாடாக இருக்கின்றது' என்ற அர்த்தத்தில் அந்தசொல் பாவிக்கப்பட்டிருக்கின்றது.

அவர்கள் கோருகின்ற சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்படுமானால் எதிர்காலத்தில் தனிநாடு பிரகடனப் படுத்தப்படுமானால் சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதை 'இந்த ஒருமித்த நாடு' என்பதை இலங்கை அரசு யாப்பிலேயே கொண்டுவர இணங்கியது ஒரு முக்கிய அம்சமாக மாறும்.

அதேநேரம் முஸ்லிம் தலைவர்களும் இந்த இடைக்கால அறிக்கைக்கு கையொப்பம் வைத்ததன் மூலம் தமிழர்களின் இந்த நிலைப்பாட்டை அங்கீகரித்தவர்களாக மாறியிருக்கின்றார்கள். இந்நிலையில் சர்வதேச உதவியுடன் தனிநாடு அமையுமானால் நாங்கள் ஒரு தனித்துவ சமூகமாக வேறாக உரிமை கோருவது சர்வதேச கவனத்தை ஈர்க்காது.

எது எவ்வாறு இருந்தபோதிலும் புதிய அரசியல் யாப்பு அமுலுக்கு வருமோ, இல்லையோ, ஆகக்குறைந்தது ஒரு முழுமையான சமஷ்டி அலகை இடைக்கால அறிக்கையில் அரசின் சம்மதத்துடன் பிரேரிக்க வைத்தது இந்த அரசில் த.தே.கூ இன் சாதனை தான். ஆனால் அந்த இடைக்கால அறிக்கையில் முஸ்லிம்களைப் பாதுகாக்க எதுவுமில்லை இழப்பதற்கு நிறையவே இருக்கின்றது? என்பதைப் புரிந்துகொள்ளாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் சமுகத்தை நினைத்தால்தான் கவலை. ●



# எம்மை சுவாசிக்க விடுங்கள்: நச்சு கலந்து கொள்ளாதீர்கள்!

## ஒரு கிராமத்தின் குமுறல்!

எம்.சியா

“கல்லுண்டாய் வெளிக்காக போராடிய நாம் இன்று எம் வயல் நிலங்களை காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கிறோம்” என்கிற, ஆனைக் கோட்டை மக்களின் ஆதங்கம் வெறும் வார்த்தைகள் அல்ல. வாழ்வதற்கான போராட்டம்.

ஆனைக்கோட்டை ஊடாக கல்லுண்டாய்வெளி சென்று நவாலி வழியாக செல்வதற்கான வழியது. இப்பாதை வழியே கடல் காற்று வீசுவதோடு வயல்வெளிகளின் பசுமை நீண்டு கிடப்பினும், அதனை இரசிக்க மறுக்கும் பாதசாரிகள் மூக்கை பொத்திக்கொண்டு கடக்கின்றனர்.

இது ஒரு தரைவையை ஒத்த வெட்டவெளி வீதியாகும். குடியிருப் புக்கள் இருப்பினும் இந்த நீண்ட பரப்புகளில் சனநடமாட்டம் அவ்வப்போது குறைவதுண்டு. இந்த தருணம் பார்த்து குப்பை வீசும் சுயநலவாதிகள் அவ்விடத்திற்கு வருகிறார்கள் மக்கள்.

ஆடிக்கொருமுறை அல்ல, தினமும் மூக்கைபொத்திக் கொண்டே பாதசாரிகளின் பயணம் அமைகிறது. பாதசாரிகளுக்கேஇந்தநிலமைஎன்றால் அந்த சூழலில் வசிப்பவர்களின் நிலமை என்ன?

ஆனைக்கோட்டை பிரதேசத்தில் வசிக்காத பிற பிரதேசவாசிகள் , தங்களுடைய கழிவுகளை குறித்த பிரதேசத்தின் வயல் வெளிகளில் கொட்டி செல்வது அப்பகுதி மக்க ளிற்கு மிக இடையூறாக இருந்து வருகிறது.

சுவாசிக்கும் காற்று சுத்தமாக் இருக்க வேண்டும். ஆனால் இவர்கள் தினமும் ஒரு அசுத்த காற்றை உள்வாங்குகிறார்கள்.

கோழி ஆடு மற்றும் மாடு போன்றவற்றின் இறைச்சிக் கழிவுகளை மூட்டை மூட்டையாக கட்டி வயல் வெளிகளில் வீசிச்செல்வதால் தினமும் துர்நாற்றம். வயல்கள் பசுமையாக செழித்து நிற்பினும் அந்த விவசா யிகள் சுவாசிப்பது என்னவோ துர்நாற்றத்தை தான்.

இவ்வாறு இறைச்சி எச்சங்கள் மட்டுமின்றி கண்ணாடி போத்தல்கள் பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் பிளாஸ்ரிக் பைகள் என பலதரப்பட்ட கழிவுகள் இவ்வீதியில் உள்ள வயல்வெளிகளில் கொட்டப்படுகிறது.

இவ்விடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டரில்கல்லுண்டாய்வெளியுள்ளது. ஏற்கனவே கல்லுண்டாய் வெளியின் குப்பை மேடு சுவாசத்திற்கு தீங்காக உள்ளதென்றும்இதனால்நவாலிமக்கள் தொற்றுநோய்க்கு ஆளாவதாகவும் கூறி மக்கள் பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். கல்லுண்டாய் வெளியில் குப்பை கொட்டுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் கல்லுண்டாய்வெளி பிரச்சினைக்கே தீர்வு கிடைக்காத நிலையில் வயல்வெளிகளில் குப்பை மேடாவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் பல வயல் நிலங்களை விற்று விட்டதாகவும், முன்னர் போலன்றி வயல் நிலங்களின் விளைச்சல் தன்மை குறைந்து வருவதாகவும் நிலத்தை உழும் போது பலவகை கழிவுகளை தான் பொறுக்க முடிகிறதென்றும் அப்குதி விவ சாயிகள் கூறுகின்றனர்.



மாமிசங்களின் எச்சம் புழுத்துப்போய் தமக்கு சுவாசிக்க நாற்றமாக இருப்பதாக கூறும் மக்கள் அயல் பிரதேச வாசிகள் தம் இடத்தை குப்பை மேடாக கருதக் கூடாதென கோரிக்கை விடுகின்றனர்.

கல்லுண்டாயில் நீண்ட காலமாக மாநகரசபையினால் சேகரிக்கப்படும் யாழ்.மாவட்டத்தின் குப்பைகள் கொட்டப்படுகிறது. இந்நிலையில் குப்பை மேடு அமைந்திருக்கும் சுழலின் வெளியோரங்களில் மக்களும் தமது கழிவுகளை மூட்டைகட்டி வீசும் பழக்கம் நீண்ட நாளாக உள்ள பிரச்சினை.

எனினும் தற்போது குப்பை மேடு ஒரு பாதுகாப்பிற்குள் வந்துவிட்டது. வழக்கை தொடர்ந்து அதன் பராமரிப்பு மற்றும் மீள்சுழற்சிக்கான வேலைப்பாடுகள் இடம்பெற்று வருவதாக கூறப்படுகிறது.

எனவே அவ்விடத்தில் எப்போதும் பாதுகாவலர் நிற்பதால் இடைப் பகுதியில் உள்ள வயலோரங்களில் தமது குப்பை மூட்டைகளை வீசிச்செல்கின்றனர் மக்கள். இந்த குப்பை மூட்டைகளை மாநகரசபை அவ்வப்போது துப்பரவு செய்தாலும் எச்சங்களை அகற்றுவதில்லை.

அண்மையில் கூட இறந்த மாடொன்றை அப்படியே வயலோரத்தில் வீசிசென்றுள்ளனர். துர்நாற்றம் தாங்க முடியாமல் பிரதேச மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து மாநகரசபைக்கு அறிவித்தல் போய் குறித்த மாடு அகற்றப்பட்டதோடு அதனை வீசி சென்றவர்களும் பிடிபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்தும் குப்பைபோடுவது நிறுத்தப்படவில்லை. தொடர்ந்தும் எச்சங்கள் வீசப்படுகிறது.

“விவசாயிகளின் சொத்தாக திகழும் இந்த புமியில் உக்காத குப்பைகளையும் மிரு எச்சங்களையும் வீசி செல்வது மனமற்ற செயலாகும். இதன் விளை வாக விளை நிலங்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. அது மட்டுமின்றி இவ்விடத்தில் கால்நடைகளை மேச்சலுக்கு கட்ட முடியவில்லை. அவை புற்களோடு சேர்த்து பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் ஆகியவற்றையும் உட்கொண்டு விடுகிறன. இது தொடர்பில் பல முறை அதிகாரிகளிடம் அறிவித்தும் தீர்வு கிடைக்கப்பெறவில்லை. இதனால் 600 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி பாதிக்கப்படுகிறது” என்கிறார் விவசாயி காண்டீபன்.

இதேவேளை “காக்கை தீவிற்கு

தொடர்ச்சி 8-ம் பக்கம்...



செல்வதற்கு மீனவர்கள் மற்றும் வேறு பயணிகள் இந்த பாதையை தான் பயன்படுத்துகிறனர். முன்னர் இந்த வீதியில் நடமாட்டம் குறைவு. ஆனால் இப்போது மக்கள் நடமாட்டம் அதிகரித்த வீதியாக உள்ளது. தமது வீட்டு செல்ல பிராணிகள் வளர்க்கும் ஆடு மாடு கோழி செத்தால் அதை கொண்டு வந்து இங்கு தான் வீசுகிறார்கள். அத்தோடு அயல் ஊர்களில் கோழி பண்ணை வைத்திருப்பவர்களுக்கு இவ்விடம் மூட்டை மூட்டையாக கழிவு போடும் இடமாகிவிட்டது. வயல் நிலங்களில் வீசுகிறோமே என்ற சிறிதளவு அச்சமுமின்றி வீதியில் போவதாய் போல் சென்று திடீரென மூட்டையை வீசிவிட்டு வேகமாக சென்று விடுகிறார்கள்.

மோட்டார் சைக்கிள்களில் வந்தே குப்பைகளை வீசிசெல்கிறார்கள். மக்களின் கைகளில் பிடிபடாதவாறு. இவ்வாறு களவு செய்யு தப்பிப் பவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனை கொடுக்க வேண்டும். எமக்கு தினமும் துர்நாற்றம் தான். வயலில் வேலை செய்ய முடியாதளவு துர்நாற்றம் வீசும். வீடுகள் வரைக்கும் துர்நாற்றம். எமது குழந்தைகள் இந்த நச்சு சுவாசத்தை உள்வாங்குகிறார்கள். இப்படியிருக்கையில் இவ்விடத்தில் வசிப்பவர்களைபற்றி கவலை கொள்ளாது கழிவுகளை வீசிசெல் பவர்கள் மீது அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார்" ரஞ் சிதகுமார் துஸ்யந்தி.

**செத்த கோழி கழிவுகள் ஆடு மாட்டு கழிவுகள் இருப்பு மற்று பழுதடைந்த இயந்திர பொருட்கள் பிளாஸ்ரிக் பொலுத்தீன் கழிவுகள் என்று அனைத்தும் இங்கு தான் வீசப்படுகிறது**

அத்தோடு இவ்வுரில் நீண்டகாலமாக விவசாயம் செய்துவரும் விவசாயி சுரேஸ்குமாரிடம் கேட்டபோது,

"இத் விவசாய நிலம். குப்பை போடுவதற்கான இடமல்ல. இங்கு எமது பிரதேசவாசிகள் குப்பை போடவில்ல. அயல் பிரதேசத்திலிருந்து கல்லுண்டாய் வெளிக்குள் தமது கழிவுகளை வீசிசெல்ல வருபவர்கள் இடைவளியிலேயே இவ்விடத்தில் வீசிவிட்டு செல்கிறனர்.

இவ்வாறு கொட்டப்படும் கழிவு களை மர்நகரசபை பார்த்து தப்பரவு செய்தாலும் தினமும் கொட்டப் படுவதால் அவர்களாலும் தொடர்து கழிவகற்ற முடிவதில்லை.

சிறிதவு குப்பை என்றால் பிரச்சினை அல்ல. ஆனால் கொட்டப்படும் குப்பைகள் மூட்டை மூட்டையாக இருக்கும். செத்த கோழி கழிவுகள் ஆடு மாட்டு கழிவுகள் இருப்பு மற்று பழுதடைந்த இயந்திர பொருட்கள் பிளாஸ்ரிக் பொலுத்தீன் கழிவுகள் என்று அனைத்தும் இங்கு தான் வீசப்படுகிறது.

இரும்பு பொருட்களை இரும்பு மீள்சுழற்சியாளர்கள் பொறுக்கி விடு வார்கள். பிளாஸ்ரிக்கும் பெரிதள வில் உள்ளவற்றை அவர்கள் எடுத்து விடுவார்கள். உடைந்த பிளாஸ்ரிக் மற்றும்போத்தல்கள் வயலுக்குள் கிடந்து உழுழ் போது மேலே வரும். அத்தோடு வயல் வேலை செய்பவர்களுக்கும் காயங்களைஏற்படுத்துகிறது. அதுமட்டு மன்றி விவசாயம் பெருமளவில் பாதிக்கப்படுவதோடு. சுவாசிக்க முடியவில்லை. ஒரே துர்நாற்றம். இதனால் பாதிக்கப்படுவது எமது பிள்ளைகள் தான். அவர்களின் எதிர்காலம் தான். இப்படியே நடக்குமாயின் வயல் நிலங்கள் குப்பை மேட்டு நிலங்களாகி மண் விவசாய தன்மையை இழந்து விடும். அத் பின்னர் இந்த ஊர் நம்பியிருக்கும் தொழிலுக்கு தான் அழிவு. எனவே தயவு செய்து உங்கள் கழிவுகளை முறைப்படு அகற்றுங்கள். எங்கள் புமியை சீர்கெடுக்காதீர்கள்" என்றார்.

இது அந்த மக்களின் இன்றைய கோரிக்கையல்ல. நீண்டகாலமாகவே இந்த கோரிக்கையை விடுத்து வருகி றார்கள். குப்பைகள் கொட்டப்படுவது நின்றபாடில்லை. கொட்டப்பட்ட குப்பைகளை அகற்றாத நிர்வாகத்தில் குற்றம் சொல்வதா... பொதுஇடத்தில் குப்பை கொட்டுகிறோம் என்ற சிறிய சமூக அக்கறையுமற்று மந்தைகளாக செயற்படும் மக்களை குற்றம் சொல்வதா?






# தீபம்

**தொடர்புகளிற்கு** ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0771989445 அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

35/5, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்



# “அறமதைப் பெருக்கிய அவதார வித்தககியே அன்னை” தங்கம்மா அப்பாக்குட்டி

கே. எஸ். சிவஞானராஜா

அகிலத்தில் சைவசம்யத்தின் அடையாளமாக விளங்குவது யாழ்ப்பாணமாகும். கந்தபுராணத்தின் பேறாக விளங்குவது யாழ்ப்பாண மாகும். அத்தகு மேன்மை கொள் சைவ நீதி பிரகாசிக்கும் வடபகுதியிலே, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குப் பின்பு, சைவ சமயத்தினை நிலைநாட்டி, அறமதைப் பெருக்கிய அவதார வித்தகியே அன்னை, சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார்.

சிவப்பாரம்பரியமும் தமிழ் கலாச் சாரமும் பொலிந்த அப்பாக்குட்டி தையற்பிள்ளை தம்பதிகளுக்குத் தெய்வாம்சம் நிறைந்த புத்திரியாக, 1995 ஜனவரி மாதம் ஏழாம் திகதி அவதரித்தார்.

நாளொரு வண்ணமும், பொழு தொரு மேனியுமாகப் பிரகாசித்து வளர்ந்தார். அழகான உறுப்பெழுத்தும், அறுத்து உறுத்தான தமிழ் பேச்சும், உடைநடை பாவனையும், அரிவரி வகுப்பிலிருந்து பண்டிதர் பரீட்சை வரை முதன்மையாக்கிற்று. பேச்சுப் போட்டிகள் தேவார திருவாசக கோலம் நாடக கவிதை போட்டிகளில் முதலிடத்தையே தமதாக்கும் திறமையினால் கிராமம் பிரதேசம் மாவட்டம் தேசியம் என இவரை நாடே நன்கறிந்தது.

பெற்றோர்களின் மண்வாசனை மல்லாகம் தெல்லிப்பளையில் வரமாக அமைய தனது பதினெட்டாம் பிரயமான 1943 இல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலே வழங்கப்பெற்ற பெண்கள் ஆசிரிய பயிற்சியில் விஷேட சித்தி பெற்று ஒரு. பயிற்றப்பட்ட சிறந்த ஆசிரியையாகி மட்டக்களப்பில் நியமனம் பெற்றார். கிறிஸ்தவ முஸ்லிம் இந்து பாடசாலைகளிலும் இலங்கையின் தலை நகரிலும் சிறந்தஆசிரியப் பணியாற்றி மாற்றம் பெற்று ஊருக்குப் திரும்பினார்.

அளவெட்டி சதானந்தா வித்திய சாலையிலும் நிறைவாக தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் பணிபுரிந்து சைவ கலாச்சார விழுமியம் பேணும் ஒரு சமூகப்பாரம்பரியத்தை இலங்கையில். உருவாக்கி தமிழ் மக்களின் மந்திரமானார். இலங்கை வானொலியிலும் ஆலயங்களிலும் இவரது நாவன்மை ஒளிரக் கேட்ட மக்கள் இவருடைய தமிழின் இனிமையிலும் பெரியபுராண கந்தபுராண உபந்தியாசத்திலும் மெய் மறந்து பரவசத்திலும் பக்தியிலும் ஆழ்ந்தனர்.

1953 இல் பண்டிதப்புலமையும்

1958 இல் சைவப்புலவர் மாண்பும்

1957.1958 இல் வானொலி உபந்தியாசமும்

1965 இல் சிதம்பர பேருரையும்

அதே ஆண்டுகாலப்பகுதியில் அண்ணாமலைப் பல்கலைக்கழக “சிலம்பு” என்ற சிறப்புரையும் யாழ் மண்ணுக்கு வரமும் கரமும் சேர்த்ததனால் அன்னை தங்கம்மா தெய்வீக ஒளி வீசும்படியாக காரைநகர் மண் சிவத்தமிழ்ச் செல்வியாக அவரைபட பேறாக்கியது.

இதனிடையே அன்னையை யாதுமாகி விளங்கும் தெல்லியூர் துர்க்கா தேவி ஆலயம் கரங்கூப்பி 1961 இல் வரவழைத்த போது திருப்பணிச் சபை உறுப்பினரானார். 1966 இல் அறங்காவல் சபையில் இனைந்து ஆலயத்தின் பொறுப்பு வாய்ந்த தனாதிகாரியாகப் பொறுப்பேற்றார். ஒவ்வொரு சதமும் அவம் போகாமல் தவமாகப் போற்றிடவும் திருப்பணி ஆற்றப்படவும் தொண்டாற்றினார்.

சமயம் என்பது சாதனை என்பதனை தொண்டின் மூலமாகச் செப்புதல் செய்தார். மக்கள்

கண்ணே துயின்று அவமே
காலத்தைப் போக்காது இந்த
மண்ணில் நல்ல வண்ணம் வாழவும்
விண்ணவரும் இறங்கிக் கரங்கூப்பும்
படியாகவும் எண்ணிறந்த திருப்பணிகளை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் பொலிந்திட விதி சமைத்து வழிபுரிந்தார். வளம் தேடினார்.

**தவப்பயன்**

மற்றுப் பற்றெனக்கு இன்றி நின் திருப்பாதமே
மனம்பாவித்த பேறதனால்
அம்பாள் அன்னையைத் தன் அபயகரத்தினால்
அரவணைத்துப் பேறாக்கினால்.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் தொண்டரல்லாத பொய் மையாளரைப் பார்டிப்புகழாத நடுநிலை வாக்கதனால் அவரது திருவாக்கு அருள்வாக்ககாகிற்று.

1966 இல் மதுரை ஆதினத்தில்செஞ் சொற் செம்மணி பட்டமும்

1973 இல் துர்க்காதேவி தேஸ்தானம் துர்க்கா நிரந்தரி பட்டமும்

1974 இல் “திருவாசகக் கொண்டல்” என்ற பட்டம் திருவாசக விழா விலும்“நல்ல பெண்மணி” என்ற விருது

1981 இல்சைவ சித்தாந்த பெரு விழாவிலும்

1982 இல் சமாதான நீதவான் பதவியும்

1988 இல் கௌரவ கலாநிதிப் பட்டமும்

2005 இல் தெய்வத்திருமகள் விருதும் அதே ஆண்டு உலக இந்து சமய விருதும் அன்னையைப் பெருமைபபடுத்தியது.

1977 இல் சிவத்தமிழ்ச் செல்வி ஆலயத் தலைமைப் பொறுப்பேற்றதிலிருந்து அவர் சிவபதம் அடையும் வரையான 15.06.2008 வரை ஆயிரமாயிரம் திருப் பணிகளை அங்குல அங்குலமாக நிறைவேற்றி துர்க்காபுரத்தைத் தேவ ர்களுப் வந்து வணங்கும் படியாகப் பொற்கோவிலாக்கினர்ர்.

கருவறை தொடக்கம் திருவீதிவரை ஒவ்வொருகுறுமண்ணும் அன்னையின் புகழ் பாடும்படியாக நிர்வாகசபை வரலாறு படைக்கின்றது.

1982 இல் அமைக்கப்பட்ட மகளிர் இல்லம் மிகப்பெரிய அற நிலையமாக இன்றும் விளங்குகின்றது. மற்றும் அன்னையின் பெயரால் ஓர் அறக்கட்டளையானது இன்றும் தருமகாரிய உபகாரங்களை உரியவாறு பரோபகாரம் செய்கிறது.

அம்பாளின் அளம்பெருங் கருனையோ அற்புதங்களோடு அதிச யமாகிறது. அகிலத்திற்கு வரம்தரும் ஆதரமாகி விளங்கும் துர்க்கை அம் பாளின் திருவடிகளில் அன்னையின் ஒவ்வொரு திருப்பணிகளும் அறமாகப்பூத்து பேரின்பமாகின்றன. இன்றைய நாள் ஆன்மீகப்பேறுடைய விடுதலை நாளாகும்.

**“பாருக்குள் ஒரு தயாபரி”**

அதிசயிக்கும்படி அறமதைப் பெருக்கிய
அற்புதமான அன்னை
ஆயிரமாயிரம் தர்மங்கள் பேறாக
ஆவன புரிந்த வென்றோர்
விதியென நொந்தவர் வாழவினை மாற்றிய
வித்தகியே தங்கம்மா
வேண்டிய வரங்களைக்கேளுங்கள் தருவாள்
வீர துர்க்கை என்றியம்பினார்
நிதியேது மற்றவர் வழியின்றி அழுபவர்
நெறி காட்டி வரம் சொன்னவர்
நீடித்த தமிழோடு வாடாமல் சைவமும்
நெடுதுயர வழி தந்தவர்
பதிநாடி வருபவர் பசிபோக்கும் பராபரி
பாருக்குள் ஒரு தயாபரி
பாவங்கள் கரைந்தோட பயபக்தி மேலோங்க
பவதாரினி அன்னையானார்.

**07.01.2019 தங்கம்மா அப்பாக்குட்டி யின் பிறந்த தினமாகும். இதை முன்னிட்டு இந்த கட்டுரை வெளியாகிறது.**

---

4-ம் பக்க தொடர்ச்சி...

4 காதம் = 1 யோசனை

**2. நிறுத்தலளவை**

பொன்நிறுத்தல்

8 நெல்எடை = 1 குன்றிமணி

2 குன்றிமணி = 1 மஞ்சாடி

2 மஞ்சாடி = 1 பணவெடை

8 பணவெடை = 1 வராகனெடை

10 பணவெடை = 1 கழஞ்சு

2 கழஞ்சு = 1 கஃசு

4 கஃசு = 1 பலம் அல்லது தொடி

**பண்டங்கள் நிறுத்தல்**



32 குன்றிமணி = 1 வராகனெடை

10 வராகனெடை = 1 பலம்

40 பலம் = 1 வீசை

50 பலம் = 1 தூக்கு

6 வீசை = 1 துலாம்

8 வீசை = 1 மணங்கு

20 மணங்கு = 1 பாரம்

**பெய்தலளவை மற்றும் முகத்தலளவை**

300 நெல் = 1 செவிடு அல்லது சிற்றாழாக்கு

5 செவிடு = 1 ஆழாக்கு அல்லது அரைக்கால்படி

2 ஆழாக்கு = 1 உழக்கு அல்லது காற்படி

2 உழக்கு = 1 உரி அல்லது அரைப்படி

2 உரி = 1 படி

4 படி = 1 மர்க்கால் அல்லது குறுணி

2 குறுணி = 1 பதக்கு

2 பதக்கு = 1 தூணி தொடரும்...




## ஏன்... ஏன்? தெரிவோம்... தெளிவோம்!

# உலகில் வெற்றியடைந்த வயல்வெளி பள்ளி!

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை விவசாயிகளுக்குக் கற்றுத்தருவதற்காக ஆரம்பித்துள்ள இந்த தொடரில், ஐ.பி.எம் (IPM-Integrated Pest Management) தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறோம். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை தொடர்பாக வாசகர்களிற்கு இது புதிய வெளிச்சம் பாய்ச்சுமென நம்புகிறோம்...

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை விவசாயிகளை எப்படிச் சென்றடைகிறது?**

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை என்பது, 'சீசன் ஒன் டிரெயினிங் புரோகிராம்'. அதாவது அந்தந்தப் பருவம் முழுவதும் நடக்கக்கூடிய ஒரு பயிற்சி. உலக உணவு மற்றும் வேளாண் கழகம், பலநாட்டு அரசுகளுடன் இணைந்து, அந்தந்த நாட்டில் உள்ள வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கும், அரசு சாரா நிறுவனங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கும் விதைப்பு முதல் அறுவடை மற்றும் அறுவடைபின்சார் தொழில்நுட்பங்கள் வரையிலான தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொடுக்கிறது. இந்தப் பயிற்சிக்கு அதிகபட்சம் 40 நபர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இப்படிப் பயிற்சி எடுத்துக் கொள்பவர்களுக்கு, ஐந்து ஏக்கர் நிலம் ஒதுக்கித் தரப்படும். அதில் ஒரு ஏக்கர் நிலத்தில் அந்தப் பகுதியில் வழக்கமாகச் செயல்படுத்தும் வேளாண் யுக்திகளைக் கொண்டு விவசாயம் செய்ய வேண்டும். இன்னொரு ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையிலான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திச் சாகுபடி செய்ய வேண்டும். இந்த இரண்டு நிலங்கள் முதலும், கடைசியுமாக இருக்கும். இவற்றுக்கு இடையில் உள்ள மூன்று ஏக்கர் நிலம், பாதுகாக்கப்பட்ட பகுதியாக இருக்கும். இதுதான் இரண்டு நிலங்களையும் பிரித்து வைக்கும். இடையிலுள்ள இந்த மூன்று ஏக்கர் நிலத்தைப் பயிற்சியாளர்கள் சோதனைக்களமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

தினமும் காலையில் மூன்று மணி நேரம், பயிற்சியாளர்கள் வயலில் இருக்க வேண்டும். கேள்வி கேட்கும் முறைப்படிதான் பயிற்சி வழங்கப்படும். தினமும் பயிற்சியாளர்கள் வயலில் உள்ள பூச்சிகளைப் பற்றிக் குறிப்பெடுப்பார்கள். பூச்சி, பயிரின் எந்தப் பகுதியில் அமர்ந்திருந்தது, இலையைச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததா அல்லது மற்ற பூச்சியைச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததா என ஒவ்வொரு செயல்பாட்டையும் வைத்து விளக்கம் அளிக்கப்படும். இப்படிப் பயிற்சி எடுத்துக் கொண்டவர்கள், 'வழிகாட்டும் பயிற்றுநர்கள்' என அழைக்கப்படுகிறார்கள்.

இந்த வழிகாட்டும் பயிற்றுநர்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்ப்பார்கள். அதற்காகத் தொடங்கப்பட்ட திட்டம்தான் உழவர் வயல்வெளிப் பள்ளி.

**உழவர் வயல்வெளி பள்ளி என்றால் என்ன?**

ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் திட்டம் இது. வழிகாட்டும் பயிற்றுநர்கள், அவர்கள் பணிசெய்யும் பகுதிகளில் முப்பது முதல் நாற்பது விவசாயிகளை ஒருங்கிணைப்பார்கள். உழவர்களுக்கு வயல்வெளிதானே பல்கலைக்கழகம். எனவே உழவர்களின் வயலையே பாடசாலையாக்கி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொடுப்பார்கள். இதற்காக அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் நிலத்தைப் பரிசோதனை வயலாகத் தேர்ந்தெடுத்து, அதில் ஐ.பி.எம் முறை விவசாயம் செயல்படுத்தப்படும். 40 நபர்கள் உள்ள ஒரு குழுவை ஆறு நபர்கள் கொண்ட சிறுசிறு குழுக்களாகப் பிரிப்பார்கள்.

இந்தக் குழுக்கள் தினமும் காலை ஏழு மணிக்கு வயலில் இருக்க வேண்டும். ஏனெனில் அதிகாலை சூரிய உதயத்தின் போதும், மாலையில் சூரியன் மறையும் போதும்தான் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். பயிற்சியில் முதல் முறையாக வயல்வெளி ஆய்வில் ஈடுபடக் கற்றுக்கொடுப்பார்கள். வயலில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து பத்து செடிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் அனைத்துப் பாகங்களிலும் உள்ள பூச்சிகளை ஆராய்வார்கள். மண்ணை ஆய்வு செய்வார்கள். செடியில் தீமை செய்யும் பூச்சிகள் இருந்தால் அதனால், என்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை ஆராய்வார்கள்.

இந்தக் குழுக்கள் வயல்வெளி ஆய்வை முடித்த பிறகு, அருகிலுள்ள வகுப்புகள் நடக்கும் இடத்தில் அமர்ந்து தாளில் செடி, அதில் பூச்சி அமர்ந்திருந்த இடம், பூச்சிகளின் படங்கள், பாதிப்பு என அனைத்தையும் படமாக வரைவார்கள். அதை வைத்து விவாதிப்பார்கள். அதன் பிறகு, அந்த வாரம் அவர்கள் எடுக்க வேண்டிய முடிவுகளை எழுதுவார்கள்.




முக்கியமாக, வயலில் உள்ள நன்மை செய்யும் பூச்சி, தீமை செய்யும் பூச்சி, மண்ணின் தன்மை, காலச் சூழ்நிலை, பயிரின் வளர்ச்சி நிலை என அனைத்தையும் ஆராய்ந்து, தீர்க்கமான முடிவுகளை எடுத்துச் செயல்படுத்துவார்கள். அதுதான் உழவர் வயல்வெளி பள்ளியின் முக்கியப் பயிற்சி. முக்கியமாக, இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் உழவர்களுக்குப் பூச்சிக் கொல்லி தெளிப்பதற்கு எதிரான மனநிலையை உருவாக்குவதுதான் இதன் நோக்கம்.

வயலில் உள்ள பூச்சிகள் எல்லாமே தீமை செய்யும் பூச்சிகள் என்ற மனநிலைதான் விவசாயிகளிடம் உருவாகியிருக்கிறது. அதனால்தான், பூச்சிக் கொல்லிகளைத் தெளிக்கிறார்கள். ஆனால், நன்மை செய்யும் பூச்சிகளும் வயலில் இருக்கின்றன. பூச்சிக்கொல்லி தெளிக்கும் போது நன்மை செய்யும் பூச்சிகளும் இறந்து விடுகின்றன என்பதை இந்தப் பயிற்சி வகுப்பின் மூலமாக அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்கிறார்கள். இதுவரை நாம் பார்த்தது, கேட்டது அனைத்தும் தவறானது என்பதை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

வி.ராமசுப்பிரமணியன்
தொற்றுநோய் சிறப்பு மருத்துவர்







# தொற்று நோய்களின் உலகம்!

கொத்துக் கொத்தாக உயிர்ப் பலி வாங்கிய பல தொற்று நோய்களை இன்று பெருமளவு ஒழித்து விட்டோம். ஆனாலும், முற்றிலுமாக அவை ஒழிந்துவிடவில்லை. அவ்வப் போது புதிது புதிதாக வெவ்வேறு தன்மைகளோடு அவை மனிதகுலத்தை தாக்கிக் கொண்டேதான் இருக்கின் றன. இன்று மருத்துவ உலகில் பெருமளவு முன்னேற்றங்கள் வந்துவிட்டன. நாளுக்கு நாள், வந்து கொண்டும் இருக்கின்றன. அடுத்த நூறாண்டுகளுக்கு மனிதர்களுக்குச் சவாலாக விளங்கப்போகும் தொற்று நோய்களுக்காகப் பல நூறு ஆராய்ச் சியாளர்கள் இதோ இந்த நிமிடத்திலும் சோதனைக்கூடத்தில் அமர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உலகில் ஏதேனும் ஒரு மூலையில் புதிதாக ஒரு தொற்றுநோய் தாக்குகிறது என்றால் அடுத்த சில நாள்களில் அந்த நோய்க்குக் காரணமான கிருமியைக் கண்டறிந்து அதை அழிக்கும் மருந்தையும் கண்டுபிடித்து விட முடிகிறது. இந்த முன்னேற்றமெல்லாம் ஒரே நாளில் நடந்துவிடவில்லை. பல நூறாண்டு கால ஆராய்ச்சியின் விளைவு.

கொலரா, பிளேக் போன்ற தொற்றுநோய்களுக்குக் காரணம், கிருமிகள் தான் என்பதை 1800ம் ஆண்டுகளுக்குமுன்புவரை மனிதகுலம் அறிந்திருக்கவில்லை. கொலரா, பிளேக் போன்ற தொற்றுநோய்களெல்லாம் கெட்ட காற்று காரணமாகவும், முன்னோர் சாபம் காரணமாகவுமே பரவுகின்றன என்று நம்பினார்கள்.



மைக்ரோஸ்கோப் (microscope) கண்டு பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தகுந்த ஒரு முன்னேற்றம். 1590 முதல் 1670 வரை தொடர்ந்து மைக்ரோஸ்கோப்பை முழு மைப்படுத்துவதற்கான வேலைகள் நடந்தன. ஆனால் மைக்ரோஸ்கோப் வந்த பிறகும் கூட, தொற்றுநோய் களுக்குக் காரணம் கிருமிகள்தாம் என்று கண்டறிய முடியவில்லை.

முதன்முதலில், மக்களின் நம்பிக்கை களைத் தாண்டி தொற்றுநோய்களுக்கு வேறு காரணம் இருக்கிறது என்று கண்டுபிடித்தவர், இங்கிலாந்து மயக்கவியல் மருத்துவரான ஜோன் ஸ்னோ (John Snow-1813 - 1858). 1854 ல் இலண்டன் நகரத்தில் கொலரா நோயின் தாக்கம் கடுமையாக இருந்தது. பெருமளவு மக்கள் உயிரிழந்தார்கள். கெட்ட காற்று காரணமாகவே இந்த நோய் பரவுகிறது என்று எல்லோரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஜோன் ஸ்னோ அப்படி நம்பவில்லை. வேறு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று நினைத்தார். கொலராவால் பாதிக்கப்பட்ட இலண்டன் நகருக்குச் சென்றார். நோயுற்ற மக்களைச் சந்தித்துப் பேசினார்.


இலண்டன் மாநகரத்தின் வரை படத்தை உருவாக்கி, கொலரா பாதித்த பகுதிகளை அந்த வரைபடத்தில் பதிவு செய்தார். அதன் மூலம், கொலரா பாதிப்பு குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டுமே இருக்கிறது என்ற உண்மை புலப்பட்டது. அதுமட்டுமல்ல... குறிப்பிட்ட குடிநீர் தொட்டி இருக்கிற இடத்தில் மட்டுமே தாக்கம் அதிகம். அந்தக் குடிநீர் தொட்டியின் நீரை யாரெல்லாம் பயன்படுத்தினார்களோ அவர்கள் எல்லோரும் கொலராவால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இறுதியில், 'கொலரா, கெட்ட காற்றால் பரவவில்லை. அந்தக் குடிநீர் தொட்டியில் இருந்து வரும் தண்ணீர் மூலமாகவே பரவியிருக்கிறது. அந்தத் தண்ணீரில் கொலராவைப் பரப்பும் ஏதோ ஒன்று கலந்திருக்கிறது' என்று அவர் அறிவித்தார். உடனடியாக இலண்டன் உள்ளாட்சி நிர்வாகம் அந்தக் குடிநீர்த் தொட்டியை மூடியது. கொலராவின் தாக்கம் படிப்படியாகக் குறைந்தது.

இதுதான் கிருமிகள் பற்றிய முதல் தியரி. கிட்டத்தட்ட இதே காலக்கட்டத்தில் இன்னொரு முக்கியச் சம்பவமும் நடந்தது. அதுவும் அக்கால மருத்துவ உலக நம்பிக்கையைப் புரட்டிப் போட்டது. இக்னாஸ் செம்மல்வேய்ஸ் (Ignaz Semmelweis) என்ற அந்த ஹங்கேரி மருத்துவரின் கண்டுபிடிப்பு பற்றி அடுத்த இதழில் பார்ப்போம். **களைவோம்...**

---

அவர்கள் வயல் ஆய்வின் மூலமாகத் தெரிந்து கொள்கிறார்கள். பூச்சிக் கொல்லி தெளிப்பதன் மூலமாக விளைபொருள்களில் நச்சு சேர்கிறது. மண்ணில், நீரில், காற்றில் நச்சுக் கலக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள். இறுதியில் அனைத்து சிறு குழுக்களும் இணைந்து, தங்களது முடிவுகள் பற்றிக் கடுமையாக விவாதிப்பார்கள். இறுதியில், ஐ.பி.எம் முறை செயல்படுத்தும் வயலில் பூச்சிக்கொல்லி தெளிக்காமல்... பூச்சிகளைப் பூச்சிகள்கொண்டே கட்டுப்படுத்தும் முறைகள், பொறிப் பயிர்கள் மூலமாகக் கவர்ந்து அழிக்கும் முறைகளை மேற்கொள்வார்கள். விவசாயிகளாகவே இந்த முடிவை எடுக்க வைக்கும் வகையில் பயிற்சியளிப்பதுதான் வயல்வெளிப் பள்ளியின் நோக்கம்.

பயிற்சியின்போது, விவசாயிகள் வழக்கமான முறையில் செயல்படுத்தும் சாகுபடி முறையும் செயல்படுத்தப்படும். பயிற்சியின் இறுதியில், ஐ.பி.எம் முறை விவசாயத்துக்கும், வழக்கமான



விவசாய முறைக்குமான வரவு, செலவு, பூச்சிக்கொல்லிப் பயன்பாடு போன்றவை ஆய்வில் எடுத்துக்கொள்ளப்படும். இரண்டு முறைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் விவசாயிகள், ஐ.பி.எம் முறைதான் சிறந்தது என்பதைப் புரிந்துகொள்வார்கள். அதன் பிறகு, அதைத் தங்கள் வயலில் செயல்படுத்தத் தொடங்குவார்கள்.

உழவர் வயல்வெளிப் பள்ளி என்ற திட்டம் உலகில் 32 நாடுகளில் பரிசோதிக்கப்பட்டு, அதன் முடிவுகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது நமது விவசாயிகளிற்கு இரண்டு பூச்சிகள் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஒன்று தென்னையைத் தாக்கும் வளைய வடிவிலான வெள்ளை ஈ. மற்றொன்று மக்காச்சோளத்தைத் தாக்கும் இலையுதிர்காலப் படைப்புழு. இவை இரண்டுமே அயல்நாட்டுப் பூச்சிகள். வெள்ளை ஈ தாக்குதலைத் தடுக்கத் தயவு செய்து பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்க வேண்டாம். பூச்சிக்கொல்லி தெளித்தால் இந்த ஈக்கு எதிரான ஒட்டுண்ணிகள் வளர்வது தடுக்கப்படுகிறது எனக் காரணம் சொல்லப்பட்டுள்ளது.

படைப்புழுத் தாக்குதலைத் தவிர்க்க, 'கலப்புப் பயிர்ச் சாகுபடி' முறைதான் சிறந்தது என ஆபிரிக்க நாடுகளில் நிரூபித்துள்ளார்கள். எனவே, விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும்போது, நிலைத்த நீடித்த, நஷ்டமில்லாத விவசாயத்தைச் சாத்தியமாக்கலாம். **வளரும்**

கொரியர்களின் நிலத்தை பல்வேறு வகைகளில் ஏமாற்றுச் சட்டங்கள் மூலமாக ஜப்பான் பறித்தது. பிறகு அவர்களையே குத்தகைக்கு விவசாயம் செய்து நான்கில் மூன்று பங்கு விளைச்சலை குத்தகையாக பறித்தது. விளைச்சல் இல்லாவிட்டாலும் மூன்று பங்கு குத்தகையை கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அடிமைச் சேவகம் செய்ய வேண்டும் என்ற நிலையை உருவாக்கியது ஜப்பானிய அரசு.


கொரியர்களின் தேசிய அடையாளத்தை அழிக்கும் பல்வேறு சட்டங்களை ஜப்பான் அரசு பிறப்பித்தது. ஜப்பான் பெயர்களை அடைமொழியாக சேர்க்கும்படி கட்டாயப்படுத்தியது. பாரம்பரியமான கொரிய கலாச்சாரம் சிதைக்கப்பட்டது. ஏராளமான கொரிய கலாச்சார அடையாளங்கள் அழிக்கப்பட்டன. அல்லது ஜப்பானுக்கு கொண்டு செல்லப்பட்டன. ஜப்பான் அருங்காட்சியகங்களிலும் தனிநபர் சேகரிப்பாகவும் ஏராளமான கலைப் பொக்கிஷங்கள் இருப்பதை ஒரு புலனாய்வு தெரிவித்தது. ஜப்பானில் 34 ஆயிரத்து 369 கலைப்பொருட்களும், அமெரிக்காவில் 17 ஆயிரத்து 803 பொருட்களும் இருப்பதாக ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. ஆனாலும் நிபுணர்கள் மதிப்பீட்டின் அடிப்படையில் ஜப்பானில் மட்டும் 1 இலட்சம் கலைப்பொருட்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. கொரியா ஜப்பானின் ஒரு பகுதியாகியது. இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் இராணுவத்தில் சேர்ந்து சண்டையிடவும், சுரங்கங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலைசெய்யவும் கட்டாயத் தொழிலாளர்களாக சுமார் 50 இலட்சம் கொரியர்கள் சேர்க்கப்பட்டனர்.

இப்படி வேலை செய்த சுமார் 4 இலட்சம் தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது. கொரிய பெண்களில் 2 இலட்சம் பேர் ஜப்பான் இராணுவத்தினரின் பாலியல் இச்சைகளை தீர்ப்பதற்காக பாலியல் தொழிலாளிகளாக பல்வேறு ஜப்பான் இராணுவ முகாம்களுக்கு கொண்டுபோகப்பட்டனர்.

ஜப்பானில் பாலியல் தொழில் தொடக்கத்திலிருந்தே ஒழுங்குபடுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கிறது. ஜப்பான் இராணுவம் பிற நாடுகளில் சண்டையிடும்போது, பாலியல்க் குற்றங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பதற்காக பாலியல் தொழிலாளிகளாக ஜப்பானிய பெண்களை இராணுவ முகாம்களில் இணைப்பது வழக்கம். இதன்மூலம் இராணுவ வீரர்கள் பாலியல் நோய் தாக்குதலில் இருந்து காப்பற்றப்படுவதாக ஜப்பான் அரசு நினைத்தது. அதுமட்டுமின்றி, இராணுவ வீரர்கள் மத்தியில் கலகம் ஏற்படாமல் தடுக்கவும் இந்த ஏற்பாடு





## கொரியாவின் கதை #9

# கொரியா பெண்களை சூறையாடிய ஜப்பான் இராணுவம்!

உதவுவதாகவும் கருதியது.

இராணுவ முகாம்களில் இதுபோன்ற பாலியல் தொழிலாளிகளின் முதல் முகாம் 1932 ஆம் ஆண்டு சீனாவின் ஷாங்காய் நகரில் உருவாக்கப்பட்டது. அங்கு தொழிலாளிகளாக வந்தவர்கள் அனைவரும் ஜப்பானிய பாலியல் தொழிலாளர்கள். ஆனால், ஜப்பான் தனது இராணுவ ஆக்கிரமிப்பை விரிவுபடுத்தியபோது, இந்த தொழிலில் ஈடுபடுத்த போதுமான ஜப்பானிய பெண்கள் கிடைக்கவில்லை. அப்போது, எந்த நாட்டை ஆக்கிரமிக்கிறார்களோ, அந்த நாட்டிலேயே இந்த தொழிலிலுக்காக ஏஜெண்டுகள் மூலம் பெண்களை சேர்த்தார்கள். அல்லது வலுக்கட்டாயமாக கடத்தி வந்து தொழிலில் ஈடுபடுத்தினார்கள். தொழிற்சாலை வேலைக்கு, செவிலியர் வேலைக்கு என்று ஏமாற்றி அழைத்துச் சென்று பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய சம்பவங்கள் வரலாற்றில் கொடூரமான பக்கங்களாக நிரம்பியிருக்கிறது.

இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் விளம்பரம் கொடுத்து பாலியல் தொழிலுக்கு பெண்களை சேர்த்தார்கள். ஜப்பானின் குடியேற்ற நாடுகளான கொரியா, தைவான், சீனா ஆகியவற்றில் இதுபோன்ற விளம்பரங்களை ஏஜெண்டுகள் வெளியிடுவார்கள். சீனாவில் ஹுய் முஸ்லிம் பெண்களை, பள்ளிகளில் கற்பிக்கும் வேலை என்று சேர்ப்பார்கள். பின்னர் பாலியல் அடிமைகளாக மாற்றுவார்கள்.

இத்தகைய பாலியல் அடிமைகள் உலகின் பல நாடுகளில் ஜப்பான் இராணுவ முகாம்களில் இருந்தனர். ஜப்பானிய இராணுவத்தில் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவமும் இணைந்திருந்தது. அவர்கள் இத்தகைய பாலியல் தொழிலாளர்களை பயன்படுத்தினார்களா என்பது தெரியவில்லை என்று அமெரிக்க வரலாற்று ஆசிரியர் ஜெரார்டு வெய்ன்பெர்க் கூறியிருக்கிறார்.

யுத்தத்தின் வீரியம் அதிகரித்தபோது, உணவுப் பொருட்களுக்காக ஜப்பான் இராணுவம் கொள்ளையில் ஈடுபட்டது. கிராமப்புறங்களில் கொலை, பாலியல் வன்முறைக்கு பிறகு கொள்ளையடித்துவிட்டு, தீக்கிரையாக்குவதை வாடிக்கையாக மாற்றினார்கள்.

ஜப்பான் இராணுவம் இரண்டாம் உலகப்போர் சமயத்தில் நடத்திய யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை, போரின் பின்னர் நடைபெற்றது. ஜப்பான் தனது இராணுவத்திற்காக சட்டவிரோதமாக கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய பெண்களின் எண்ணிக்கை துல்லியமாக தெரியவில்லை. ஆனால், 2 இலட்சத்திற்கும் அதிகமான பெண்களை ஜப்பான் இராணுவத்தினர் கடத்தி பாலியல் தொழிலுக்கு பயன்படுத்தினர் என்கிறார்கள். அதிகபட்சமாக 3 இலட்சம் பேர் இப்படிக் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் சில கருத்து நிலவுகிறது.

உலகம் முழுவதும் ஜப்பான் இராணுவத்தினருக்காக 2 ஆயிரம் முகாம்களில் பாலியல் தொழிலாளர்கள் அடைக்கப்பட்டனர் என்று ஒரு ஆய்வு கூறுகிறது. இந்த முகாம்களில் ஜப்பான், கொரியா, சீனா, பிலிப்பைன்ஸ், தைவான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண்கள் இருந்தனர்.

பாலியல் தொழிலாளிகளாக ஜப்பான் இராணுவம் பயன்படுத்திய பெண்களில் நான்கில் மூன்று பங்கினர் உயிரிழந்தனர். உயிரோடு இருந்தவர்கள் பாலியல் நோய்களால் தாக்கப்பட்டு வாழ்க்கையை இழந்தனர்.

பாலியல் தொழிலாளிகளை இராணுவத்தினர் அடித்தும் உதைத்தும் உடல் ரீதியாக கொடுமைப்படுத்தியும் உறவு வைத்துக்கொண்டனர். பாலியல் தொழிலுக்கு தொடர்பில்லாத குடும்பப் பெண்களை இந்த முகாம்களில் கொண்டுவந்து பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கும்போது உடைந்து நொறுங்கினர்.

ஜப்பான் இராணுவத்தின் கொடுமைகள் குறித்து 1991 ஆம் ஆண்டு கிம் ஹாக் சுன் என்ற கொரிய பெண் பேட்டியளித்தார். அந்தப் பேட்டி உலகையே உலுக்கியது.

“எனக்கு 17 வயது இருக்கும்போது எனது தோழியும் நானும் ஜப்பான் இராணுவத்தினரால் கடத்தப்பட்டோம். தொழிற்சாலையில் வேலை இருப்பதாக கூறி கடத்தினார்கள். ஆனால், நாங்கள் இராணுவ முகாமுக்கு போகும்போதே இராணுவ வாகனத்தில் வன்புணர்வுக்கு ஆளானோம். முதல் நாள் தொடங்கிய அது பிறகு எப்போதும் நிற்கவே இல்லை. தினமும் 30 முதல் 40 முறை என்னுடன் யாரேனும் ஒருவர் உறவு கொண்டார். நான் பெண்ணாய் பிறந்தாலும், பெண்ணாக வாழவில்லை. ஒரு ஆண் எனக்கருகில் வந்தாலே நான் நோயாளியைப் போல உணர்ந்தேன். ஜப்பான் கொடியை பார்த்தாலே நடுங்குகிறேன். „எனக்கு நடந்ததை சொல்ல நான் வெட்கப்படவில்லை” என்று அவர் அழுதபோது நாகரிக உலகம் வெட்கித் தலைகுனிந்தது.

இராணுவ முகாம்களில் இருந்த பாலியல் தொழிலாளிகளில் 80 சதவீதம் பேர் கொரியர்கள். இவர்கள் சாதாரண வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டார்கள். ஜப்பான் மற்றும் ஐரோப்பிய பெண்கள் என்றால் அவர்களை இராணுவ உயர் அதிகாரிகள் மட்டுமே பயன்படுத்த முடியும் என்ற நிலையும் இருந்தது.

ஜப்பான் இராணுவத்தின் இந்த அட்டூழியம் வெளிவந்ததே தனிக்கதை. அதை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்... **(இன்னும் வரும்)**






## ஆட்டோ சங்கரின் கதை

# இரவு இரண்டு மணிக்கு 'பெண்' கேட்ட தேசிய தலைவர்!

### இந்தியாவை உலுக்கிய சீரியல் கில்லரின் மரண வாக்குமூலம் 14


முகத்தில் கோபம் மொய்த்தது. இவ்வளவு புகழ் வாய்ந்த தன் மகளுடன் இருக்க அவனவன் தவம் கிடக்கிறான். இவன் என்னடாவென்றால் ராத்திரி எழுப்பிக் கூட்டி செல்வதுமல்லாமல் தங்களிடமே பணம் கேட்கிறானே...

புதைத்து மூடி விட்டால் விஷயம் வெளியே தெரியாது என நம்பினது எங்களது அறியாமை! இரண்டு விஷயங்கள் புதைத்த பிறகுதான் முளைத்து வெளிக் கிளம்பும் என்பது அப்போது எங்களுக்குத் தெரியாது! அந்த இரண்டில் ஒன்று விதை! இன்னொன்று இரகசியம்!

வடபழனி புரோக்கர் போன் போட்டு கூப்பிட்ட போது முதலில் ஆர்வமே காட்டவில்லை நான்! லலிதா மரணம் நடந்து ஒரு வாரம், பத்து நாள்தான் ஆகியிருந்தது... துக்கத்தின் வலி கணிசமாகவே நெஞ்சில் தேக்கம் கண்டிருந்தது. நடிகை ஒருத்தியை உடனே ஏற்பாடு செய்யும்படி சொன்னான் எதிர்முனையில் இருந்தவன் அவர் பெயரைச் சொன்னான். கேட்டதும் பெரும் பரபரப்பானேன்.

"நி... நிஜமாவா...? அவருக்கே வா?"

இரத்தத்தில் சுறுசுறுப்பானேன்.

மணியைப் பார்த்தேன். பெருமூச்சு ஒன்று பயணமானது! இராத்திரி ரெண்டு மணிக்கு எந்த நடிகையைக் கூப்பிட முடியும்? ஆனால் வி.ஐ.பி.யை திருப்திப்படுத்தியும் ஆகவேண்டும்! வளசரவாக்கம் அம்மாவுக்கே போன் செய்தேன்! அவர் வீட்டில்தான் இருவர் இருந்தார்கள். ஒருத்தர் இல்லாமல் போனாலும் இன்னொருத்தராவது கிடைப்பாரே!

"எந்த சங்கர்! மணி ரெண்டு ஆயிட்டல்லே... இப்போ போய் பெண்குட்டிகளை எழுப்பி பறையணுமல்லே...?" என்று சிணுங்கி மறுத்தது தாய்க்குலம்.

"அம்மா... கூப்பிடறது யாரு தெரியுமா?" வி.ஐ.பி.யின் பெயரைச் சொல்ல... அந்தம்மாவின் ஆச்சர்யம் அவளையும் மீறி போனில் கேட்டது.

"ஓ... ஆயாளோ?"

அவர் சற்று விபரமான தாய்க்குலம். நட்சத்திரங்களான மகள்களை பெரிய மனிதர்களிடம் மட்டுமே அனுப்புவார் (அந்தத் தொகையைக் கட்ட அவர்களால்தான் முடியும் என்பது வேறு!) முதல் தடவை அனுப்பும் போது மட்டும்தான் என் போன்ற புரோக்கர்கள் தேவைப்படுவார்கள். அந்த வி.ஐ.பி.க்கள் அடுத்த தடவை டைரக்டாக வீட்டுக்கே போன் அடிப்பார்கள். அந்தளவுக்கு நெருக்கம் காட்டிவிடுவார்கள். 'தொழிலில்' அவ்வளவு சமர்த்து! இந்த விஷயம் எனக்கும் தெரியும்!

வேறொரு பெரிய மனிதரிடம் முன்பு ஒரே தடவைதான் கொண்டுவிட்டேன்! அப்புறம் எத்தனை தடவை அவர்களாக போய்விட்டு வந்தார்களோ! தோட்டம், பங்களா என எல்லாமே சடுதியில் சேகரமாயிற்று அந்த பெரிய மனிதர் உறவால்! நடித்து சம்பாதித்ததை விட அவர்கள் இப்படி சம்பாதித்தது அமோகம்.

நான் சொன்ன வி.வி.ஐ.பி.யின் பெயர் கேட்டதும் புளகாங்கிதப்பட்டுப் போனார் தாய்க்குலம். பின்னே மாட்டாரா? நான் முன்பு பழக்கப்படுத்தி வைத்த ஒரு நபரிடமே லட்சக் கணக்கில் கறந்து ஒரு தலைமுறைக்கு சொத்து சேர்த்தாயிற்று. இப்போது நான் சொல்வது பழைய வி.ஐ.பி.யை விட பராக்கிரமசாலி! டெல்லி வரைக்கும் தங்கள் கொடி பறக்குமே...

டெல்லிக்கும், காஷ்மீருக்கும், அஸ்ஸாமுக்குமாக பொழுதுக்கும் பறந்து கொண்டிருக்கும் அவருக்கு இதற்கெல்லாம் நேரமும் விருப்பமும் வருவதே அபூர்வம்! அது வந்து,



அந்த வாய்ப்பு தன் பெண்களுக்கே கிடைக்கிறதென்றால் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்! அதை உபயோகித்துக் கொள்ள தவறுமா தாய்க்குலம்.

வாசலில் கார் போய் நிற்க, எட்டிப்பார்த்தார்கள். "பெண்ணுக்கு எவ்வளவு ரூவாம்மா?" என்றேன்.

"சங்கர் அறியுமல்லே? எப்போதும் போல்!" தமிழ் பேச திணறினார் அம்மா. "எப்பவும் பதினைந்தாயிரம் தருவேன்... ஆனா இந்த தடவை ஒரு மாறுதலுக்கு நீங்க எனக்கு பதினைந்தாயிரம் தரீங்க!" என்றேன்.

"எந்தானு?" நெற்றி சுருங்கினார்.

"ஆமா! ஏன்னா அடுத்த தடவை அவர்கிட்டே போக என் தயவு தேவையிருக்காதே உங்களுக்கு? அது மட்டுமில்லாம... அவர்கிட்ட இன்னும் எவ்வளவு லட்சோப லட்சம் சம்பாதிக்கப் போறீங்களோ... யாருக்குத் தெரியும்..."

"ஓ"

முகத்தில் கோபம் மொய்த்தது. இவ்வளவு புகழ் வாய்ந்த தன் மகளுடன் இருக்க அவனவன் தவம் கிடக்கிறான். இவன் என்னடாவென்றால் ராத்திரி எழுப்பிக் கூட்டி செல்வதுமல்லாமல் தங்களிடமே பணம் கேட்கிறானே... என்ன கொழுப்பு? என்றுதான் நினைத்திருப்பார்.

"மிஸ்டர் சங்கர்! வில் யூ ப்ளீஸ் கெட் அவுட்?" என ஆத்திரம் பொங்க சொன்னது ஒரு மகள்.

"வித் ப்ளஷர்!" சிரித்தேன்.

(தொடரும்)

## செய்யும் தொழிலை காதலிக்கிறேன்: திருமணம் செய்தே வாழ்வேன்-சாய்பல்லவி

லிவிங் டுகெதர் உறவு எனக்கு தேவையில்லை, நான் திருமணம் செய்துகொண்டு வாழ்வதையே விரும்புகிறேன் என்று நடிகை சாய் பல்லவி தெரிவித்துள்ளார். சூர்யாவுடன் என்.ஜி.கே படத்தில் நடித்து வரும் சாய் பல்லவி, அடுத்து பகத் பாசிலுடன் ஒரு மலையாள படத்தில் நடிக்க இருக்கிறார். காதல், திருமணம், லிவிங் டுகெதர் குறித்து ஒரு பேட்டியில் மனம் திறந்து பேசியுள்ளார். 'நான் காதலித்திருக்கிறேனா, இல்லையா? லிவிங் டு கெதர் உறவில் வாழ்வீர்களா என்று கேட்கிறார்கள். எனது கல்லூரி நாட்களில் நான் புத்தகங்களை காதலித்தேன். தற்போது சினிமாவை காதலித்துக் கொண்டிருக்கிறேன். செய்யும் தொழிலையே நான் காதலிக்கிறேன். என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையை பொறுத்தவரை லிவிங் டுகெதர் உறவு எனக்கு தேவையில்லை. இப்படி சொல்வதால் அதற்கு எதிராக இருக்கிறேன் என்பதல்ல. இது எல்லாமே அவரவர்களின் செயல்பாடுகளை பொறுத்தது. என்னைப் பொறுத்தவரை எனக்கு அத்தகைய உறவு தேவையில்லை. நான் திருமணம் செய்துகொண்டு வாழ்வதையே விரும்புகிறேன்'.

## விஸ்வாசம் டிரைலர் படைக்கும் சாதனை!

சிவா இயக்கத்தில் அஜித், நயன்தாரா நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'விஸ்வாசம்'. பொங்கல் ரிலீசுக்குத் தயாராகி இருக்கும் விஸ்வாசம் திரைப்படத்தின் டிரைலர் இன்று வெளியானது. இந்த டிரைலரில் அஜித் பேசும் வசனங்களான, பங்காளிகளா அடிச்சி தூக்கலாமா, என் கதையில நான் வில்லன்டா, உள்ளிட்ட பல வசனங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. இந்த டிரைலர் வெளியான 4 நிமிடத்தில் 1 லட்சம் லைக்ஸ், 8 நிமிடத்தில் 2 லட்சம் லைக்ஸ், 12 நிமிடத்தில் 1 மில்லியன் பார்வையாளர்கள், 25 நிமிடத்தில் 2 மில்லியன் பார்வையாளர்கள், 20 நிமிடத்தில் 4 லட்சம், 30 நிமிடத்தில் 5 லட்சம் லைக்ஸ்கள், 44 நிமிடத்தில் 3 மில்லியன் பார்வையாளர்கள், 75 நிமிடத்தில் 4 மில்லியன் பார்வையாளர்கள், தற்போது 5 மில்லியன் பார்வையாளர்களை கடந்து சமூக வலைத்தளத்தில் டிரெண்டாகி வருகிறது. சத்யஜோதி பிலிம்ஸ் தயாரித்திருக்கும் இந்த படத்திற்கு டி.இமான் இசையமைத்திருக்கிறார். சமீபத்தில் வெளியாகிய விஸ்வாசம் பாடல்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மதுரை பின்னணியில் உருவாகி இருக்கும் இந்த படத்தில் விவேக், தம்பி ராமையா, ரோபோ சங்கர், யோகி பாபு, போஸ் வெங்கட், ரமேஷ் திலக் உள்ளிட்ட பலரும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

## பெண் ஓரின சேர்க்கையாளராக தமிழ் முன்னணி நடிகை ரெஜினா

தமிழில் முன்னணி நடிகையாக வலம் வரும் ரெஜினா, தற்போது இந்தி படத்தில் பெண் ஓரின சேர்க்கையாளராக நடித்துள்ளார்.தமிழில் முன்னணி நடிகை ரெஜினா. கவுதம் கார்த்திக்குடன் இவர் நடித்த மிஸ்டர் சந்திரமவுலி படத்தில் நீச்சல் உடையில் நடித்த பிறகு, அவரது மார்க்கெட் ஏறிவிட்டது. சமீபத்தில் வெளிவந்து திரை அரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கு சிலுக்குவார் பட்டி சிங்கம் படமும் ரெஜினாவின் மார்க்கெட்டை தக்கவைத்திருக்கிறது. அவர் நடித்துள்ள பார்ட்டி, நெஞ்சம் மறப்பதில்லை உள்ளிட்ட படங்கள் ரிலீசுக்கு தயாராகி வருகின்றன. புதிய படங்கள் சிலவற்றிலும் அவர் நடித்து வருகிறார். இந்நிலையில் இந்தியில் ஷெல்லி சோப்ராதர் இயக்கத்தில், அனில் கபூர், ஜூஹி சாவ்லா, சோனம் கபூர் உள்ளிட்டோர் நடித்துள்ள 'ஏக் லடிக்கி கொ தேகா தோ ஐசா லகா' படத்தில் ரெஜினா நடித்து உள்ளார். இந்த படத்தின் கதைப்படி சோனம் கபூர் ஒரு லெஸ்பியன். அவருக்கு திருமணம் நடத்தி வைக்க பெற்றோர்கள் முடிவு செய்யும் போது, நடக்கும் கலாட்டாக்கள் தான் படத்தின் கதை. இந்த படத்தில் சோனம் கபூரின் பெண் காதலியாக, மற்றொரு லெஸ்பியன் கதாபாத்திரத்தில் நடிக்கும் நடிகை யார் என்பது சஸ்பென்சாக வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் படத்தின் டிரெய்லர் வெளியாகி அந்த சஸ்பென்சை உடைத்துள்ளது. அதில் ஒரு சில நொடிகள் மட்டுமே வரும் அந்த காட்சியை நிறுத்தி பார்க்கும் போது, சோனம் கபூரின் காதலியாக நடித்திருப்பது ரெஜினா என்பது தெரியவந்துள்ளது. கலாச்சார மாற்றத்தின் சாட்சியாக உருவாகியுள்ள இப்படத்தில் லெஸ்பியனாக ரெஜினா நடித்துள்ள செய்தி பலரை ஆச்சரியப்படுத்தி உள்ளது.






'கனா': கிராம பெண்களின் வாழ்க்கையையும், விவசாயிகளின் நியத்தையும் காட்சிப்படுத்துகிறது

நடிகர்: தர்ஷன்

நடிகை: ஐஸ்வர்யா ராஜேஷ்

இயக்குனர்: அருண்ராஜா காமராஜ்

இசை: திபுநிணன் தாமஸ்

ஒளிப்பதிவு: தினேஷ் கிருஷ்ணன்

கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார் சத்யராஜ். குடும்பம், விவசாயம், கிரிக்கெட் மூன்றையும் உயிராக கருதுபவர். அவரது மகளாக வருகிறார் ஐஸ்வர்யா ராஜேஷ். கிரிக்கெட் போட்டிகளை தவறாது பார்த்து ஆராவாரம் செய்து மகிழ்ச்சியில் மூழ்குபவர் சத்தியராஜ். தந்தையின் மகிழ்ச்சியில் அவரது முகத்திலேயே கிரிக்கெட்டை பார்த்து மகிழ்பவராக ஐஸ்வர்யாராஜேஷ் வலம் வருகிறார். ஒரு கட்டத்தில் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி தோற்றுப்போக அதை பார்த்து சத்யராஜ் கண் கலங்குகிறார். தனது அப்பா கண் கலங்குவதை முதல்முறையாக பார்த்து வருத்தப்படும் ஐஸ்வர்யா ராஜேஷ், தனது அப்பா முகத்தில் மகிழ்ச்சியை பார்க்க தானே இந்திய அணிக்காக விளையாடி கோப்பையை வெல்ல வேண்டும். அப்பா முகத்தில் மகிழ்ச்சியை பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

இந்நிலையில் பாடசாலையில் விளையாட்டுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறுகிறது. அப்போது பெண்கள் ஒவ்வொருவரும் நமது சமூகம் விதித்துள்ள பெண்களுக்கான விளையாட்டுக்களை தெரிவு செய்ய கௌசி என்னும் பெயர் கொண்ட ஐஸ்வர்யா ராயேஷ் கிரிக்கெட்டை தெரிவு செய்கிறார். ஆனால் பயிற்றுவிப்பாளர் அதை மறுக்கிறார். கிரிக்கெட் தனியாக விளையாட முடியாது என்றும் 11 பேர் தேவையென்றும் கூறி கௌசியின் பிடிவாதத்திற்கு முட்டுக்கட்டை போட முனைகிறார். ஆனால் மறுகணமே 11 பேருடன் பயிற்சியாளர் முன் வரும் கௌசி கிரிக்கெட் பிடியை விடவில்லை.

எனினும் பயிற்றுவிப்பாளர் சமரத்தியமாக கிரிக்கெட் விளையாட சில விதிகள் உள்ளதென்பதை எடுத்துரைக்கிறார். அப்போது கௌசிக்கு பின்னால் நின்ற பெண்கள் ஒவ்வொருவராக விலகிச்செல்ல மீண்டும் அவர் தனித்து விட பயிற்சியாளர் இலகுவாக கௌசி கனவை நிராகரிக்கிறார்.

எனினும் தனது பிடிவாதத்திலிருந்து விலகாத கௌசி தனது கிராமத்தில் கிரிக்கெட் விளையாடும் அண்ணன்களுடன் இணைந்து கிரிக்கெட் விளையாட தொடங்குகிறார். ஆனால் ஐஸ்வர்யா ராஜேஷ் இப்படி பசங்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடுவதை விரும்பாத அவரது அம்மாவான ரமா அதற்கு முட்டுக்கட்டை போட நினைக்கிறார். அவரின் எண்ணிம் போல் கௌசி வயதிற்கு வந்துவிட நீண்ட நாள் அவளின் விளையாட்டும் முடங்கி போகிறது. எனினும் அவளை கூட்டு சேர்க்கும் ஊர் அண்ணன்மார் கொடுக்கும் தன்னம்பிக்கை மற்றும் தைரியத்தை பெற்று மீண்டும் விளையாட களமிறங்குகிறார் கௌசி.

ஒரு தருணம் கிரிக்கெட் ரூனமெண்ட் இடம்பெறுகிறது. அப்போது எதிரணியினர் கௌசியின் உடல் கட்டமைப்பை விமர்சிக்க இரு தரப்பிற்குமிடையில் அடிதடி மூழ்கிறது. மேலும் ஊர் மக்கள், சூழ்நிலை, தேர்வாளர்கள், சக அணி வீராங்கனை, எதிர் அணி என வரிசையாக முட்டுக்கட்டைகளை ஐஸ்வர்யா ராஜேஷ் சந்திக்க வேண்டி இருக்கிறது. அதேநேரத்தில் சத்யராஜும், விவசாயத்தில் சரிவை சந்திக்கிறார்.

இந்நிலையில் அதே கிராமத்தில் வசித்து வரும் நாயகன் தர்ஷனுக்கு ஐஸ்வர்யா மீது காதல் வருகிறது. தனது காதலை ஐஸ்வர்யாவிடம் சொல்ல பல்வேறு வழிகளில் முயற்சி செய்கிறார். இவ்வாறாக தனக்கு வரும் தடைக்கற்களை எல்லாம், ஐஸ்வர்யா ராஜேஷ் எப்படி படிக்கற்களாக மாற்றினார்? இந்திய அணியில் விளையாடி தனது அப்பவை எப்படி சந்தோஷப்படுத்துகிறார்? தர்ஷனின் காதல் என்னவானது? என்பதே படத்தின் விறுவிறுப்பான மீதிக்கதை. தனது கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடித்து வரும் ஐஸ்வர்யா ராஜேஷின் சினிமா வாழ்க்கையில் இது ஒரு முக்கிய படமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கிரிக்கெட் விளையாடியதற்காக அம்மாவிடம் அடி வாங்குவது, பீல்டிங் செய்ய தெரியாமல் விழுவது என ஐஸ்வர்யா ராஜேஷ் ஒரு சாதாரண கிராமத்து பெண்ணாகவே தெரிவது அவரது நடிப்பின் சிறப்பு. அப்பாவிடம் பாசம், அம்மாவிடம் பிடிவாதம், அணிக்காக விளையாட முடியவில்லையே என்ற ஏக்கம் என அத்தனை உணர்ச்சிகளையும் அழகாக காட்டுகிறார். சோகத்தை மறைத்து அப்பாவிடம் பேசும் காட்சி அவரின் நடிப்புத்திறமைக்கு ஒரு பதம்.

விவசாயியாக விவசாயத்தின் அருமையை புரிய வைக்கும் கதாபாத்திரத்தில் சத்யராஜ் மனதில் பதிகிறார். வாழ்ந்து கெட்ட விவசாயியை பிரதிபலிக்கிறார். அவருக்கு இணையாக ரமா கிராமத்து சராசரி தாயாக தனது பாணியில் நடித்து கவர்கிறார். ஜெட் வேகத்தில் செல்லும் படம் நெல்சன் திலீப்குமாராக சிவகார்த்திகேயன் வந்த பிறகு ராக்கெட் வேகத்துக்கு பறக்கிறது. அவர் பேசும் தன்னம்பிக்கை வசனம் ஒவ்வொன்றும் பாடம். கடைசி அரை மணி நேரம் இருக்கை நுனிக்கே கொண்டு வருகிறார். இளவரசு, தர்ஷன், முனீஸ்காந்த், சவரி முத்து, ஆண்டனி பாக்கியராஜ் மற்றும் ஐஸ்வர்யாவின் கிரிக்கெட் தோழர்கள் அனைவரும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஒரு தமிழ்ப்பெண்ணின் கனவு, தமிழ்நாட்டு விவசாயியின் வேதனை நிலை என இரண்டு வெவ்வேறு கதையை ஒரே நேர்க்கோட்டில் அழகாக இணைத்து ரசிக்கத்தக்க பொழுதுபோக்கு படமாக கொடுத்திருக்கும் இயக்குநர் அருண்ராஜா காமராஜ் பாராட்டுக்கள். அழிந்து வரும் விவசாயத்தை மக்களுக்கு புரிய வைக்க விளையாட்டை தேர்ந்தெடுத்தது சிறப்பு. கிரிக்கெட்டுக்காக உயிரைக் கொடுக்கும், கொண்டாடும் நம் நாட்டில், சோறு போடும் விவசாயிகளையும், விவசாயத்தையும் கண்டுகொள்வதில்லையே என்ற ஆதங்கத்தை சிறப்பாக காட்சிப்படுத்தி இருக்கிறார் இயக்குநர் அருண்ராஜா காமராஜ்.

விளையாட்டில் சாதிக்க ஆசைப்படும் தமிழ்ப்பெண்ணுக்கும், விவசாயம் செய்ய விரும்பும் விவசாயிக்கும் தமிழ்நாட்டில் என்ன நிலை என்பதற்கு இந்த படத்தை உதாரணமாக காட்டலாம். அனைத்து கதாபாத்திரங்களையும் சிறப்பாக வேலை வாங்கியிருப்பது இயக்குநரின் திறமை."இந்திய கிரிக்கெட்டை காப்பாற்ற நாங்க 11 பேர் இருக்கோம்... ஆனா இந்தியாவில் விவசாயத்த காப்பாற்ற யார் இருக்கா", "ஒண்ணு லஞ்சம் கொடு, இல்ல மரியாதை கொடு... ஏன்யா ரெண்டுத்தையும் கொடுத்து கெடுக்குறீங்க", "ஜெயிச்சுடுவேன்னு சொன்னா இந்த உலகம் கேட்காது, ஜெயிச்சுட்டு சொன்னா தான் கேட்கும்" "உனக்கு ஒன்று வேண்டுமென்றா அதை அடைய அடம்பிடி" என வசனங்கள் ஒவ்வொன்றும் மனதில் பதிகிறது. கிரிக்கெட் போலவே சினிமாவும் கூட்டுமுயற்சி தான். அனைத்து துறைகளும் ஒருசேர கனாவை சாம்பியனாக்கி இருக்கின்றன. கிரிக்கெட்டை படத்திற்குள் கொண்டுவரும் போது விளையாட்டின் லொயிக் கொஞ்சம் இடிக்கிறது. சென்ரிமென்ற் சில இடங்களில் தூக்கலாக பார்ப்போரை கண்கலங்க வைத்தாலும் சில இடத்தில் சரிவு என்றே சொல்லாம்.

எனினும் திபுநிணன் தாமஸ் தனது இசையால் படத்தையே தாங்கி பிடித்து இருக்கிறார். பாடல்கள் திரும்ப திரும்ப கேட்கும் ரகம். பின்னணி இசையில் நம்மை ஒன்ற வைக்கிறார். பசுமை, வெறுமை, வறுமை, தேசபக்தி அனைத்தையும் வண்ணங்களால் பிரித்து காட்டுகிறது தினேஷ் கிருஷ்ணனின் ஒளிப்பதிவு. ரூபனின் படத்தொகுப்பு சில லொஜிக் மீறலையும் மறைத்து படத்தை ரசிக்கவும் சிந்திக்கவும் வைக்குமளவிற்கு கச்சிதம் என்றே சொல்ல வேண்டும்.

# வண்ணத் திரை



## விஷாலுக்கு டும்..டும் - பெண்ணை தேர்வு செய்தார் தந்தை!

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வரும் விஷாலுக்கும் ஆந்திராவைச் சேர்ந்த பெண்ணுக்கும் திருமணம் நடைபெற இருப்பதாக விஷாலின் தந்தை ஜி.கே. ரெட்டி தெரிவித்துள்ளார். 'செல்லமே' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமனாவர் விஷால். தொடர்ந்து சண்டக்கோழி, திமிரு, சிவப்பதிகாரம், தாமிரபரணி, மலைக்கோட்டை, சத்யம், தோரணை, தீராத விளையாட்டு பிள்ளை, அவன் இவன், சமர், பட்டத்து யானை, பாண்டியநாடு, பூஜை, ஆம்பள, பாயும்புலி, மருது, கதகளி, துப்பறிவாளன், இரும்புத்திரை உள்பட பல படங்களில் நடித்துள்ளார். சில படங்களை தயாரிக்கவும் செய்தார்.

தென்னிந்திய நடிகர் சங்க பொதுச் செயலாளராகவும், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்க தலைவராகவும் பொறுப்பு வகிக்கிறார். நடிகர் சங்கத்துக்கு புதிய கட்டிடம் கட்டி முடித்ததும் திருமணம் செய்து கொள்வதாக விஷால் கூறியிருக்கிறார். இந்த நிலையில், விஷால் வரலட்சுமி இருவரும் காதலித்து வருவதாகவும், விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்வார்கள் என்றும் கூறப்பட்டது. சமீபத்தில் விஷால் நண்பர் மட்டுமே என்று வரலட்சுமி விளக்கம் அளித்திருந்தார். விஷால் கூறும்போது, வரலட்சுமி எனது பால்ய நண்பர். என் மனதுக்கு நெருக்கமானவர், சமயம் வரும்போது எனது திருமணம் குறித்தும், யாரைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன் என்பது குறித்தும் தெளிவுபடுத்துவேன் என்று கூறியிருந்தார்.

நடிகர் சங்க கட்டிட வேலைகள் இறுதி கட்டத்தில் உள்ளன. மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் பணிகள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் விஷாலுக்கு பெண்பார்க்கும் முயற்சியில் பெற்றோர் ஈடுபட்டு, தற்போது மணமகளை தேர்வு செய்துள்ளனர். மணப்பெண்ணின் பெயர், அனிஷா. ஆந்திராவை சேர்ந்தவர். விஷால் அனிஷா திருமண நிச்சயதார்த்தம் ஐதராபாத்தில் நடக்க உள்ளது. இதற்காக விஷால், குடும்பத்தினருடன் ஐதராபாத் செல்கிறார். நிச்சயதார்த்தத்தில் திருமண திகதியை முடிவு செய்கிறார்கள். விஷாலுக்கு மணமகள் முடிவானதையும், ஐதராபாத்தில் நிச்சய தார்த்தம் நடப்பதையும் அவரது தந்தையும் தயாரிப்பாளருமான ஜி.கே. ரெட்டி பிரத்யேகமாக தெரிவித்தார்.

## நயந்தாராவின் இடத்தை பிடிக்கும் நோக்குடன 2019 இல் கீர்த்தி சுரேஷ்


2018 ஆம் ஆண்டு அதிக படங்களில் நடித்துள்ள கீர்த்தி சுரேஷ், அடுத்த ஆண்டு நயன்தாரா இடத்தை குறி வைத்திருக்கிறார். கடந்த ஆண்டில் தமிழ் சினிமரவில் அதிக படங்களில் நடித்தவர்கள் என்ற பெருமையை 3 கதாநாயகிகள் பெற்றுள்ளனர். கீர்த்தி சுரேஷ் 'தானா சேர்ந்த கூட்டம், நடிகையர் திலகம், சர்கார், சாமி ஸ்கொயர், சண்டக்கோழி 2' ஆகிய படங்களில் கதாநாயகியாகவும் சீமராஜா படத்தில் கவுரவ வேடத்திலும் நடித்தார். ஐஸ்வர்யா ராஜேஷ் லட்சுமி, வட சென்னை, செக்க சிவந்த வானம், கனா ஆகிய படங்களில் கதாநாயகியாகவும் சாமி ஸ்கொயர் படத்தில் கவுரவ வேடத்திலும் நடித்தார். வரலட்சுமி மிஸ்டர் சந்திரமவுலி, சர்கார், சண்டக்கோழி 2, எச்சரிக்கை இது மனிதர்கள் நடமாடும் இடம், மாரி 2 ஆகிய படங்களில் வில்லி, குணச்சித்திர வேடங்களில் நடித்தார். இந்த மூவரும் இந்த ஆண்டில் அதிக படங்கள் நடித்த உற்சாகத்தில் இருக்கிறார்கள். ஆனால் வரலட்சுமிக்கு மட்டுமே வரிசையாக படங்கள் உள்ளன.

இவர்களுக்கு அடுத்து சமந்தா, சாயிஷா, ஜோதிகா ஆகியோர் தலா 3 படங்களிலும் மற்ற நடிகைகள் குறைந்தது 2 படங்களிலும் நடித்துள்ளனர். இந்த ஆண்டு அதிக படங்களில் கதாநாயகியாக நடித்ததோடு மட்டுமல்லாமல் அதிக வெற்றி படங்களை கொடுத்ததும் கீர்த்தி சுரேஷ் தான். கடந்த சில ஆண்டுகளாக இந்த பெருமைகளை கைவசம் வைத்து இருந்த நயன்தாரா இந்த ஆண்டு 2 படங்களில் தான் நடித்துள்ளார். இரண்டுமே அவர் முதன்மை வேடத்தில் நடித்தவை. இது தொடர்ந்தால் தன்னுடைய முதல் இடத்துக்கு ஆபத்து என்பதை உணர்ந்த நயன்தாரா சமீபகாலமாக பெரிய கதாநாயகர் படங்களிலும் நடிக்க தொடங்கி உள்ளார். நயன்தாரா இடத்தை இந்த ஆண்டும் கீர்த்தி சுரேஷ் பிடிப்பாரா என்பதை அவர் தேர்வு செய்யும் படங்களே முடிவு செய்யும்.

## பாகுபலி காதலர்கள் திருமண விழாவில் சந்திப்பு - குத்தாட்டம் போட்டு மகிழ்ச்சி!

பாகுபலி என்ற பிரம்மாண்ட படத்தை கொடுத்த இயக்குனர் ராஜமவுலியின் மகன் திருமணத்தில் நடிகர் பிரபாஸ், நடிகை அனுஷ்கா குத்தாட்டம் போட்டுள்ளனர். பாகுபலி இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமவுலியின் மகன் எஸ்.எஸ்.கார்த்திகேயா. 'ஷோயிங் பிசினஸ்' என்ற தனது நிறுவனத்தின் மூலம் படங்களுக்கான விளம்பரங்களைச் செய்து வருகிறார். மனம், பாகுபலி உள்ளிட்ட படங்களின் டிரெய்லர்களை இவரது நிறுவனமே உருவாக்கியது. இவருக்கும் தெலுங்கு நடிகர் ஜெகபதி பாபுவின் உறவினர் பூஜா பிரசாத்துக்கும் இன்று ஜெய்ப்பூரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் திருமணம் நடந்தது. பூஜா பிரசாத் கர்நாடக இசைப்பாடகி ஆவார்.

இதற்காக தெலுங்கு பட நடிகர்கள் நேற்று முன்தினமே ஜெய்ப்பூருக்குச் சென்றுள்ளனர். ஜூனியர் என்.டி.ஆர், ராம் சரண், ராணா டகுபதி ஆகியோர் ஜெய்ப்பூர் விமான நிலையத்தில் இருந்து ஒன்றாகச் சென்றனர். பிரபாஸ், அனுஷ்கா, சுஷ்மிதா சென், நாகார்ஜுனா ஆகியோரும் விமான நிலையத்திலிருந்து செல்லும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. மணமக்கள் கார்த்திகேயாவும் பூஜா பிரசாத்தும் விமான நிலையத்தில் சந்தித்துக் கொள்ளும் புகைப்படமும் வெளியாகியுள்ளது. இவர்களது திருமணம் தென்னிந்திய முறைப்படி இன்று நடைபெற்றது. திருமணத்துக்கு முந்தைய நிகழ்ச்சிகளான மெகந்தி, சங்கீத் ஆகியவை கடந்த 2 நாட்களாக நடந்தன. முன்னதாக நவம்பர் மாதம் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இந்த விழாவில் நடிகர்கள் ராணா, ராம் சரண், ஜூனியர் என்.டி.ஆர், பிரபாஸ், நடிகைகள் அனுஷ்கா உள்ளிட்ட பலர் நடனம் ஆடினார்கள்.



# டிக் டொக் செயலியில் நேரத்தைச் செலவிடுகிறீர்களா? காணொலியைப் பதிவிடுகிறீர்களா?

## -எச்சரிக்கும் உளவியல் நிபுணர்

டிக் டொக் (tik tok), இன்ஸ்டகிராம், மியூசிக்கலி போன்ற செயலிகள் பலரது நேரத்தை ஆக்கிரமித்துள்ளன. குடும்பப் பெண்கள், நடுத்தர வயதைக் கடந்தவர்கள் சினிமா பாடலுக்கு வாயசைத்தும், நடனம் ஆடியும் காணொலியை வெளியிடுகின்றனர். இதேபோன்று வட்ஸ் அப்களில் ஸ்டேட்டஸாகப் பதிவு செய்யும் நபர்களும் உள்ளன்ர்.

சிலர் டிக் டொக், மியூசிக்கலி அப் போன்றவற்றை டவுன்லோட் செய்து அதையே முழுநேரமும் பார்த்து பொழுதைக் கழிக்கின்றனர். டிக் டொக், வட்ஸ் அப்களில் ஸ்டேட்டஸ் பதிபவர்கள், செல்ஃபி அதிகம் எடுப்பவர்கள், காணொலி பதிவிடுபவர்கள் ஆகியோரின் மன நிலை என்ன வகை என்பது குறித்தும் அதன் பின்விளைவுகள் குறித்தும் ஓர் உளவியல் ரீதியான அலசல் இதோ.

இது குறித்து உளவியல் நிபுணர் இளையராஜாவிடம் பேசினோம்.

**டிக் டொக்கில் தங்களை வீடியோவாக எடுத்துப் பதிவிடுவதும், குடும்பப் பெண்கள், நடுத்தர வயதுப் பெண்கள் சினிமா பாடல்களுக்கு நடனமாடிப் பதிவு போடுவது, போலீஸ் அதிகாரியே பாடலுக்கு வாயசைத்து வீடியோ பதிவிடுவது இது என்ன வகையான மனநிலை?**

அதைப்பற்றிச் சொல்வதற்கு முன் என்னிடம் வந்த ஒரு க்ளைண்ட் பற்றி சொல்லிவிடுகிறேன். அந்த மாணவி சற்று துறுதுறுப்பானவர். நன்றாகப் படிக்கக்கூடியவர்.

அவரை விடுதியில் சேர்த்தனர். தன் தனிமையைப் போக்க அவர் குருப் ஒன்று உருவாக்கி டிக்ராக் செயலியில் (tictacapp) கவனம் செலுத்த ஆரம்பித்து காணொலிகளாகப் பதிவு செய்ய ஆரம்பித்துவிட்டார்.

இதில் அவருக்கு ஏகப்பட்ட வரவேற்பு கிடைக்கிறது. இதைத்தான் நாம் உளவியலில் கவன ஈர்ப்பு செயல்கள் என்கிறோம் (attention seeking behaviour). கிடைத்த வரவேற்பால் இந்த டிக் டொக் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினார் மாணவி. அவர் திரும்பத்திரும்ப அதில் ஈடுபட்டு அந்த மாணவிக்கு என்று மிகப்பெரிய ரோல், ஆயிரக்கணக்கான நண்பர்கள் வர ஆரம்பித்துவிட்டனர்.

டிக் டொக் மூலமாக ஏகப்பட்ட தொடர்புகள்,ஏகப்பட்ட தொல்லைகள் வர ஆரம்பித்தன. அவர்கள் குடும்பம் மிகவும் பக்தியான குடும்பம். அந்த மாணவிக்கு ஒரு சகோதரி இருக்கிறார், அவர் இந்த மாணவியின் டிக் டொக் செயலியின் மேல் ஈர்ப்பும், அதில் உள்ள மாணவியின் வீடியோக்களையும் பார்த்து மிகவும் பயந்து போனார்.

இதைச் சரிசெய்ய அந்த பெண்ணின் சகோதரி டிக் டொக் அக்கவுண்ட்டை லொக் செய்துள்ளார். ஆனால் அவர் லொ செய்யச் செய்ய அந்த மாணவி புதிது புதிதாக அக்கவுண்ட் ஓபன் பண்ண ஆரம்பித்து விட்டார். டிக் டொக் செயலியில் அந்த மாணவியின் அதீத ஈடுபாடு காரணமாக அவருடைய கல்வியே கெட்டுப்போனது. 11ம் வகுப்பில் அவருடைய செயல்திறன் முற்றிலுமாக குறைந்துவிட்டது.

பத்தாம் வகுப்பில் 80 சதவீத புள்ளி எடுத்த அந்தப் பெண் 11ம் வகுப்பில் முழுவதுமாக இந்த டிக் டொக் மோகத்தில் மூழ்கியதால் அவருடைய மதிப்பெண்கள் முற்றிலுமாகக் குறைந்துபோனது. இதற்கு முதல் காரணம் ஒரு விதமான ஈர்ப்பு. மாணவியின் பதிவுக்கு வரும் லைக்குகள் அவர்களை ஈர்த்து அதிகமான வீடியோக்களைப் பதிவு செய்ய வைக்கிறது.

**இதற்கு பின்னால் உளவியல் ரீதியான பாதிப்பு உள்ளதா?**

இது உளவியல் பாதிப்புக்குள் வராது. முக்கியமாக இளம்பருவத்தினர்தான் இதுபோன்ற விஷயங்களில் ஈர்க்கப்படுகிறார்கள். ஆனால் இதில் வயதானவர்களும் ஏன் இதில் ஈடுபடுகிறார்கள் என்று பார்த்தால் இந்த இளம்பருவத்தினர் பதிவுசெய்யும் வீடியோக்களைப் பார்க்க பார்க்க ஏன் நாமும் செய்யக்கூடாதுஎன்ற ஒரு விஷயம் தான் நடுத்தர வயதினரையும் ஈடுபட ஊக்குவிக்கிறது.

சமீபத்தில் டிக் டொக்கில் காணொலி பதிவு செய்த பொலிஸ்அதிகாரியாக இருக்கட்டும், தேர்தல் அதிகாரியாக இருக்கட்டும், திருமணமான பெண்கள் ஆகட்டும் எல்லாவிதமான நபர்களும் ஈடுபடுவதற்குக் காரணமாக இந்த ஈர்ப்புதான் அமைகிறது.

**இதில் பிரச்சினை எங்கு உருவாகும்?**

இதுபோன்ற ஈர்ப்பில் அதன் பின்விளைவு அறியாமல் ஈடுபடுபவர்களுக்கு ஒரு விஷயம் தெரியவில்லை. இவையெல்லாம் என்ன பெரிய பிரச்சினையை உருவாக்கிவிடப் போகிறது என்று அவர்கள் அதை அலட்சியமாக நினைத்துக் கொண்டிருக்கலாம். தாம் போடும் வீடியோக்கள் தம்முடைய தனிப்பட்ட பக்கத்தில்தான் இருக்கிறது என்று நினைக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால், ஒருவேளை ஷேர் என்று பதிவு செய்து விட்டால் உலகம் முழுவதும் அந்த வீடியோக்கள் நொடிப்பொழுதில் சென்றுவிடும்.

**தனிப்பட்ட நபரின் வாழ்க்கையில் இது என்ன பாதிப்பை ஏற்படுத்தும்?**

இதில் ஆர்வம் காட்டுகிறவர்களின் பெரும்பாலான நேரத்தை இது எடுத்துக்கொள்ளும். மாணவர்களை அவர்களுடைய படிப்பு உள்ளிட்ட மொத்த விஷயங்களையும் பாதிக்கும். வேலை செய்பவராக இருந்தால் அவர்களுடைய வேலை சம்பந்தமான விஷயங்களை கடுமையாக பாதிக்கும். அவர்களுடைய திறமையையும், செயல் திறனையும் குறைத்துவிடும்.

**இதற்கு தீர்வுதான் என்ன?**

இதற்கு ஒரே தீர்வு தான் உண்டு. அது சுய ஒழுக்கம். எப்போது இந்த வகையான ஈடுபாடு நம்முடைய நற்பெயரைக் கெடுக்கிறதோ, நம்முடைய திறமைக்கு இது தடையாக இருக்கிறது, நம்முடைய வேலைத் தன்மையை கெடுக்கிறது, செயல்பாடு குறைகிறது என்று எப்போது நாம் கருதுகிறோமோ? அப்பொழுதே உடனடியாக அதை நிறுத்திவிட வேண்டும். அப்போதே அந்த மொபைல் அப்பை நீக்கம் (uninstall) செய்து விட்டால் நல்லது.


**இதை எளிதாகச் செய்துவிட்டு தொடராமல் இருக்க முடியுமா?**

கொஞ்ச நாளைக்கு எதையோ இழந்தது போல் இருக்கும். அதற்குப் பின் போகப்போக நாம் இயல்பான வாழ்க்கைக்கு திரும்பிவிடுவோம். ஆனால், இது ஒன்றே நிரந்தரத் தீர்வு. இல்லையென்றால் இதுபோன்ற விவகாரங்களில் பெண்கள் ஈடுபடும் பொழுது அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை அது பாதிக்கும்.

தொடர்ச்சி 18-ம் பக்கம்...






# வெற்றிக்கான இலக்கு!

சி.கே.குமரவேல்

எதிர்காலத்தில் தொழில்முனைவோராக ஆக விரும்புகிறவர்கள் முதலில் அப்படியொரு இலக்கைத் தங்களுக்குள் நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும். தங்களுக்கு என்ன தேவை, தங்கள் எதிர்கால இலக்கு என்ன என்று தெரியாமலே சிலரது வாழ்க்கை முடிந்து விடுகிறது. இன்னும் சிலர், தங்களது தேவையை அல்லது இலக்கை இவ்வளவு இருந்தால் போதும் என்று சுருக்கிக் கொள்கின்றனர். சின்ன சின்ன வெற்றிகளை அடைந்தபின், 'அட, எத்தனை பெரிய சாதனை செய்துவிட்டோம்' எனத் திருப்திகொண்டு அத்துடன், தங்கள் வாழ்க்கை முடிந்ததாக நினைத்து சும்மா இருந்து விடுகின்றனர். அப்படி இல்லாமல், உங்கள் தேவை என்ன என்று தெரிந்துகொண்டு அதனை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு சுற்றுலா ஏஜென்டிடம் "நான் ஊருக்குப் போக வேண்டும். எனக்கு டிக்கெட் வேண்டும்" என்று சொன்னால் அவரால் நமக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. நீங்கள் எந்த ஊருக்குப் போக வேண்டும், எப்போது போக வேண்டும், எங்கிருந்து போக வேண்டும் என எல்லாத் தகவல்களையும் தந்தால்தான் அவரால் டிக்கெட் எடுத்துத் தர முடியும். ஏதோ ஒரு ஊருக்குச் செல்வதற்காக ஒரு சுற்றுலா ஏஜென்ட் மூலம் டிக்கெட் எடுக்கவே இத்தனைத் தகவல்களைத் தரும் முடிவுகளை எடுக்க வேண்டும் என்றால், உங்களது எதிர்கால வாழ்க்கையை நிர்ணயம் செய்யும் முடிவுகளை எடுப்பது எவ்வளவு முக்கியமான விஷயமாக இருக்கும்!

## இலக்கு இல்லாத வாழ்க்கை

எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள் என்பதை நீங்கள் முதலில் தெளிவாக 'முடிவு செய்துகொள்ள வேண்டும். இந்தத் தெளிவு இல்லாதவர்களின் வாழ்க்கை, காற்றின் திசையில் பறந்து செல்லும் இலை போலவே இருக்கும். இலக்கு என்பது எவ்வளவு முக்கியம் என்பதற்கு ஒரு சுவாரஸ்யமான ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

ஒருமுறை ஸ்பெய்னில் இரு பெரிய அணிகள் மோதும் கால்பந்து போட்டி நடந்தது. அந்த மைதானத்தைச் சுற்றி 20,000 பார்வையாளர்கள் இருந்தார்கள். இரண்டு அணி வீரர்களும் விளையாடுவதற்கு ஆக்ரோஷத்துடன் இறங்கினார்கள். நடுவர் பந்தைத்தூக்கிப் போட்டுவிட்டு, விசில் அடித்தார். பந்தை உதைத்து விளையாடத் தொடங்கிய வீரர்கள், எதிரிகளின் கோல் போஸ்ட்டை நோக்கிப் பந்தைக் கொண்டு செல்ல ஆரம்பித்த பின்பு பார்வையாளர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. எதிரணி வீரர்கள் இருக்கும் திசையில் கோல் போஸ்ட் எதுவும் இல்லை. சரி, அவர்கள் நிற்கிற திசையிலாவது கோல் போஸ்ட் இருக்கிறதா என்று பார்த்தால் அங்கும் இல்லை. கோல் போஸ்ட் இல்லாமல் எப்படி விளையாடுவது என்று தெரியாமல் வீரர்கள் முழிக்க, இந்த விளையாட்டைப் பார்ப்பது வீண் என்று நினைத்து பார்வையாளர்கள் எழுந்து சென்றுவிட்டார்கள்.



கோல் போஸ்ட் இல்லாத கால்பந்து விளையாட்டு எப்படி பார்க்கிறவர்களுக்கும், விளையாடுகிறவர்களுக்கும் போர் அடிக்குமோ, அப்படித்தான் கோல் (இலக்கு) இல்லாத வாழ்க்கையும் போர் அடிக்கும். அதனால் வெற்றிக்கான முதல் படியாக நீங்கள் செய்ய வேண்டியது, உங்களுக்கு என்ன தேவை என்பதை முதலில் முடிவு செய்வதுதான்.

## நடக்கும் என்று நம்புங்கள்

ஒருவர் சூப்பர் ஸ்டாராக வேண்டும் என்று ஆசைப்பட்டால், முதலில் அது நடக்கும் என்று நம்ப வேண்டும். நான் 'நேச்சுரல்ஸ்' நிறுவனத்தைத் தொடங்கும்போது இந்தியாவிலேயே நம்பர் ஒன் சலூனாகக் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தேன். அது நடக்கும் என்று நம்பினேன். அது நடந்தது. இப்படி நீங்கள் என்னவாக வேண்டும் அல்லது உங்களின் வளர்ச்சி எப்படியிருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அது நடக்கும் என்று நம்புங்கள். உங்கள் எதிர்காலக் கனவுகளை நீங்களே நம்பவில்லையெனில், அது நிச்சயம் நடக்காது.

1950க்கு முன்னால் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்கும் குறைவான நேரத்துக்குள் கடக்க முடியாது என ஓட்டப் பந்தய வீரர்கள், மருத்துவர்கள், விளையாட்டு சார்ந்த மனோதத்துவ நிபுணர்கள் என எல்லாரும் சேர்ந்து முடிவு எடுத்தனர். உலகச் சாதனையும் 4.12தான்.

அப்போது ரோஜர் பானிஸ்டர் என்கிற ஒரு ஓட்டப் பந்தய வீரர், '4 நிமிடம் 12 வினாடியில ஒரு மைல் தூரம் ஓட முடியும்போது, 4 நிமிடங்களில் ஓட முடியாதா?' என்று கேட்டார். நான்கு நிமிடங்களுக்குள் ஒரு மைல் தூரத்தைக் கடக்க முடியும் என்று அவர் நம்பினார். அதற்கான பயிற்சி செய்து 1954ல் நான்கு நிமிடங்களுக்குள் ஒரு மைல் தூரத்தைக் கடந்து புதிய சாதனை படைத்தார். அதன்பிறகு ஒரு வருடத்துக்குள் 16 பேர் அந்த ரெக்கோர்டை ப்ரேக் செய்தார்கள். நீங்கள் ஒரு விஷயத்தை முடியும் என்று நினைத்து அதனை நம்பினால், கண்டிப்பாக அது நடக்கும்.

## ஸ்மார்ட் கோல்ஸ்தான் முக்கியம்

நான் பணக்காரன் ஆக வேண்டும் என்பதற்கும், நான் 100 கோடி ரூபாயை இன்னும் ஐந்து ஆண்டுகளில் சம்பாதிக்க வேண்டும் என்பதற்கும் உள்ள வித்தியாசம்தான் கோலுக்கும் ஸ்மார்ட் கோலுக்கும். நான் பணக்காரன் ஆகவேண்டும் என்பதை அம்பானி ஒரு மாதிரியாகவும், ஒரு சாதாரண மனிதன் வேறு மாதிரியாகவும் புரிந்து கொள்வார்கள். ஆனால், 100 கோடி என்றால் எல்லோரும் ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்வார்கள்.

தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் ட்ரம்ப்புக்கு ஒருமுறை பெரும் தொழில் நஷ்டம் ஏற்பட்டது. அந்தச் சமயம், அவரிடம் பிச்சை கேட்டு வந்தார் ஒரு பிச்சைக்காரர். ட்ரம்ப் சிரித்துக்கொண்டே, "இப்ப என்னைவிட நீதான் பணக்காரன்" என்று அவரிடம் சொன்னார். பத்து வருடங்கள் கழித்து ட்ரம்ப் மீண்டும் பணக்காரராக மாற, அந்தப் பிச்சைக்காரர் அதே இடத்தில் நின்று பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். இந்தப் பத்து வருடங்களில் ட்ரம்ப் செய்ததுதான் ஸ்மார்ட் கோல்.


வெற்றிக்கான படிக்கட்டுகளையும், இலக்குகளையும் இனி தொடர்ந்து பார்ப்போம். **(மாத்தி யோசிப்போம்)**


16-ம் பக்க தொடர்ச்சி...

ஆண்களாக இருக்கும்போது அவர்களுடைய வேலை மற்ற விஷயங்களைப் பாதிக்கக் கூடிய வாய்ப்பு உண்டு.

**ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு ஹீரோயிஸ மன நிலை உண்டு. அதை வெளிப்படுத்த வாய்ப்பில்லாதவர்கள் இப்படி டிக்டொக்கில் காணொலியை வெளியிடுகிறார்களா?**

ஒரு வீடியோவை நான் பார்க்கிறேன் என்றால் முதலில் நான் ஈர்க்கப்படுவேன். ஒரு சினிமாவைப் பார்த்து சாலையில் ஹீரோ போல் சண்டை போடுவதாக இருக்கட்டும், சினிமாவைப் பார்த்து நம்முடைய தலைமுடியை திருத்திக் கொள்வதாக இருக்கட்டும் அதை ஒரு மொடலிங் என்று சொலவோம். சினிமாவைப் பார்த்து நாம் செய்வது போன்று டிக் டொக் அதிகமாகப் பிரபலமாக மாறும்போது அதற்கென்று ரசிகர்கள் வர ஆரம்பித்து விட்டனர். இந்த ஒரு வீடியோ லிங்க் இவ்வளவு அழகாக இருக்கிறது இதை நாம் ஏன் வேறு



**டிக் டொக், மியூசிக்கலி அப்பை, ஃபேஸ்புக்கைப், வட்ஸ் அப்பில் நேரத்தைச் செலவிடுவது இவையெல்லாம் ஒருவகை அடிக்ஷன். நாம் அதிகப்படியான நேரத்தை ஒரு விஷயத்தில் செலவிடுகிறோம் என்றாலே உளவியல் ரீதியாக நாம் அதில் அடிமைப்பட்டுவிட்டோம் என்பதுதான் அர்த்தம்.**

மாதிரி இப்படிப்போடக்கூடாது என்று ஒவ்வொருவரும் முயற்சிக்கிறார்கள்.

அதனுடைய அதிகப்படியான பிரபலமடையும் தன்மை, அதிக வரவேற்பு காரணமாக நிறைய பேரை ஈர்த்து, அதை அவர்கள் செய்கிறார்கள். அதனால்தான் நீங்கள் குறிப்பிட்டது போன்று திருமணமான நடுத்தர வயதுடைய பெண்கள், வயதானவர்கள், ஏன்.. பேரன் பேத்தி எடுத்தவர்கள் கூட இதைப் பார்த்து பார்த்து ஈர்க்கப்பட்டு அதை ஒரு முன் மாதிரியாக எடுத்து சினிமா பாடலுக்கு நடனம் ஆடுவது என்று வீடியோக்கள் பதிவு செய்கின்றனர்.

**இதில் ஆபாசக் காணொலியும் பதிவு செய்யப்படுகிறதே?**

ஆமாம். இதில் ஆபாசமாகப் பதிவு செய்யும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் இது தனிப்பட்ட முறையில் நாம் மட்டுமே பார்க்கக்கூடிய ஒன்று என்று நினைத்துப் பதிவு செய்கிறார்கள். ஆனால் ஏதோ ஒரு விதத்தில் அது ஷேர் ஆகும்போது உலகம் முழுவதும் அது பரவிவிடுகிறது. இதுபோன்ற வீடியோக்களைச் சேகரித்து அதை யூடியூபில் பதிவு செய்வதற்கென்றே ஆட்கள் உருவாகியுள்ளனர்.

கும்பலாக ஒன்று சேர்ந்து இசைக்கு ஆடுவது, குத்தாட்டம் போடும்போது நம்மை அறியாமல் இணைந்து ஆடுவது போன்றவொரு மனநிலையா இது?

அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. விழாக்களில், நிகழ்ச்சிகளில் கும்பலாக் ஆடுவதும், சாவுக்கு கூத்தாடுவதும் நம்முடைய நரம்பியல் செயல்பாடுகள் சம்பந்தப்பட்ட ஒன்று. குறிப்பிட்ட அந்த கொட்டு மேளம் நம்மை ஆட்டுவிக்கிறது எனலாம். டிக் டொக் குணத்திற்கும் அதற்கும் முற்றிலுமாக வேறுபாடு உண்டு. இதை எதிர்மறை ரோல் மொடல் என்று சொல்கிறோம். நிறைய பேரை இப்படிப் பார்க்கும் பொழுது நாமும் அதேபோல் செய்து பார்க்கவேண்டும் என்ற உந்துதல் செயல்பாடுதான் இது. மற்றபடி இதற்கும் உளவியல் ரீதியான செயல்பாட்டுக்கும் சம்பந்தமில்லை.

**இந்த மோகத்திலிருந்து எப்படி விடுபடுவது?**

இதை நாம் நினைத்தவுடன் நிறுத்திவிடலாம். நமது அந்தரங்கப் பாதுகாப்பு தான் முக்கிய விஷயம். எப்போது நமது அந்தரங்கப் பாதுகாப்புக்குப் பிரச்சினை ஏற்படுகிறது என்று தெரிய வருகிறதோ, அப்போதே அதை உடனடியாக நிறுத்திவிடலாம். நான் ஆரம்பத்திலேயே சொன்ன மாணவி கேஸ்ஹிஸ்டரிதான் அதற்கு ஒரு உதாரணம்.

**சிலர் டிக் டொக்கை டவுன்லோட் செய்து பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுறார்களே?**

டிக் டொக்கைப் பார்த்து நேரத்தைச் செலவிடுவது, மியூசிக்கலி அப்பை, ஃபேஸ்புக்கைப் பார்த்து நேரத்தைச் செலவிடுவது,வட்ஸ் அப்பில்நேரத்தைச் செலவிடுவது இவையெல்லாம் ஒருவகை அடிக்ஷன் எனலாம். நாம் அதிகப்படியான நேரத்தை ஒரு விஷயத்தில் செலவிடுகிறோம் என்றாலே உளவியல் ரீதியாக நாம் அதில் அடிமைப்பட்டுவிட்டோம் என்பதுதான் அதன் அர்த்தம்.

அப்படியானால் தொழில் ரீதியாக பலர் வலைதளத்தில் அதிக நேரம் செலவிடுகிறார்கள் அவர்களும் அவ்வகையா?

வியாபார ரீதியாக இன்டர்நெட்டை உபயோகப்படுத்துகிறார்கள் என்றால் அது இதில் வராது. ஆனால் அதைத் தவிர பொழுதுபோக்காக அதில் தமது நேரத்தை செலவிடும்போது, அதாவது நமக்கு ஒரு வேலை இருக்கும் அதையெல்லாம் விட்டுவிட்டு அதிலேயே ஈடுபடுவது ஒருவகையான அடிமைப்படுதல் ஆகும்.

ஒன்றரை மணி நேரம் நீங்கள் வெட்டியாக ஒரு செயலியிலோ, முகநூலிலோ இருக்கிறீர்கள் என்றால் சந்தேகமே இல்லை நீங்கள் அடிக்ட் ஆகிவிட்டீர்கள் என்று அர்த்தம்.

**வட்ஸ் அப்பில் ஒவ்வொருவரும் அவரவர் மனநிலையில் ஸ்டேட்டஸ் போடுகிறார்கள்.. இது என்னவகை மனநிலை?**

வட்ஸ் அப்பில் ஸ்டேட்டஸ் போடுபவர்கள் ஒரு குறிப்பிட்ட மனநிலையில் இருக்கிறார்கள். அதாவது இளம்பருவத்தினர் காதல் பாடல்கள், சோகப் பாடல்கள் போன்றவற்றைப் போடுகிறார்கள். சிலர் சாகசக் காட்சிகள் மட்டுமே போடுகிறார்கள். இப்படிப் பல வகைகளில் உள்ளனர். ஸ்டேட்டஸ் என்பது அவரவர் மனநிலையைப் பிரதிபலிக்கிறது.

நாம் ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்னர், நம் மனதில் உள்ள அனைத்து விஷயங்களையும் நம்மைச் சுற்றியுள்ள நெருக்கமானவர்களிடம், குடும்ப உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்வோம். அது அப்படியே போய்விடும். வெளியே வராது. நான்கு சுவருக்குள் அடங்கிவிடும். அந்தக் கலாச்சாரமே இப்பொழுது போய்விட்டது. இப்போது பெற்றோர்கள் இருவரும் வேலை செய்கிறார்கள், கூட்டுக் குடும்பம் மாறி தனிக் குடும்ப நிலை ஆகிவிட்டது.

இவர்களுக்குள் பேசுவதற்கு, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதற்கு யாருக்கும் நேரமில்லை. அதனால் அந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு சமீப காலங்களில் இந்த முகநூல், ட்விட்டர், வட்ஸ் அப் ஸ்டேட்டஸ் போன்றவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

அது மாதிரி பரிமாறப்படும் அவர்களது உணர்வுகளை அவர்கள் நட்பு வட்டத்தில் உள்ள யாராவது ஒருவர் வரவேற்கும்போது அல்லது லைக் கொடுக்கும்போது அல்லது பாராட்டும்போது அந்த விஷயம் அவர்களை ஈர்த்து, நம்மையும் கவனிப்பதற்கு ஆள் இருக்கிறது என்கிற மனநிலையை உருவாக்குகிறது.

நாம் பதிவு செய்வதைக் கேள்வி கேட்பதற்கு, அதைப் புகழ்வதற்கு அது பற்றி விவாதிப்பதற்கு ஆள் இருக்கிறது என்று நினைத்து தங்கள் பதிவைப் போட்டுக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் அன்புக்காகஏங்குபவர்களாக இருப்பார்கள். அடுத்தவர்களுடைய கவனம் தங்கள்பால் திரும்ப வேண்டும் என்கிற விருப்பம் உடையவராக இருப்பார்கள்.

நீங்கள் சொல்கிற வகையைத் தாண்டி, தத்துவப் பாடல்கள், காதல் பாடல்கள் போடுபவர்கள், அறிவுரை போடுபவர்கள் என பலர் உற்சாக மனநிலையில் உள்ளனரே?

வகைகள் உள்ளன. நானும் அதைத் தான் சொல்கிறேன். நீங்கள்சொல்லும் அனைத்தும் பொசிட்டிவான எண்ணங்கள். என்னுடைய எண்ணங்கள் பொசிட்டிவாக அல்லது நெகட்டிவாக இருக்கட்டும். ஆனால், அதை நான்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...






பதிவு செய்யும் போது அதைப் பாராட்ட, வரவேற்க, கேள்விகேட்க ஆள் இருக்கும்போது திரும்பத் திரும்ப நான் பதிவு செய்கிறேன்.

நான் ஒரு சுற்றுலா தளத்திற்குச் செல்கிறேன். மகிழ்ச்சியான அந்த நிகழ்வைப் பதிவிடுகிறேன் என்றால் அதை மற்றவர்கள் ரசிக்கிறார்கள் எனும்போது அது என்னை ஈர்க்கிறது. அதே விஷயம் நான் சோகமாக இருக்கிறேன், என்னை வீட்டில் யாரும் பரிவாக கேட்க ஆளில்லை. அதை நான் பதிவு செய்கிறேன். அதற்கு ரியாக்ட் செய்ய, பரிவாகக் கேட்க ஆள் இருக்கிறார்கள் என்றால் நான் அதையும் பதிவு செய்வேன்.

இந்த இரண்டு வகைகளில், அதாவது நல்லதுக்கும் சரி, கெட்டதுக்கும் சரி ஸ்டேட்டஸ் போடும்போது மக்களால் ஈர்க்கப்பட்டு அதனால் தூண்டப்பட்டு திரும்பத் திரும்பப் பதிவு செய்வோம். தற்போது இது அரசியலிலும் வந்துவிட்டது. முன்பு அங்கு இருக்காது. பொதுவாழ்வில் இருக்கும் நபர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடமாட்டார்கள். ஆனால் தற்போது அங்கும் அது வந்து விட்டது.

**ஸ்டேட்டஸ் போடுவது ஒரு வடிகால் என்கிறீர்களா?**

ஆமாம், நிச்சயமாக. அது நல்ல விஷயத்துக்கும் சரி கெட்ட விஷயத்திலும் சரி மக்கள் அதை தற்போது பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் ஒருவர் அடிக்கடி ஒரு எதிர்மறையான விஷயத்தை அவரைப் பாதிக்கும் விஷயத்தை பகிர்ந்து கொண்டு இருந்தால், மனஅழுத்தத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டால் அவர் தற்கொலை மனப்பான்மையில் இருக்கிறார். அவர் இலேசாக அதை வெளிப்படுத்தும்போது சுற்றி இருப்பவர்கள் அதைக் கவனித்து அவருக்கு உதவுவது முக்கியம்.

நன்றாக இருந்த ஒருவர், திரும்பத் திரும்ப எதிர்மறைப் பதிவுகளைச் செய்யும் பொழுது அவர் தற்கொலை மனப்பான்மையின் முதல் படியில் இருப்பதற்கான ஒரு சமிக்ஞை கொடுக்கிறார் என்று அர்த்தம். அதை எல்லாம் நாம் கவனித்தோம் என்றால் நல்லது. குடும்பத்தில் பெரியவர்கள் கொஞ்சம் தங்களுடைய பிள்ளைகளின் ஸ்டேட்டஸ்களை கவனித்துப் பார்த்தால் அது அவர்களுடைய மனநிலையை அறிய உதவியாக இருக்கும். அதை நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

**அப்படி யாராவது பிரச்சினையுடன் வந்துள்ளார்களா?**

ஒரு க்ளைண்ட் என்னிடம் வந்தார். அவர் ஒரு மாணவர். எப்போதுமே சோகமாக இருக்கின்ற படங்கள் பதிவிடுவார். வீட்டுக்கு ஒரே பையன். அப்பா கிடையாது. அவனுடைய தாயார் அவனுக்காக எல்லாச் செலவுகளையும் செய்வார். ஆனால் அவனை சிறுவிஷயத்தில் கூட தாயார் கண்டித்தது கிடையாது.

ஒருநாள் பேருந்தில் ஓட்டுநர் சாதாரணமாகத் திட்டியுள்ளார் அதனால் அந்தச் சிறுவன் மிகவும் பாதிக்கப்பட்டு, என்னை யாரும் திட்டியதே இல்லை இவர் திட்டி விட்டாரே என்று குழம்ப ஆரம்பித்து விட்டார். எதிர்மறைப் பதிவுகள் பதிய ஆரம்பித்துவிட்டார். யாரிடமும் வெளிப்படையாக அந்த மாணவன் பேசமாட்டான், இந்த வகையானவர்களை introvert என்று அழைப்போம்.

அதாவது யாரிடமும் வெளிப்படையாகப் பேச மாட்டார்கள். ஆனால், போட்டோ வடிவில், எழுத்து வடிவில் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்திக்கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள். பின்னர் சைபர் எஃபெக்ட் (cyber effect) முறையில் அவரது நிலை அறிந்து சிகிச்சை அளித்தோம்.

எங்களிடம் வரும் க்ளைண்ட்களை அவர்களுடைய தன்மைகளை ஆராய அவர்களுடைய ஸ்டேட்டஸ் செக் செய்வோம். கூகுள் ஹிஸ்ட்ரியையும் ( google search history) ஆராய்வோம். அதிலேயே அவர்களுடைய பிரச்சினைகளைக் கண்டுபிடிப்போம். இதற்கு பெயர் சைபர் எஃபெக்ட் என்போம். இதன்மூலம் எளிதாக அவர்களுடைய மனநிலையைக் கண்டுபிடித்து விடலாம்.

காரணம் இன்று பெரும்பாலானவர்கள் தங்கள் மனநிலையை இதுபோன்று ஸ்டேட்டஸ் மெசேஜ் மூலம் வெளிப்படுத்துவதிலும், கூகுளில் தேடுதலிலும் வெளிப்படுத்துகிறார்கள். அதை ஆராயும்போது அவர்கள் மனநிலை எதை நோக்கிப் போகிறது என்று சுலபமாக கண்டுபிடிக்கலாம். ஹிப்னாடிசம் செய்து அறிவது போன்று இதை ஆராய்ந்தே தற்போது கண்டுபிடிக்கிறோம்.

**செல்ஃபி எடுத்து போடும்போது வரவேற்பு கிடைக்கவில்லை என்றால் செல்ஃபி எடுப்பது குறைந்துவிடும். ஆனால் வரவேற்பு கிடைத்தால் அது அதிகரித்துக் கொண்டே செல்லும். இதை சந்தோஷமாக இருப்பவர்களும் செய்வார்கள். சோகமாக இருப்பவர்களும் செய்வார்கள்.**





**சிலர் அதிகமாக செல்ஃபி எடுத்து அதை ஸ்டேட்டஸ் ஆகப் பதிவிடுகிறார்கள். இது என்ன மனநிலை?**

இது வேறு வகை, இது மனதுக்கு வடிகால் என எடுக்க முடியாது. ஒரு பிரபலத்துடன் போட்டோ எடுத்தால் தனக்கு ஒரு பெருமை. நம்மைவிடப் பெரிய பதவியில் இருக்கும் நபருடன் போட்டோ எடுத்தால் ஒரு பெருமை. சாதனையாளர்களுடன் செல்ஃபி எடுத்தால்அது ஒரு பெருமைக்குரிய விஷயம் என நினைப்பதும் செல்ஃபி எடுப்பதும் ஒரு வகை.

ஆனால் தன்னைத்தானே திரும்பத் திரும்ப எடுத்துப் பதிவு செய்தாலோ, எடுத்துக்கொண்டிருந்தாலோ அதை கவன ஈர்ப்பு செயல் (attention seeking behavior) என்று சொல்வோம்.

அடிக்கடி செல்ஃபி எடுக்கும் மனநிலையை மாற்ற என்ன வழி?

அவர்கள் செல்ஃபி எடுத்து போட்டு ஒருநாள், ஒரு இடத்தில் கூட லைக் வரவில்லை என்றால் பிறகு அவர்கள் செல்ஃபி எடுக்க மாட்டார்கள் அல்லது எடுத்த செல்ஃபியை அதிகமாக மாற்றம் செய்து போடுவார்கள்.

செல்ஃபி எடுத்து போடும்போது வரவேற்பு கிடைக்கவில்லை என்றால் செல்ஃபி எடுப்பது குறைந்துவிடும். ஆனால் வரவேற்பு கிடைத்தால் அது அதிகரித்துக் கொண்டே செல்லும். இதை சந்தோஷமாக இருப்பவர்களும் செய்வார்கள். சோகமாக இருப்பவர்களும் செய்வார்கள்.

**டிக்டொக் செயலியில் காணொலி பதிவு செய்வது, ஆபாசப் படங்களை எடுப்பவர்களுக்கு நாமே நம் காணொலியை அளிப்பது ஆபத்தாகாதா?**

கண்டிப்பாக இதில் ஆபத்து இருக்கிறது. டிக்டொக்கில் காணொலிப் பதிவு செய்பவர்கள் அதை சினிமா உலகிற்குள் நுழையும் வாய்ப்பாகப் பயன்படுத்தி காணொலியை வெளியிடுகிறார்கள்.

அதேபோன்று, எக்ஸிபிசனிசம் (Exibitionism) என்று சொல்வோம்.. தன்னுடைய ஆடைகளை, அங்கங்களை மற்றவர்களுக்கு காண்பிப்பதன் மூலம் சந்தோஷமடைவது. இது ஒருவகையான மனநோய். அவ்வாறு பதிவிட்டு அதைப் பார்ப்பவர்கள் மூலம் வருகின்ற பாராட்டுகளை விரும்பி, மீண்டும் மீண்டும் பதிவுசெய்யக்கூடிய ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள்.

எந்தவிதக் காரணமும் இல்லாமல் நம்முடைய அங்கங்களைப் பொதுவெளியில் காண்பிக்க வேண்டும் என்று எண்ணுவதும் ஒருவகையான மனநோய் தான்.

**இதுபோன்ற காணொலிகளைப் பதிவு செய்யும்போது அதை தவறான நபர்கள் மாற்றி அமைத்து ஆபாச வீடியோக்களாக மாற்றியமைக்க வாய்ப்பு உண்டல்லவா?**

நிறைய உண்டு. நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி அந்த செட்டிங்கில் தனிப்பட்ட பகுதி என்பதை மீறி ஷேர் என தட்டிவிட்டால் உங்களுடைய காணொலி உலக அளவில் சென்று விடும். அது சிலபேருக்குத் தெரிவதில்லை. ஸ்மார்ட் போன் கையில் இருப்பதால் உடனடியாக காணொலியை எடுத்துப் பதிவிட்டு விடுகிறார்கள்.

**இதனால் என்ன பாதிப்பு வரும்?**

இது பாதுகாப்பான நடைமுறை அல்ல. நீண்டகாலப் பாதிப்பாக இதைப் பார்த்தால் அது உளவியல் ரீதியாகவும் அனைவரையும் பாதிக்கும் விஷயம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

காரணம், நம்முடைய அதிகமான நேரத்தை டிக் டொக் போன்ற செயலிகளில் செலவிடுவதால் நம்முடைய வழக்கமான செயல்களில் இருந்து மாறுபடுகிறோம். தனிமைப்படுகிறோம் அது நம்முடைய வாழ்க்கை நிலையை பாதிக்கும். சட்டப்படியாக பார்க்கப் போனாலும் என்றாவது ஒருநாள் இதுவே நமக்கு ஒரு பிரச்சினையாக மாறிவிடக்கூடும்.

**பெண்களை இது எவ்வாறு பாதிக்கும்?**

ஓர் இளம்பெண் சாதாரணமாகப் பதிவிடும் ஒரு காணொலி, அவரது திருமண வாழ்விலோ, அல்லது திருமணமே தடைபடக் கூடிய வாய்ப்புகூட ஏற்படும். இந்த பிரச்சினைகள் அதிகப்படும்போது மன உளைச்சல் ஏற்பட்டு தற்கொலை முடிவை தேடும் நிலை கூட உருவாக நேரிடும். எனக்குத் தெரிந்தே நிறைய சம்பவங்கள் நடந்துள்ளன. விளையாட்டாகத் தொடங்கும் இதுபோன்ற செயல்கள் எமனாக மாறிவிடும் வாய்ப்பு உண்டு.

இவ்வாறு உளவியல் நிபுணர் இளையராஜா பதிலளித்தார்.

# ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள் 2019

## (சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் ராசிகளுக்கானது)

**2019**ம் ஆண்டுக்கான ஆங்கில புத்தாண்டு பலன்களை ஜோதிடர் கே.சி.எஸ்.ஐயர் கணித்து வழங்கியுள்ளார். முதல் நான்கு (சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம்) ராசிகளுக்கான பலன்கள் இந்த வாரம் இடம்பெறுகின்றன. அடுத்த வாரங்களில் மிகுதி தொடரும்.



### சிம்மம் (மகம், பூரம்,உத்திரம் முதல் பாதம் முடிய)

இந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை உள்ள காலகட்டத்தில் செய்தொழிலில் அபிவிருத்தியைக் காண்பீர்கள். பொருளாதாரத்தில் இருந்த ஏற்ற இறக்கங்கள் மறைந்து சீராக வருமானம் வரத்தொடங்கும். அலைச்சல்கள் குறையும். மறைமுகமாக சங்கடங்கள் கொடுத்துக் கொண்டிருந்த நண்பர்கள் இணக்கமாகப் பழகத் தொடங்குவார்கள்.

இல்லத்திற்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். உபரி வருமானங்களும் அவ்வப்போது கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் பேச்சுக்கு மதிப்பு கொடுப்பார்கள். நீண்ட நாளைய குலதெய்வப் பிரார்த்தனை ஒன்றை செயல் படுத்துவீர்கள். மனதை அரித்துக் கொண்டிருந்த பிரச்னைகள் தானாகவே தீர்ந்துவிடும். உங்களின் அனுபவ அறிவு தக்க சமயத்தில் கைகொடுக்கும். பேச்சினால் தொழில் செய்பவர்கள் சிறப்பான ஏற்றங்களைக் காண்பார்கள். தாய் நலன் கூடும்.

உடல் உழைப்பைக் கூட்டிக் கொள்வீர்கள். பொதுச்சேவையில் ஈடுபடுவீர்கள். எதிரிகளை அவர்கள் போக்கிலேயே சென்று உங்கள் வசப்படுத்திக் கொண்டு விடுவீர்கள். உற்றார் உறவினர்களும் நன்மைகளை அடைவார்கள். திடீரென்று சம்பந்தமில்லாதவர்கள் வந்து உங்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பார்கள்.

ஜூலை மாதம் முதல் ஆண்டு இறுதிவரை உள்ள காலகட்டத்தில் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும். நவீன வண்டி வாகனங்களை வாங்குவீர்கள். உங்கள் புத்திசாலித்தனம், தன்னம்பிக்கை இரண்டும் கூடும். மேலும் உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளை கொட்டிவிட நேரிடும். தீயோரின் சேர்க்கையை தவிர்த்து விடவும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். புதிய முயற்சிகளை நண்பர்களைக் கலந்தாலோசித்த பின்பே செயல்படுத்தவும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்தடையும். வருமானத்தில் இருந்த சிரமங்கள் குறையும். தடைப்பட்டிருந்த காரியங்கள் தாமதமின்றி எளிதாக நிறைவேறும். மனவருத்தங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும். விலகி இருந்த உறவினர்கள் தேடி வருவார்கள்.

செய்தொழிலில் பலவித புதிய யுக்திகளைப் புகுத்துவீர்கள். அரசாங்கத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். சிலருக்கு திடீர் திருமண யோகம் உண்டாகும். சிலர் இருக்கும் வீட்டை விற்று விட்டு புதிய வீடு வாங்கிச் செல்லும் வாய்ப்புகள் உண்டாகும். வாக்கு கொடுக்கும்போது கவனமாக இருக்கவும். வழக்குகளில் எதிர்பார்த்த தீர்ப்பு கிடைக்க சிறிது தாமதமாகும். பூர்வீகச் சொத்து விஷயங்களில் சமரசமாகச் செல்வதே நலம் பயக்கும். எவரிடமும் விதண்டாவாதம் செய்ய வேண்டாம்.

உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து நடந்து கொள்ளவும். சக ஊழியர்களிடம் நட்போடு பழகுவீர்கள். உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறும். மனதில் ஓர் அனாவசியப் பதட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும். வியாபாரிகள் கடுமையாக உழைத்து வருவாய் ஈட்டி முக்கிய பிரச்னைகளை சமாளித்து விடுவீர்கள். மேலும் சில சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடலாம்.

கூட்டாளிகளிடம் சற்று கவனமாகப் பழகவும். அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று புதிய கடன்கள்வாங்கிவியாபாரத்தைமேலும் விரிவுபடுத்தவும். விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். கால்நடைகளாலும் நல்ல பலன் கிடைக்கும். சிலருக்கு வழக்குகளால் மன உளைச்சல் ஏற்படும். இருப்பினும் முடிவு சாதகமாகவே இருக்கும்.

அரசியல்வாதிகள் எந்த வேலையையும் நன்றாகத் திறம்படச் செயல்படுத்துவீர்கள். தொண்டர்களின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கும். உங்களுக்கு எதிராக தீட்டப்பட்ட சதிகள் உங்களை பாதிக்காது. புதிய பதவிகள் உங்களைத் தேடி வரும். கலைத்துறையினரின் ஆற்றல் அதிகரிக்கும். பெயரும் புகழும் உயரும். பணவரவு எதிர்பார்த்ததுபோல் இல்லாவிட்டாலும் தேவைகள் பூர்த்தியாகும்.

பெண்மணிகள் மன நிம்மதியைப் பெறுவார்கள். தர்ம காரியங்களிலும் தெய்வ வழிபாட்டிலும் ஈடுபடுவார்கள். குடும்பத்தில் அனைவரையும் அவர்கள் போக்கிலேயே விட்டுக்கொடுத்து இணக்கமாக்கிக் கொள்ளுங்கள். மாணவமணிகள் கல்வியில் அக்கறை காட்டினால் எதிர்பார்த்த மதிப்பெண்களை அள்ளலாம். ஆசிரியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

*பரிகாரம்:* பெருமாள் தாயாரை வழிபடவும்.

### கன்னி (உத்திரம் 2ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2ம் பாதம் முடிய)

இந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை உள்ள காலகட்டத்தில் மனதில் இருந்த குழப்பங்கள் விலகிவிடும். மனம் ஒருநிலைப்படும். முன்யோசனையுடன் செயல்களைச் செய்வீர்கள். வறுமையிலிருந்து விடுபடுவீர்கள். வருமானம் படிப்படியாக கூடத் தொடங்கும். பொன்பொருள் சேர்க்கையும் உண்டாகும். செயல்களில் அவசரம் காட்டாமல் விவேகத்துடன் செயல்படுவீர்கள்.

எதிர்பாராத இடங்களிலிருந்து புதிய வாய்ப்புகளும் கிடைக்கும். அகந்தை அகன்று அனைவரிடமும் பணிந்து செல்லும் சுபாவம் கூடும். இதனால் எளிமையாக படாடோபம் இல்லாமல் காரியமாற்றுவீர்கள். உங்களை ஏமாற்ற நினைத்தவர்களே ஏமாறுவார்கள். தெய்வக் காரியங்களில் மனதைச் செலுத்துவீர்கள். மற்றவர்களின் எண்ணங்களை முன்கூட்டியே புரிந்து கொள்வீர்கள்.

ஏழைஎளியவர்களுக்கும் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களுக்கும் உதவி செய்வீர்கள். வசதி வாய்ப்புகள் பெருகும். குடும்பத்தில் ஒற்றுமையை காண்பீர்கள். பதவி உயர்வு, புதிய பொறுப்புகளும் கிடைக்கும். மற்றவர்கள் உங்கள் அறிவுரையை கேட்பார்கள். ஆற்றலுடன் சாதனைகள் செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

ஜூலை மாதம் முதல் ஆண்டு இறுதிவரை உள்ள காலகட்டத்தில் சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்கிற பழமொழிக்கு ஏற்றபடி செலவுகளையும் விரயங்களையும் கட்டுப்படுத்தி சேமிப்புகளை உயர்த்திக்கொள்வீர்கள். எவரையும் பகைத்துக் கொள்ளாமல் நயமாகப் பேசி பழகுவீர்கள். செயல்களில் குறுக்கு வழியைத் தவிர்த்து நேரிடையாகச் செய்து முடிப்பீர்கள். நெடுநாள்களாக பாதிக்கப்பட்டிருந்த உடல் உபாதைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

சமுதாயத்தில் பெருமைமிக்க புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். உங்கள் நிர்வாக ஆற்றல் அதிகரிக்கும். உயர்ந்தவர்களின் நட்பு தானாகவே கிடைக்கும். வேகமாக இயங்குவீர்கள். ஆன்மிகத்திலும் நாட்டம் அதிகரிக்கும். புனிதப் பயணங்களையும் மேற்கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் இந்த ஆண்டு கவனம் சிதறாமல் வேலைகளை பட்டியலிட்டு உழைப்பீர்கள். மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சக ஊழியர்களிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்வீர்கள். வருமானம் நன்றாக இருக்கும். அலுவலக ரீதியான பயணங்களில் நன்மை உண்டாகும். திடீர் இடமாற்றம் ஏற்பட்டு உங்களை திக்குமுக்காடச் செய்யும். இவ்வாண்டு உழைப்பு வீண் போகாது.

வியாபாரிகள் கூட்டுத்தொழிலில் நன்மைகளைக் காண்பார்கள். கொடுக்கல் வாங்கல்களில் படிப்படியாக முன்னேற்றத்தைக் காண்பீர்கள், புதிய சரக்குகளை வாங்கி கடையை விரிவுபடுத்துவீர்கள். விவசாயிகளுக்கு

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

மகசூல் அதிகரிக்கும். இதனால் புதிய வாழ்க்கை வசதிகள் உருவாக்கிக் கொள்வீர்கள். உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களை அதிகமாக நம்ப வேண்டாம். கால்நடைகளை கவனமாக பராமரிக்கவும்.

அரசியல்வாதிகளுக்கு கட்சியில் மதிப்பும் மரியாதையும் உயரும். பல வழிகளிலும் வருமானம் கிட்டும். தங்களைச் சார்ந்துள்ள கட்சியில் மாற்றங்களைக் கொண்டு வர முயல்வீர்கள். எதிரிகளின் தந்திரங்களை எச்சரிக்கையுடன் கவனித்து வரவும். திட்டமிட்ட வேலைகளில் முன் கூட்டியே யோசித்துச் செயல்படவும். மேலிடத்தின் பார்வை உங்கள் மீது விழுவதால் எதையும் ஓர் உத்வேகத்துடன் செய்து முடிப்பீர்கள். தொண்டர்களின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளுங்கள்.

கலைத்துறையினர் இந்த ஆண்டு வரவேற்புகள் அதிகரிக்கும். திறமைக்குத் தகுந்த அங்கீகாரமும் விருதுகளும் கிடைக்கும். பொருளாதார நிலை சீராக இருக்கும். மனதில் எழும் எண்ணங்களை உடனுக்குடன் செயல்படுத்த வேண்டாம். பெண்மணிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். கணவர் உங்களை மதித்து நடப்பார்.

குடும்பத்தில் குழப்பங்கள் குறைந்து அமைதி நிலவும். உங்கள் வாக்குச் சாதுர்யம் கூடும். பொருளாதார நிலையில் சுபிட்சம் காணப்படும். பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவீர்கள். மாணவமணிகள் கல்வியில் பெருமைபடும்படியாக மதிப்பெண்களைப் பெறுவீர்கள். நண்பர்களிடம் ஒற்றுமையுடன் இருக்கவும்..

*பரிகாரம்:* ஸ்ரீ கிருஷ்ணரை வழிபட்டு சிறப்படையுங்கள்.

### துலாம் (சித்திரை 3ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3ம் பாதம் முடிய)

இந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை உள்ள காலகட்டத்தில் செய்தொழிலை விரிவுபடுத்த புதிய வியூகத்தை செயல்படுத்துவீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். அவர்களால் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். தயங்காமல் முடிவு எடுக்கும் திறமையினால் முன்னேற்றத்திற்கான வாசற் கதவைத் திறப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் செய்யும்போது விதிவிலக்குகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள்.

ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி பூத்துக் குலுங்கும். உற்றார் உறவினர்கள் தேடி வந்து ஆதரவு கொடுப்பார்கள். பிரச்னை ஏற்படக்கூடிய விவாதங்களில் உங்கள் கருத்தைக் கூறாமல் "கழுவுகிற மீனில் நழுவுகிற மீன்' என்பதுபோல் நழுவி விடுவீர்கள். திடமாகச் சிந்தித்து செயல்படுத்துகின்ற காரியங்களில் முன்வைத்த காலைப் பின் வைக்காமல் செயலாற்றி வெற்றி பெறுவீர்கள். நீண்டகாலமாக நிலுவையிலிருந்த வழக்கு விவகாரங்கள் உங்களுக்குச் சாதகமாக முடியும். பெற்றோர் வழியில் இருந்த பிணக்குகள் மறைந்து சகஜ நிலை உண்டாகும். வரவேண்டிய பணம் எவ்வகையிலாவது உங்கள் கை வந்து சேர்ந்து விடும். நீண்டகால எண்ணம் ஒன்று இந்த காலகட்டத்தில் ஈடேறக் காண்பீர்கள். குடும்பத்துடன் வெளியூர் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா சென்று வருவீர்கள்.

ஜூலை மாதம் முதல் ஆண்டு இறுதிவரை உள்ள காலகட்டத்தில் அலைபாயும் மனது தெளிந்த நீரோடை போலாகும். நேர்முக மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். சமுதாயத்தில் உயர்ந்தவர்களின் அன்பையும் ஆதரவையும் பெறுவீர்கள். பூர்வீகச் சொத்துகள் உங்கள் கையை வந்தடைந்து அதிலிருந்து வருமானமும் வரத்தொடங்கும். தர்ம காரியங்களுக்கும் சிறிது செலவு செய்வீர்கள். எதிர்வரும் ஆபத்துகளை உங்கள் உள்ளுணர்வால் புரிந்து கொண்டு அவைகளின் தாக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள்.

நஷ்டத்தில் நடந்து வந்த தொழிலை புதுப்பித்து லாபத்துடன் இயக்குவீர்கள். உங்களுக்குக்கீழ் வேலை செய்பவர்கள் உங்கள் எண்ணங்களைப் புரிந்து கொண்டு நடப்பார்கள். வெளிவட்டாரத்திலிருந்து நல்ல செய்தியைக் கேட்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கும். உங்கள் பகைவர்களுக்கு தோல்வி உண்டாகும். உங்களுக்கு எதிராகப் பின்னப்பட்ட சதிவலையிலிருந்து மீண்டு தலை நிமிர்ந்து நடப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு இந்த ஆண்டு குறைவாகக் கிடைக்கும். கொடுத்த வேலைகளை குறித்த காலத்திற்குள் முடிக்க முயற்சி செய்யவும். உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தையும் பெறுவீர்கள். மேலதிகாரிகளிடம் பொறுமையும் நிதானமும் அவசியம். சக ஊழியர்களிடம் அனுசரித்துச் செல்லுங்கள். எவரிடமும் அனாவசிய வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். சிறிய தடைகளுக்குப்பிறகு வீடு கட்ட கடன்கள் கிடைக்கும்.



வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் அனுகூலமான சூழ்நிலைக் காணப்படும். பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தவர்கள் வருமானம் சீராக இருந்தாலும் தொழிலை பெரிய அளவுக்கு விரிவுபடுத்த முடியாத அளவுக்கு இருக்கும். விவசாயிகளுக்கு மகசூல் அதிகரிக்கும். புதிய குத்தகைகளின் மூலம் லாபம் பெறுவீர்கள். புதிய வாழ்க்கை வசதிகளும் பெருகும். விவசாயப் பணியாளர்களை அரவணைத்துச் செல்லவும்.

அரசியல்வாதிகளிடம் கட்சி மேலிடம் கருணையோடு நடந்து கொள்ளும். புதிய பொறுப்புகளையும் வழங்கும். பொதுச்சேவையில் புதிய திருப்பங்கள் உண்டாகும். தொண்டர்களை அனுசரித்துச் சென்று அவர்களின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளவும். அனாவசியப் பயணங்களைத் தவிர்க்கவும். கலைத்துறையினருக்கு புகழும் நற்பெயரும் அதிகரிக்கும். பணவரவுக்கும் குறைவு வராது. சில ஆடம்பரச் செலவுகளைச் செய்து மகிழ்வீர்கள்.

பெண்மணிகளுக்கு கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் நல்ல மதிப்பு கிடைக்கும். குழந்தைகளின் எதிர்காலத்தில் கவனம் செலுத்துவீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். சேமிப்பு விஷயங்களில் கவனம் செலுத்துவீர்கள். மாணவமணிகள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். பெற்றோரிடம் கிடைக்கும் ஆதரவு உங்களுக்கு உந்து சக்தியாக அமையும்.

*பரிகாரம்:* செவ்வாயன்று முருகப் பெருமானைவழிபடவும்.

### விருச்சிகம் (விசாகம் 4ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

இந்த 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை உள்ள காலகட்டத்தில் எடுத்த காரியங்கள் சரியான இலக்கை நோக்கிச் செல்லும். அரசு வகையில் உங்கள் முயற்சிகள் வெற்றி பெறும். எதிர்பார்த்த சலுகைகளைப் பெறுவீர்கள். கூட்டாளிகளும் நண்பர்களும் உங்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பார்கள். சமுதாயத்தில் உங்களது முக்கியத்துவம் கூடும். சோம்பலை மூட்டைக் கட்டி வைத்துவிட்டு சுறுசுறுப்புடனும் தன்னம்பிக்கையுடனும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் உங்கள் புகழ் பரவி, உங்களுடன் நட்புகொள்ள அந்தஸ்திலுள்ளவர்கள் விரும்புவார்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். உடன்பிறந்தோருக்கு உதவிகரமாக இருப்பீர்கள்.

பெற்றோர்களின் உடல்நலத்தில் கூடுதல் அக்கறை செலுத்துவீர்கள். குழந்தைகளின் முன்னேற்றமும் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும். அவர்களின் வளர்ச்சிக்கு சமுதாயத்தில் அந்தஸ்தானவர்கள் உதவுவார்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். வருமானம் சீராக இருப்பதால் பழைய கடன்களை அடைத்து விடுவீர்கள். சண்டைச் சச்சரவுகள் முடிவடையும். சிலர் வெளியூர் வெளிநாடுகளிலிருந்து நல்ல செய்திகளைப் பெறுவார்கள். மணமாகாதவர்களுக்கு திருமணம் நடைபெறும். கூட்டுத்தொழிலில் லாபமும் கூட்டாளிகளிடம் நேசமும் மற்றும் அவர்களின் அபிமானமும் உண்டாகும். பயணங்களால் லாபம் உண்டாகும்.

ஜூலை மாதம் முதல் ஆண்டு இறுதிவரை உள்ள காலகட்டத்தில் எடுத்த காரியங்களில் வெற்றி தேடி வரும். எவருடன் பழகுகிறீர்களோ அவர்களால் நற்பலன்கள் பெறுவீர்கள். அந்தஸ்தான பதவிகள் கிடைக்கும். பெயரும் புகழும் உயரும். உடன்பிறந்தோர் மூலம் நலமுண்டாகும். செயற்கரிய சாதனைகள் செய்யவும் மற்றவர்களின் பாராட்டுகளைப் பெறவும் வாய்ப்பும் யோகமும் உண்டாகும். எதிர்பாராத வகையில் புதிய சொத்து வாங்கும் யோகமும் உண்டாகும்.

புதிய இடங்களுக்குச் சென்று அங்கு சிறிதுகாலம் தங்கி வருமானம் உயரக் காண்பீர்கள். மறைமுகமாக பகைமை பாராட்டியவர்கள் பலமிழந்து உங்களுக்கு கைகொடுப்பார்கள். குழந்தைகளிடம் விட்டுக்கொடுத்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். கடினமாக உழைத்து செயலாற்றுவீர்கள். உடல் உபாதைகளிலிருந்தும் விடுபடுவீர்கள். போட்டிபந்தயங்களில் கலந்து கொள்ளும் ஆண்டாக இது அமைகிறது என்றால் மிகையாகாது.

உத்தியோகஸ்தர்களுக்கு அந்தஸ்தும் கௌரவமும் கூடும். சிலருக்கு அலுவலக பயிற்சிக்காக வெளிநாடு சென்று வரும் வாய்ப்புகளும் கிடைக்கும்.. பதவி உயர்வு கிடைப்பதுடன் மேலதிகாரிகளின் நம்பிக்கைகளுக்கும் பாத்திரமாவீர்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் சீராக இருக்கும். புதிய முதலீடுகளில் சற்று கவனத்துடன் ஆலோசித்து ஈடுபடவும். கடன்கள் அடையத் தொடங்கும். விவசாயிகளுக்கு மகசூல் அதிகரித்து அதனால் நல்லெண்ணத்தைப் பெறுவீர்கள். நெருங்கியவர்களுக்கு உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். புதிய கடன்கள் கிடைத்து விளைச்சலில் புதிய யுக்திகளைப் புகுத்துவீர்கள்.

அரசியல்வாதிகள் முயற்சிக்குத் தகுந்த பாராட்டுகளை கட்சி மேலிடத்திடம் இருந்து பெறுவீர்கள். தொண்டர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மேன்மையடைவீர்கள். கட்சியில் உங்கள் மதிப்பு மரியாதை உயரும். பயணங்களால் நன்மை உண்டாகும். வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். வெளியிலும் உங்கள் புகழ், செல்வாக்கு உயரும். மேலிடத்தின் கட்டளைகளை நிறைவேற்றி நற்பெயர் எடுப்பீர்கள். கலைத்துறையினர் புகழும் பெருமையும் கூடும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். முயற்சியும் உழைப்பும் நன்மை பயக்கும். கைநழுவிப்போன வாய்ப்புகளும் மறுபடியும் உங்கள கைக்கே வந்து விடும்.

பெண்மணிகளுக்கு கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். பெரியோர்களின் ஆசியைபெற்று ஆன்மபலத்தைக் கூட்டிக் கொள்ளுவீர்கள். எதையும் புரிந்து கொண்டு செயல்படவும். வெளிப்படையாகப் பேசுவதைத் தவிர்க்கவும். உடன்பிறந்தோரிடமிருந்த மனக்கசப்புகள் மறைந்து சகஜநிலைமை உருவாகும். மாணவமணிகளின் நினைவாற்றல் பெருகும். தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.


*பரிகாரம்:* ஸ்ரீ ஐயப்பனை வழிபட்டு வரவும். (தொடரும்)



## சொல்லேர் உழவு

# மாட்டேனும், மாண்டேனும் ஒன்றா? 14

கவிஞர் மகுடேசுவரன்



பேச்சுத் தமிழில் நிறையவே சொற்கள் இருக்கின்றன. அவை அகராதிகளின் படியேறாமல் தேங்கிக் கிடக்கின்றன. பொதுமக்களின் பேச்சு மட்டத்தில் அவை நற்பொருள் தருகின்றவையாகவும் பேசத் தகுந்தவையாகவும் இருக்கையில் எப்படி அகராதிகள் அவற்றைப் புறக்கணித்தன? வேண்டுமென்றே அவை புறக்கணிப்பட்டன என்று கூற இயலாதுதான். ஆனால், மக்கள் வாய்மொழியைக் கருத்தில் கொள்ளாமல் விட்டனர் என்று உறுதியாகக் கூற முடியும்.

சில பகுதிகளில் 'மாட்டேன்' என்று சொல்வதற்குப் பதிலாக 'மாண்டேன்' என்று சொல்வார்கள்.

'நீ கேட்டதுக்கு நான் மாண்டேன்னா சொன்னேன்?' என்பார்கள். 'அவன் வரமாண்டேங்கிறான்...' என்பார்கள். 'எடத்தைக் கொடுக்கச் சொல்லி எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன்... எல்லாரும் மாண்டேன்னுட்டே இருக்கறாங்க...' என்று கூறுவார்கள்.

இந்த 'மாண்டேன்' என்ற சொல் ஆராய்ச்சிக்குரியது. மாட்டேன் என்பதன் பேச்சு வழக்காக மாண்டேன் என்ற சொல் பயில்வதாகத் தோன்றும்.

இலக்கணத்தில் மெலித்தல் விகாரம் என்று ஒன்று இருக்கிறது. வல்லின மெய் தோன்ற வேண்டிய இடங்களில் மெல்லின மெய் தோன்றி வன்மை ஒலிப்பை மென்மையாக்குவது. இத்தகைய விகாரங்கள் செய்யுள்களில்தாம் தோன்றும் என்று இலக்கணத்தை அடியொற்றியே நிற்க வேண்டுவதில்லை. பேச்சுப் பயன்பாடு வரைக்கும் இறங்கி வராத இலக்கணக் கூறுகளே இல்லை.

மெலித்தல் விகாரத்தில் தட்டை என்பது தண்டை என்றாகிவிடும். தொப்பி என்பது தொம்பி என்றாகும். புத்தி புந்தியாகும். கலப்பு அகம் என்ற இரு சொற்சேர்க்கையே கலப்பகமாகி மெலித்தல் விகாரமடைந்து கலம்பகம் ஆயிற்று. ஆக, கலம்பகம் என்று தனிச்சொல் பயிலும்போதும்கூட மெலிந்து விகாரமடையும் என்பதை ஏற்பர். சொற்களில் தோன்றிய வல்லின மெய் மெல்லின மெய்யாகி அச்சொல்லின் வன்மையை நீக்கி மென்மையாக்கித் தருவது மெலித்தல் விகாரத்தின் பணி. அதன்படி மாட்டேன் என்பது மாண்டேன் ஆகிற்றா என்று ஆராய்வது ஒரு பார்வை.

அடுத்து தன்வினை, பிறவினை என்று இருகூறுகள் இருக்கின்றன. மாண்டேன் என்ற சொற்பயன்பாட்டை மாட்டேன் என்பதோடு தொடர்புபடுத்தி நோக்கினால் தன்வினை, பிறவினைப் பொருட்பாட்டுக்கு வாய்ப்பிருக்கிறது.

மீண்டான், மீட்டான் என்கிறோம். தானே மீள்வது மீண்டான் என்னும் தன்வினை. தான் பிறிதொன்றை மீளும்படி செய்வித்தால் மீட்டான் என்று பிறவினை ஆகும்.

வெள்ளத்திலிருந்து எப்படியோ நீந்தி மீண்டான். வெள்ளத்தில் விழுந்தவர்களைத் துணிந்து நீரில் இறங்கி மீட்டான். இரண்டு ஒரே செயல்தான். தனக்குச் செய்துகொண்டது, பிறர்க்குச் செய்வித்தது என்னும் இருவகையால் வேறுபடுகிறது. அதுதான் தன்வினை, பிறவினை எனப் பயிலும் வினைச்சொற்களின் பொருள் வேறுபாடு. தன்வினை பிறவினை வேறுபாடுகளோடு பயிலும் எண்ணற்ற சொற்கள் கொங்குத் தமிழில் கலந்திருக்கின்றன. நான் முன்பே சொன்னதுதான், தாட்டிவிடுவது என்ற சொல்லை இங்கே பேச்சு வழக்கில் பயன்படுத்துகிறோம்.

'ஃபையனை வீடு வரைக்கும் அனுப்பி விடுங்க.. வேலை முடிஞ்சதும் உடனே தாட்டி விட்டுர்ரேன்...'

'பொண்ணுக்கு நல்ல மாப்பிள்ள அமைஞ்சதும் காலா காலத்துல தாட்டி விட்டுர்ர வேண்டியதுதான்...'

'கிணத்துல தண்ணி கம்மியாத்தான் இருக்குது... இன்னும் இரண்டு பாத்திக்குத் தாட்டுமான்னு தெரியில...'

இவை தாட்டுதல் என்ற வினைச் சொற்பயன்பாட்டில் அமைந்த பேச்சு வழக்குகள். தாண்டு என்னும் தன்வினைக்குரிய பிறவினைச்சொல் தாட்டு என்பதாகும்.

பையனின் வேலை முடிந்ததும் இருக்குமிடத்திலிருந்து தாண்டிச் செல்ல வைப்பது. பெண்ணுக்கு மாப்பிள்ளை அமைந்ததும் பிறந்த வீட்டிலிருந்து தாண்டிச் செல்ல வைப்பது. இரண்டாம்பாத்திவரைக்கும் தண்ணீரைத் தாண்டச் செய்ய முடியுமா என்பது தெரியவில்லை.

மாளுதல் அல்லது மாண்டுதல், தாட்டுதல் ஆகிய சொற்கள் அகராதிகளில் இல்லை. மாளுதல் என்ற சொல் இருப்பினும் மக்கள் வழங்கும் நுண்ணிய பொருளில் காணப்படவில்லை. சங்கச் சொல்லடைவு அகராதியில் மட்டும் சாதல், அழிதல், கழிதல், இயலுதல் ஆகிய நான்கு பொருள்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அச்சொற்கள் யாவும் சொற்கள் இல்லையா? பேச்சுத் தமிழின் வினைச்சொல் வளம் அகராதிப் பெருமக்களின் பார்வையில் படாதது ஏன்? அச்சொற்கள் தாமாகவே இலக்கணத் தன்மைகளோடு வெளிப்பட்டுத் துல்லியமாகப் பொருளுணர்த்திப் பயன்பட்டு வருவதை யாரேனும் கண்டுணர்த்தினார்களா? ஆயிரம் கேள்விகள் எழுகின்றன. விடையில்லை.

(தொடரும்)


# நீங்களும் பத்திரிகையாளராக ஆசையா?

## தீபத்திற்கு எழுதுங்கள்...

## உங்கள் பிரதேச, சமூக, அரசியல், நிர்வாக மற்றும் பொது விடயங்கள் எதுவானாலும் எழுதுங்கள்...

இளையவர்களும் தயக்கமின்றி இணையுங்கள்

0768255562 0214927562 deepamdesk@gmail.com

பீஷ்மர்



# பிரபாகரனிற்கு அடைக்கலம் கொடுக்க சம்மதித்த ஆபிரிக்க நாடு!

பர்மாவின் மூலமாக புலிகளிற்கு ஆயுதம் வந்தது என கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். பர்மாவிற்கும் புலிகளிற்கும் இருந்த உறவை மோப்பம் பிடித்த அமெரிக்கா, பர்மாவிற்கு எப்படியான அழுத்தத்தை கொடுத்திருந்தது என்பதையும் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். சர்வதேச அழுத்தம் என்பது மிகப் பெரியது. பர்மா போன்ற சிறிய நாட்டிற்கு அதை எதிர்கொள்வது பெரிய விவகாரம். ஏற்கனவே பொருளாதார தடைகளால் வறுமையிலிருந்த பர்மாவிற்கு மேலும் அழுத்தங்கள் ஏற்பட, புலிகளை மெல்லமெல்ல கைவிட தொடங்கியது.

இறுதிவரை புலிகளிற்கும்பர்மா விற்குமான உறவு இருந்தது. ஆனால், ஏதாவது உதவிகள் செய்வதென்பது பர்மாவிற்கு முடியாமல் இருந்தது. புலிகளிற்கு உதவி, அமெரிக்காவுடன் வில்லங்கப்பட பர்மா தயாராக இருக்கவில்லை.

யுத்தத்தின் இறுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களை பர்மாவிற்கு அழைத்து வருவதை பற்றி புலிகளின் வெளிநாட்டு பிரிவினர் ஒரு திட்டம் தீட்டியதை பற்றி, இந்த தொடரில் சில மாதங்களின் முன்னர் குறிப் பிட்டிருந்தது வாசகர்களிற்கு நினை விருக்கலாம்.

பிரபாகரனிற்கு தெரியாமலேயே, விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் தீட்டிய திட்டம் அது. முள்ளிவாய்க்காலில் இருந்த பிரபாகரனை, இராணுவ முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியில் கொண்டு வருவது திட்டத்தின் முதற் கட்டம். இரண்டாம் கட்டம் அவரை




பர்மாவிற்கு அழைத்து வருவது.

முள்ளிவாய்க்காலிற்குள் புலிகளும், மக்களும் முடக்கப்பட்டிருந்த சமயத் தில், நந்திக்கடல் நீரேரி இரு தரப்பையும் பிரித்தது. இரண்டு தரப்பிற்குமே இது பலமான காப்பரண். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்த வருடம் நல்ல மழை பெய்து, குளங்கள் வான்பாய்ந்து அனேக கிராமங்கள் வெள்ளக்காடுகளாகியிருந்தன. பல வருடங்களின் பின்னர் இப்படியொரு கன மழை பெய்திருந்தது. இந்த வருடத்திற்கு முன்னதாக, அப்படி யொரு கனமழை இரண்டு மாவட்டங் களிலும் பொழிந்தது 2008ஆம் ஆண்டு. அப்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பொழிந்த மழையை விஞ்ஞானபூர்வமாக கணக்கெடுக்கும் பொறிமுறைகள் இருக்கவில்லை. யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. வானிலை அவதானிப்பு நிலையம் இயங்கவில்லை.

ஆனால் இப்படித்தான் குளங்கள் வான் பாய்ந்து, பல கிராமங்கள் வெள்ளக்காடுகளாகின. மக்கள் பேரவலத்தை சந்தித்தனர். இந்த மழையால் நந்திக்கடல் நீரேரி நிறைந்திருந்தது. அது ஒரு இயற்கையான காப்பரண் இரண்டு தரப்பிற்கும்.

நந்திக்கடல் நீரேரிக்குள்ளால் பிரபாகரனை அழைத்து சென்று, இராணுவ முன்னரணை கடந்து , பாதுகாப்பான பகுதியொன்றிற்கு அழைத்து சென்று, உலங்கு வானூர்தி யையோ அல்லது விமானத்தையோ பாவித்து அவரை இலங்கையிலிருந்து வெளியேற்றி பர்மாவிற்கு அழைத்து செல்லும் திட்டத்தை புலிகளின் வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் தீட்டினார்கள். இந்த திட்டத்தின் முதல்கட்டம் பிரபாகரனை இராணுவ முற்றுகைக்குள்ளால் வெளியேற்றுவது என்று குறிப்பிட்டிருந்தோம். இது குறித்த மேலதிக திட்டங்க் எதையும் இந்த பகுதியில் நாம் குறிப்பிடவில்லை. அதை, இந்த தொடரில் சம்பவ ஒழுங்கில் குறிப்பிடுகிறோம்.

இப்போது திட்டத்தின் இரண்டாம் கட்டமான வான் வழியாக பிரபா கரனை பாதுகாப்பாக பர்மாவிற்கு அழைத்து செல்லும் திட்டத்தை பற்றி ஏற்கனவே விபரமாக குறிப்பிட்டி ருந்தோம். அப்போது தவறவிட்ட வாசகர்களிற்காக மேலோட்டமாக சில தகவல்களை தருகிறோம்.

இராணுவ முன்னரணை கடந்து அழைத்து வரப்படும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை வான் வழியாக வெளிநாட்டில் பர்மா அடைக்கலம் தேட வைப்பதென்பதே திட்டம். இதற்காக பர்மாவுடன், விடுதலைப்புலிகளின் அப்போதைய வெளிநாட்டு பொறுப்பாளர்கள் சிலர் பேச்சு நடத்தினார். இந்த பேச்சை நடத்தியவர்கள் இப்பொழுதும் உயிரோடு இருக்கிறார்கள்.

இந்த திட்டத்திற்கு ஆரம்பத்தில் சம்மதித்த பர்மா, திடீரென பின்வாங்க தொடங்கியது. புலிகளின் முக்கியஸ தர்களிற்கு அடைக்கலம் கொடுத்தால், சர்வதேச நெருக்குவாரத்தை சந்திக்க வேண்டியிருக்குமென்பதாலேயே பர்மா பின்வாங்கியது.

இதையடுத்து, ஆபிரிக்க நாடொன் றுடன் புலிகளின் வெளிநாட்டு பிரமுகர்கள் பேசி, புலிகளின் முக்கியஸ்தர்களை அங்கு தங்க வைக்க ஏற்பாடு செய்தனர். இதன்பின்னரே, விடுதலைப்புலிகளின் சரணடைவு திட்டம் தயாரானது.

புலிகளின் வெளிநாட்டு பிரிவினர், முள்ளிவாய்க்காலில் முற்றுகையிலிருந்த அரசியல்துறை பொறுப்பாளர் நடேசன் மற்றும் சில தொடர்பாளர்கள், நாடுகள், அப்போதைய இலங்கை அரசின் தொடர்பாளர்கள் சிலர் சம்பந்தப்பட்ட விவகாரம் இது.

முற்றுகைக்குள் இருந்த அரசியல் துறை போராளிகளை இராணுவத்திடம் சரணடையவைப்பது என்றதிட்டத்தை நாடுகளிற்கும், தொடர்பாளர்களிற்கும் புலிகளின் வெளிநாட்டு பிரிவினர் வைத்தனர். அதில் புலிகளின் தலைவர்கள் சம்பந்தப்பட்ட விவகாரம் இருக்கவில்லை. இலங்கை தரப்பு தொடர்பாளர்களிற்கும் அதைப்பற்றி சொல்லப்படவில்லை. அது புலிகளின் (நன்றாக கவனிக்கவும் அரச தொடர்பாளர்கள், மற்றும் பேச்சில் சம்பந்தப்பட்ட மற்றைய தரப்பினர் அனைவரும், அது புலிகளின் திட்டம் என்றுதான் நினைத்திருந்தார்கள்) தனித்திட்டம்.

புலிகளில் ஒரு வழக்கமிருந்தது. தலையிருக்கவால் ஆடாது. அப்படி ஆட முயன்ற வால்கள் ஒன்றுமிருக்கவில்லை. ஆரம்பத்திலேயே நறுக்கி விடுவார்கள். அமைப்புக்குள், அமைப்புடன் தொடர்புடைய எந்த விடயமென் றாலும் சரி, எல்லாமே பிரபாகரன்தான். அவரது முடிவே இறுதியானது.

ஆனால், இந்த சரணடைவு, வெளிநாட்டில் அடைக்கலம் புகுவது எல்லாவற்றையும் திட்டமிட்டது புலிகளின் வெளிநாட்டு பொறுப்பாளர் களும், அரசியல்துறை மற்றும் சில முக்கியஸ்தர்களே.

பிரபாகரனுடன் அதைப்பற்றி ஆலோசிக்கவில்லை. இப்படியான ஆலோசனைகளை அவர் கேட்கவுமில்லை. இந்த கோணத்தில் அவர் சிந்திக்கவுமில்லை. அதனால், அவருடன் ஆரம்பத்திலேயே பேசி, விவகாரத்தை சிக்கலாக்காமல் இருப்பேமென்று நினைத்தோ என்னவோ, அவருக்கு சொல்லாமல் அனைத்தையும் திட்டமிட்டார்கள்.

எல்லாம் சரியென்ற பின்னர், திட்டத்தை பிரபாகரனிடம் கொடுத் தார்கள். புலிகளின் வெளிநாட்டு பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட கே.பிதான் அதை பிரபாகரனிற்கு அனுப்பினார்.

யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டி ருக்கும் சமயம்.

திட்டத்தை பார்த்து விட்டு, ஒரே யொரு வரியில் பிரபாகரன் பதில் அனுப்பினார். அந்த பதில் "இதை நான் நிராகரிக்கிறேன்"!

(தொடரும்)





# முதலிடத்தை பிடித்த இலங்கை கிரிக்கெட்!

உலகிலேயே இலங்கை கிரிக்கெட் வாரியம்தான் அதிக அளவில் ஊழல்கள் மலிந்த கிரிக்கெட் வாரியம் என்று ஐசிசி தரமதிப்பீடு கூறுவதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அதிர்ச்சித் தகவல் வெளியிட்டார்.

இது குறித்து அவர் கூறும்போது, "டுபாய் கூட்டத்தின் போது தன்னிடம் ஐசிசி இந்த இரகசிய அறிக்கையை காண்பித்தது, இலங்கை கிரிக்கெட் வாரியம் ரொப் டு பொட்டம் ஊழல் மிகுந்தது என்று ஐசிசி தரமதிப்பீடு செய்துள்ளது" என்றார்.

சில சூதாட்டம் புகார்களையடுத்து, ஐசிசி ஊழல் தடுப்பு அமைப்பு இலங்கை கிரிக்கெட் வாரியத்தை தொடர்ந்து விசாரித்து வரும் நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஹரீன் பெர்னாண்டோ இது குறித்து செய்தியாளர்களிடையே கூறும்போது, "கிரிக்கெட் ஊழலில் இலங்கை கிரிக்கெட் வாரியம் மிக மிக மோசமாகத் திகழ்கிறது என்று ஐசிசி மதிப்பிட்டுள்ளது துரதிர்ஷ்டமே. இது வெறுமனே புக்கிகளுடனான தொடர்புடன் நிற்பதல்ல. உள்ளூர் போட்டிகள் கூட நிழலுலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது" என்றார்.

2017 லீக் ஒன்றில் இலங்கை முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் தில்ஹாரா லொகுஹெட்டிகே ஊழல் குற்றச்சாட்டில் நீக்கப்பட்டார்.

இலங்கை முன்னாள் தலைமை அணித்தேர்வாளர் சனத் ஜெயசூரியா ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. முன்னாள் இடது கை வேகப்பந்து வீச்சாளர் நுவான் சொய்ஸா ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் நீக்கப்பட்டார்.

தவறு செய்தவர்கள் விவரங்களை அளித்து ஒப்புக் கொண்டால், ஐசிசி அவர்களை மன்னிக்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கை கிரிக்கெட்டில் மின்மினிதான் பறந்ததா?



நியூசிலாந்து அணியிடம் மெஹா உதை வாங்கி இந்த ஆண்டை இலங்கை அணி முடித்துள்ளது. நியூசிலாந்துடன் முதல் டெஸ்டில் மத்யூஸ், மெண்டிசின் அசாத்திய ஆட்டம்,கொஞ்சம் மழைகைகொடுக்க, போட்டியை சமப்படுத்தினார்கள். ஆனால் இரண்டாவது டெஸ்டில் வீரர்களும் சரி, இயற்கையும் சரி... இலங்கைக்கு கைகொடுக்கவில்லை. ஆகவே, மெஹா உதை கிடைத்தது. கடந்த ஐந்து டெஸ்ட் தொடர்களில் நான்கில் இலங்கைக்கு தோல்வி.

ஆனாலும், 2018 இலங்கை கிரிக்கெட்டுக்கு கொஞ்சம் புத்துயிர்ப்பான ஆண்டு என நம்பிக்கை தெரிவித்துள்ளார் டெஸ்ட் அணித்தலைவர் தினேஷ் சந்திமால்.

இலங்கைக்கு வெளியில் பங்களாதேஷுடன் தொடரை வென்றது. மேற்கிந்தியாவை சமப்படுத்தியது. உள்ளூரில் தென்னாபிரிக்காவை வென்றது. இவை இலங்கை கிரிக்கெட்டின் புதிய உத்வேகத்தின் அறிகுறிகள் என்கிறார் சந்திமால்.

அதேவேளை, அணியாக பெரியளவில் சாதிக்காவிட்டாலும், சில தனிப்பட்ட வீரர்கள் இந்த ஆண்டில் நல்ல பெறுபேற்றை பெற்றுள்ளனர். சுழற்பந்துவீச்சாளர் டில்ருவான் பெரேரா இந்த ஆண்டில் டெஸ்டில் 50 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இந்த ஆண்டில் தென்னாபிரிக்காவின் ரபாடா 52 வீழ்த்தி முதலிடத்தில் இருக்கிறார். பெரேராவிற்கு இரண்டாமிடம். இந்த பட்டியலில் அடுத்த இடத்திலுள்ள இலங்கையர் சுரங்க லக்மல். 21வது இடம். இந்த இடைவெளி இலங்கையணியால் எதிரணிக்கு வழங்கப்படும் பந்துவீச்சு தாக்கத்தின் பலவீனத்தை வெளிக்காட்டும்.


இந்த வருடத்தில் டெஸ்ட் போட்டிகளில் ஆயிரம் ஓட்டங்களை குவித்தவர்கள் இரண்டு வீரர்கள் மாத்திரமே. ஒருவர் இந்தியாவின் விராட் கோலி. மற்றவர் இலங்கையின் குஷல் மெண்டிஸ். 12 போட்டிகளில் 1023 ஓட்டங்களை பெற்றார். 46.50 என்ற சராசரியில், 3 சதம், 4 அரைச்சதத்தை பெற்றிருக்கிறார். இந்த வருடம் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் ஆறாவது இடத்தில் தொடக்க வீரர் திமுத் கருணாரட்ண இருக்கிறார். 9 போட்டிகளில் 743 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். பட்டியலில் 15வது இடத்தில் மத்யூஸ், 17வது இடத்தில் ரொசேன் சில்வா இருக்கிறார்கள்.

அதேநேரம் இலங்கை அணியின் ஒருநாள் பலவீனத்தையும் இந்த புள்ளிவிபரங்கள் காண்பிக்கின்றன. ஒருநாள் போட்டிகளில் ஈவிரங்கமில்லாமல் எதிரணிகளிடம் தோல்வியடைகிறது இலங்கை. கடந்த வருட துடுப்பாட்ட துடுப்பாட்ட புள்ளி விபரங்கள் படுமோசமாக உள்ளன. கடந்த வருடத்தில் அதிக ஓட்டங்களை பெற்றவர்கள் பட்டியலில் 38வது இடத்திலேயே இலங்கையின் டிக்வெல, திசர பெரேரா இடம்பெற்றுள்ளனர். இருவரும் 415 ஓட்டங்களை பெற்றனர். இந்த பட்டியலில் இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாவே, மேற்கிந்திய தீவுகள், ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வீரர்கள் இலங்கை வீரர்களை விட சிறந்த பேறுபேறுகளை பெற்றுள்ளனர். இலங்கையின் ஒருநாள் தோல்விகளிற்கான பிரதான காரணம் இதிலிருந்து புலப்படுகிறது.

இதேவேளை, இலங்கை அணியின் மூன்றாமிலக்க வீரர் யார் என்ற கவலையையும் கடந்த வருடம் அதிகப்படுத்தியுள்ளது. தனஞ்ஜெய டி சில்வா தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவில்லை. புதிய வீரர் ஒருவரை அடையாளம் காண வேண்டும்.


மொத்தத்தில் 2018ஆம் ஆண்டு அவ்வளவு நம்பிக்கை கொள்ளத்தக்க ஆண்டு அல்ல. இருண்டுள்ள இலங்கை கிரிக்கெட்டிற்குள் ஒரு மின்மினிதான் பறந்துள்ளது என்பதே உண்மை.



27
மூன்று கில்லாடிகள்!
கதை, படம்: ராஜே
முன்கதை: இரண்டாம் உலகப் போரின்போது, ஜெர்மன் மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கிடையே நடக்கும் மோதலில், பிரெஞ்சு விமானப் படையின் வீரனான ஹெலன், ஜெமனியின் தாக்குதலில் தப்பித்து, மீண்டும் படையில் இணைகிறான். அதேநேரம், தனது முன்கோபத்தால் சமையல்காரனாக பதவியிறக்கம் செய்யப்பட்ட கப்பல் படையின் ரிச்சர்டு (மூன்றாவது கில்லாடி), ஜெர்மனிக்கு எதிரான சண்டையில் மீண்டும் இணைகிறான்.
ஹேய் ரிச்சர்டு! உன்னை சீக்கிரம் டிஸ்மிஸ் பண்ணிடுவாங்க!
அமைதி காக்கணும்... சீண்டிப் பார்க்கிறாங்க!
கடலுக்குள் பயணிக்கத் தொடங்கியது, பிரெஞ்சுக் கப்பல். பிரெஞ்சு விமானங்களும் அதற்குப் பாதுகாப்பாக இறங்கின.
நண்பா, நாம் இணைந்து பணியாற்றும் காலம் விரைவில் வரும். அதுவரை இந்தப் போரில் நாம் நம் தனித்திறமையை வெளிக்காட்டுவோம்!
ஹேய் ரிச்சர்டு, காபி பிரமாதம்! நீ எல்லாவற்றிலும் திறமைசாலியா இருக்கே!
சமையற்காரனாகவே என் பணியைத் தொடர வேண்டுமா?
உனக்கான நேரம் வரும்!
ரிச்சர்டு சமையலறை ஜன்னல் வழியாக கடலைப் பார்த்தபோது, போர்க் கப்பல் அணிவகுத்து வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.
இதை முழுமையாக ரசிக்க முடியவில்லை. இந்த சமையல் வேலை எனக்குப் பிடிக்கவில்லை.
ரிச்சர்டு, உனக்கு ஒரு நற்செய்தி! போர் தொடங்கினால் பீரங்கி பிரிவுக்கு நீ மாற்றப்படுவாய். லிஸ்டில் உன் பெயர் முதலில் உள்ளது!
அப்படியா! மிக மிக மகிழ்ச்சியாக உள்ளது!
அதேவேளையில், ஜெர்மனியிலிருந்தும் போர்க் கப்பல்கள் புறப்பட்டன. மிகவும் வலிமையான கப்பல் படையாக ஜெர்மனி படை இருந்தது. பல்லாயிரக்கணக்கான கப்பற்படை வீரர்கள் அதில் இடம்பெற்றிருந்தனர்.
ஜெர்மனி விமானங்களில் சக்திவாய்ந்த குண்டுகள் நிரப்பப்பட்டன.
எரிபொருளும் குண்டுகளும் நிரப்பப்பட்டு, புறப்படத் தயாராயிருந்தது ஜெர்மனி வீரர்கள் விமானத்தைக் கிளப்ப விரைந்து வந்தனர்.
ஜெர்மனி போர் விமானங்கள், பிரெஞ்சு படைகளைக் குறிவைத்து விரைந்தது.
இம்முறை பிரெஞ்சு படைகளுக்குப் பலத்த சேதத்தை உருவாக்க வேண்டும்!
ஜெர்மனி விமானப் படையும் கப்பற்படையும் புறப்பட்டுவரும் செய்தி கிடைத்தது.
40 நாட்டிகல் மைல்களை, ஜெர்மனி கப்பல்கள் கடந்துவிட்டன.
பிரெஞ்சுக் கப்பல்கள், ஜெர்மனி கப்பல்களுக்குச் சரியானப் பதிலடி கொடுக்கத் திட்டமிட்டு பயணித்தன. அப்போது...
(தொடரும்...)





1 வட்டப் படத் துண்டுகளைப் பாருங்க... வெட்டப்பட்ட இடங்களில் எந்தெந்தப் படங்கள் வரும் கூறுங்க!

2 ஆறு ஆறு பூக்களை எடுத்துக்க... காலியான இடங்களில் தொடுத்துக்க... மேலிருந்து கீழ், வலமிருந்து இடம், ஒரே பூ வராமல் பார்த்துக்க!








5 கரடிக் குடும்பம் அவுட்டிங்கில் இருக்குது... அங்கே ஏழு வித்தியாசங்கள் தெரியுதா?



6 1 முதல் 43 வரை புள்ளிகளை இணைச்சுக்கோ... செல்லமான நண்பனை வாரி அணைச்சுக்கோ!

ஒரு படம்

# ரோய் ஸ்டோரி

சுட்டிகளுக்குப் பொம்மைகள் என்றால் மிகப் பிரியம்தானே. அந்தப் பொம்மைகளுக்கு உயிர் வந்தால் எப்படி இருக்கும் என்ற கற்பனை கதைதான் ரோய் ஸ்டோரி படத்தின் கதைக்கரு. இதற்கு முன்பு 3 பாகங்கள் வந்து ஹிட்டடித்த இந்த ரோய் ஸ்டோரி படங்களின் தொடர்ச்சியாக வெளிவரவிருக்கிறது 'ரோய் ஸ்டோரி 4'. ரோய் ஸ்டோரியின் முதல் இரண்டு பாகங்களை இயக்கிய ஜோஷ் கூலியே இந்தப் பாகத்தையும் இயக்குகிறார். இந்தப் படத்தை, பிக்ஸர் அனிமேஷன் ஸ்டுடியோஸ் தயாரிக்க, வோல்ட் டிஸ்னி வெளியிடுகிறது படம் 2019 ஜூன் வெளியாகிறது.

**மாணவச் செல்வங்களே...**

**உங்கள் திறமைக்கு தீபம் களம் அமைத்து தர தயாராக இருக்கிறது. உங்கள் ஆக்கங்களையும் எமக்கு அனுப்பி வையுங்கள். ஆக்கங்களுடன் உங்கள் படங்களையும் அனுப்பி வைக்கலாம்.**



முகவரி:

35/5, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்


மின்னஞ்சல்:


deepamdesk@gmail.com

## விடைகள்:

1 A-9, B-14, C-1, D-12, E-5


2 7-2, 8-4, 9-6, 10-3, 11-1, 12-5, 13-2, 14-4, 15-6, 16-2, 17-6, 18-5


3 


4 

5 




Nathan
key cutting center
அனைத்து வகையான திறப்புக்களையும்
10 நிமிடத்தில் மிசின் மூலம்
வெட்டி கொடுக்கப்படும்
இல 63, முட்டாஸ்கடைச் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 0776175609


KK Restaurant
Ac/Non Ac Rooms
Kumarakuru Bulding
No: 09,A9 Road, Anandapuram, Kilinochchi
Wedding Hall
Western Model
Full Comfortable
✓ Wedding Ceremony
✓ Puberty Ceremony
✓ Birthday Party
✓ Any other Party Ceremony
Email: kumarakuru.lk@gamil.com
Fb: KK Wedding Hall Kk Rest
T.P:
0776692184
0776024416
0772227025


HOTEL
LOVUSIYAH
Add:42,Clock TowerRoad,Jaffna.
Tel:0212221326,0212221327
Mob:0778210122
Web: www.hotellovusiyah.lk
Email:hotellovusiyah@gmail.com
Available AC/Non AC Rooms
Stanly Road
Clock Tower Road
Victoria Road
Jaffna Hospital
Power House Road
Jaffna Bustand

அனைத்து வைபவங்களை ஒரே கூரையின் கீழ் நடாத்திட...

# R.V. திருமண மண்டபம்
# R.V. பந்தல் சேவை




பூப்புனித நீராட்டுவிழா, பிறந்த நாள் வைபவங்கள், திருமண நிகழ்வுகளை நடாத்திட... R.V.திருமண மண்டபம், R.V.பந்தல் சேவை

நீங்கள் விரும்பிய முறையில் மணப்பந்தலை அமைத்து கொள்வதோடு, வீடியோ, புகைப்படம், மணப்பெண் அலங்காரம், ஐயர் ஒழுங்கு, ஆகிய வசதிகளை செய்து தருவதுடன் வாகன ஒழுங்குகள் மற்றும் உங்களுக்கு பிடித்த சைவ, அசைவ உணவு வகைகள் செய்து தரப்படும்.



இதே வேளையில் உங்களுக்கு பிடித்த
சிறுவர்கள் பெரியவர்களுக்கான
ஆடைகளை பெற்று கொள்ள...
R.V.புடவையகம்




அனைத்து தொடர்புகளுக்கும்
சொந்த முகவரி: விநாயகர் வீதி, மயிலிட்டி, யாழ்ப்பாணம்
தற்போதைய முகவரி: 369/6ம் யூனிட் தருமபுரம் பரந்தன், கிளிநொச்சி
தொலைபேசி: 0772881184, 0773239386

# Shivahami Wedding Hall
## சிவகாமி மஹால்

**எமது வசதிகள்**
நவீன வசதியுடன் கூடிய குளிரூட்டப்பட்ட மற்றும் குளிரூட்டப்படாத மண்டப வசதிகள், தேவைக்கேற்ப மண்டப, மணவறை அலங்காரங்கள்.

**உணவு விபரங்கள்**
உங்களின் தேவைக்கேற்ப உணவு விபரங்களை தெரிவு செய்ய முடியும். குளிர்பானங்கள், லட்டு, ஐஸ்கிறீம், பீடா போன்றவற்றையும் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளலாம்.

எமது மண்டபம் ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ளது.



Adiyapatham Road, Thirunelvely.
021 205 2288 / 0779326147
E-Mail: Sivakaamymahal@gmail.com
Web: WWW.Shivahamimahal.com

எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். சிறப்பான சேவையை பெற்றுக்கொள்ள எம்மை நாடவும்.

மிகச்சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்கு படுத்தல்கள், நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ் மண்ணில் ஆரம்பித்திருக்கின்றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக் கொள்ளுங்கள்.

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 06.01.2019 அன்று வெளியிடப்பட்டது.